Registered as a News Paper
பொழிவு - 15
குவிப்பு - 11
பக்கங்கள் - 16
விலை ரூபா 40.00
நவம்பர் 2012
(ISSN 1800-2641)

# மன்னா

MANNA மன்னார் மறைமாவட்டத்தின் தமிழ் கத்தோலிக்க மாதாந்தப் பத்திரிகை மன்னா
THE TAMIL CATHOLIC MONTHLY PUBLISHED BY THE DIOCESE OF MANNAR - Social Communication Centre, Manna Paper Office, St.Joseph's Road, Mannar, Sri Lanka.
Telephone No : 023-2250789/ 023 - 3233276 / 0777420811 Fax No - 023-2250789, E. Mail : nesanmnr@gmail.com.
"Registered in the Department of Posts of Sri Lanka under No. QD/ 159 / News / 2012"

## இயேசுவைப் பின்பற்றிச்சென்று இறையரசைப் பரப்புங்கள்!


### அன்பியங்களைக் கட்டியெழுப்புவதன் மூலம் அவருக்குப் பணிசெய்யுங்கள்!

# இலங்கையில் ஆறாவது அசிப்பா பொது மாநாடு

### 16 நாடுகளைச் சேர்ந்த அசிப்பா பிரதிநிதிகளான ஆயர்கள், குருக்கள், துறவியர், பொதுநிலையினர் என 150ற்கும் மேற்பட்டவர்கள் இம்மாநாட்டில் பங்கேற்றனர்

ஆறாவது அசிப்பா பொது மாநாடு கடந்த ஒக்ரோபர் மாதம் 18ம் திகதி தொடக்கம் 24ம் திகதி வரை சிலாப மறைமாவட்டத்தின் நயினாமடத்திலுள்ள சிந்தன நடுநிலையத்தில் நடைபெற்றது. 18ம் திகதியன்று நயினாமடம், வியாகுல அன்னை ஆலயத்தில் இலங்கைக்கான திருத்தந்தையின் பிரதிநிதி மேதகு பேராயர் ஜோசப் ஸ்பிற்ரேரி ஆண்டகை திருப்பலியை தலைமைதாங்கி ஒப்புக்கொடுத்து இம்மாநாட்டை வைபவ ரீதியாக ஆரம்பித்து வைத்தார். 16 நாடுகளைச் சேர்ந்த அசிப்பா பிரதிநிதிகளான ஆயர்கள், குருக்கள், துறவியர், பொதுநிலையினர் என 150ற்கும் மேற்பட்டவர்கள் இம்மாநாட்டில் பங்கேற்றனர்.

20ம் திகதி நடைபெற்ற ஒன்றுகூடலுக்கான பேருரையை இந்தியாவின் பூனே மறைமாவட்ட ஆயர் அதி மேதகு தோமஸ் தப்ரே அவர்களும், பணிகள் பற்றிய உரையை தென்னாபிரிக்காவில் சிறிய கிறிஸ்தவ குழுமங்களை (அன்பியங்களை) உருவாக்குவதில் முன்னோடியாகத் திகழ்ந்த தென் ஆபிரிக்காவின் அலிவள் மறை மாவட்ட ஓய்வுபெற்ற ஆயர் மேதகு ப்றிட்ஸ் லொபின்கர் அவர்களும் (Most. Rev. Fritz Lobinger, Bishop Emeritus of Alliwal, South Africa) நிகழ்த்தினர். இந்த மாநாட்டில் கலந்துகொண்ட அனைவரும் கிறிஸ்தவக் குழுமங்களை உருவாக்குவதில் தம் மறை மாவட்டங்களில் கடுமையாக உழைத்தவர்கள் ஆவர். (தொடர்ச்சி 9ஆம் பக்கம்)




## திருப்பாலர் சபையின் 25வது ஆண்டு வெள்ளி விழா

இலங்கை நாட்டின் திருப்பாலர் சபை ஆரம்பிக்கப்பட்டு 25வருட வெள்ளிவிழாக் கொண்டாட்டம் கார்த்திகை மாதம் 03, 04 ஆம் திகதிகளில் கிங்ராங்கொடையில் கொண்டாடப்படுகின்றது.

## விசுவாச ஆண்டு சிறப்புக் கட்டுரை




விசுவாச ஆண்டை முன்னிட்டு சிறப்புக்கட்டுரை பக்கம் 6இல் இடம்பெற்றுள்ளது.

## பாப்பரசருக்கு மின்சாரக் கார் அன்பளிப்பு



பாப்பரசர் 16 ஆம் ஆசீர்வாதப்பருக்கு வத்திக்கானிலும் அவரது கன்டொல்போ கோடை வாசஸ்தலத்திலும் உபயோகிப்பதற்காக மின்சாரக் காரொன்று அன்பளிப்பாக வழங்கப்பட்டுள்ளது.

கார் உற்பத்தி நிறுவனமான ரேனோல்ட் மேற்படி சுற்றுச்சூழல் நட்புறவுடைய வெள்ளை நிற கங்காரு காரை பாப்பரசருக்கு வழங்கியுள்ளது.

சுற்றுச்சூழல் தொடர்பில் அதிக கவனத்தை செலுத்துவதால் பாப்பரசர் 16 ஆம் ஆசீர்வாதப்பர் 'பச்சை பாப்பரசர்' என செல்லமாக அழைக்கப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது. இந்நிலையில் பாப்பரசருக்கு வழங்கப்பட்ட மேற்படி மின்சாரக் காரானது 44 கிலோவோட் மின்சார மோட்டாரையும் லிதியம் பற்றரியையும் கொண்டமைந்துள்ளது.

இந்தக் கார் மூலம் மீள் மின்னேற்றாமல் 170 கிலோமீற்றர் தூரம் பயணிக்க முடியும். அதேசமயம் வத்திக்கானின் பொலிஸ் படைக்கு நீல நிற சூரிய ஒளியில் இயங்கும் இரண்டாவது காரை ரேனோல்ட் கார் உற்பத்தி நிறுவனம் அன்பளிப்பாக வழங்கியுள்ளது.

### புதிய நற்செய்தி பணி குறித்து வத்திக்கானில் நடைபெற்றுவரும்

## 13வது உலக ஆயர் மாமன்றம்



"கிறிஸ்தவ விசுவாசத்தைப் பரப்புவதற்கான புதிய நற்செய்திப் பணி" என்ற தலைப்பில் ஒக்ரோபர் மாதம் 7ஆம் திகதி தொடக்கம் 28ஆம் திகதி வரை வத்திக்கானில் 13வது ஆயர் மாமன்றம் (Synod of Bishops) நடைபெறுகின்றது. இதில் 49 கர்தினால்கள், 7 கீழைரீதிச் சபைத் தலைவர்கள், 71 பேராயர்கள், 120 ஆயர்கள், 86 அருட்பணியாளர்கள், 9 வல்லுனர்கள், 27 பார்வையாளர்கள், 3 மொழிபெயர்ப்பாளர்கள் உட்பட 408 பேர் கலந்துகொள்கின்றனர். இதில் சென்னை மயிலைப் பேராயர் எம். சின்னப்பா ஆண்டகை, இலங்கையின் பதுளை மறைமாவட்ட ஆயர் வின்சன்ற் பெர்னாண்டோ ஆண்டகை என 39 பேர் ஆசியாவிலிருந்து கலந்துகொள்கின்றனர்.

## தேசிய கிறிஸ்தவ இலக்கிய விழா

கிறிஸ்தவ மத அலுவல்கள் திணைக்களம், புத்த சாசனம் மற்றும் மத அலுவல்கள் அமைச்சு இணைந்து நடத்திய தேசிய கிறிஸ்தவ இலக்கிய விழா கடந்த ஒக்ரோபர் 5ஆம் திகதி பி. ப. 2.30 மணிக்கு இலங்கை அத்திவார நிறுவன கேட்போர் கூடத்தில் நடைபெற்றது. நாடு தழுவிய ரீதியில் மறைக்கல்வி பிள்ளைகளுக்கு நடத்தப்பட்ட பல்வேறு போட்டிகளில் வெற்றியீட்டிய மாணவர்களுக்கு பரிசில்களும் சான்றிதழ்களும் வழங்கப்பட்டன. அத்துடன் கிறிஸ்தவ இலக்கியப் பாடல்களுக்கு பங்களிப்பு செய்தவர்களும் இந்நிகழ்வில் கௌரவிக்கப்பட்டனர்.

## நீத்தாரை நினைக்கும் நவம்பர் மாதம்





இறந்த ஆன்மாக்களை சிறப்பாக நினைவுகூர்ந்து செபிக்கும் மாதம் நவம்பர் மாதம்.

நீத்தாரை நெஞ்சங்களில் நிலைநிறுத்தி செபிப்போம்.

### உள்நாட்டு வெளிநாட்டு சந்தாதாரர்களே!

உங்களுக்கு தபால் மூலம் அனுப்பப்படும் மன்னா பத்திரிகையின் முகவரிக்குக் கீழே உங்கள் சந்தாக் காலம் குறிக்கப்பட்டுள்ளது. அதைப் பார்த்து உரிய காலத்தில் உங்கள் சந்தாவைப் புதிப்பித்துக்கொள்ளுங்கள். சந்தாவை புதிப்பிக்காதவர்களுக்கான பத்திரிகையை எதுவித முன்னறிவித்தலும் இன்றி நிறுத்திவிடுவோம் என்பதை வருத்தத்தோடு அறியத்தருகின்றோம்.

- மன்னா நிர்வாகம்

## மன்னார் ஆயர் இல்லத்தில் குருக்களுக்கான வதிவிட இல்லம்



மன்னார் ஆயர் இல்லத்தில் குருக்களுக்கான வதிவிடக் கட்டிடம் ஒன்று கடந்த ஒக்ரோபர் 20ஆம் திகதி மன்னார் ஆயர் மேதகு இரா. யோசேப்பு ஆண்டகை அவர்களால் ஆசீர்வதித்து திறந்துவைக்கப்பட்டது. (அன்றைய நாள் ஆயர் அவர்களின் ஆயர் திருநிலைப்படுத்தலின் 20வது ஆண்டு தினமுமாகும்) 20 அறைகளைக் கொண்ட இந்தக் கட்டிடத்தின் நான்கு மூலைகளிலும் பெரிய அறைகள் அமைந்துள்ளன. குருக்கள் இளைப்பாறும் காலத்தை அடையும்போது அவர்கள் தங்குவதற்கு ஏற்ற இல்லமாகவும் இது பயன்படும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மன்னா
## மனப்பொழிவு
### பதிப்பாசிரியர் பகர்வது

## விசுவாச ஆண்டு

*உலகளாவிய திருச்சபையில் விசுவாசம் புதிப்பிக்கப்படவும், புத்துயிர் பெறவும் வேண்டி திருத்தந்தை 16ஆம் பெனடிக்ற் 11.10.2012 - 24.11.2013 (அனைத்துலக அரசராம் இயேசுக்கிறிஸ்துவின் பெருவிழா) வரையான காலப்பகுதியை 'விசுவாச அண்டாக' (The Year of Faith) பிரகடனப்படுத்தியுள்ளார். மேலும் இவ்வாண்டு இரண்டாம் வத்திக்கான் சங்கம் ஆரம்பித்ததன் 50ஆம் ஆண்டு நிறைவும், கத்தோலிக்க திருச்சபையின் மறைக்கல்வி ஏடு வெளியிடப்பட்டதன் 20வது ஆண்டு நிறைவும் சிறப்பிக்கப்படுகின்றது. இவ்விரண்டு நிகழ்ச்சிகளும் சமகால திருச்சபையின் புதுப்பித்தலில் மிக முக்கியமானவையாகும்.*

*இரண்டாம் வத்திக்கான் சங்கப் படிப்பினைகளின்படி விசுவாச மறுமலர்ச்சியை நோக்கி நாம் செல்லவேண்டும் என்பதையே இவ்வருடத்தில் திருத்தந்தை விரும்புகின்றார். வாழும் பாரம்பரியத்தின் அடிப்படையில் தொடர்ச்சியான விசுவாச வளர்ச்சியை எடுத்துக்காட்டும் விதத்தில் இரண்டாம் வத்திக்கான் சங்கப் படிப்பினைகள் விளக்கப்படவேண்டும் எனவும் திருத்தந்தை எதிர்பார்க்கின்றார். ஆகவே இந்த விசுவாச ஆண்டில் சங்கப் படிப்பினைகளை மீள ஆய்வுசெய்து அவற்றை முறையாக நடைமுறைப்படுத்த வேண்டும். ஏனெனில் இரண்டாம் வத்திக்கான் சங்கம் ஓர் புதிய ஆரம்பம் அல்ல, மாறாக இரண்டாயிரம் வருடங்களாக எமக்குத் தரப்பட்ட திருச்சபையின் விசுவாசத்தை எடுத்தியம்ப எமக்குத் தரப்பட்ட ஓர் புதிய ஆர்வமும், ஊக்கமுமே ஆகும் என்கிறார் கர்தினால் மல்கம் றஞ்சித் ஆண்டகை (கொழும்பு உயர் மறைமாவட்ட நம்பிக்கை ஆண்டிற்கான சுற்றுமடல்).*

*திருத்தந்தை அவர்கள் தனது பணியில் தொடக்கத்தில் திருச்சபையின்முன்னே வைத்த அழைப்பு இவ்விசுவாச ஆண்டிற்கும் பொருத்தமான அழைப்பாகும், "முழுத்திருச்சபையும், அதன் எல்லா ஆயர்களும் கிறிஸ்துவைப்போல மக்களை பாலைநிலத்திலிருந்து வாழ்வளிக்கும் இடத்திற்கு இட்டுச்செல்ல வேண்டும். இறைமகனுடனான நட்புறவை நோக்கிச் செல்ல வேண்டும். வாழ்வளிப்பவரும், வாழ்வை முழுமையாகத் தருபவருமானவரை நோக்கிச் செல்லவேண்டும்" (மறையுரை 24.04.2004).*

*திருத்தந்தை 'நம்பிக்கையின் வாசல்' (Porta Fidei) என்னும் தனது திருத்தூது மடலில் கடவுளுடனான உறவு ஒன்றிப்பிற்கு நாம் தொடர்ந்து வரவேண்டும் என்பதை எடுத்துரைப்பதோடு, அவரில் ஆழ்ந்த விசுவாசத்தை ஏற்படுத்திக் - கொள்ளவும், அவரை அறிந்து, அன்புசெய்து, அவருக்கு சேவை புரிய நாம் நம்மை அர்ப்பணிக்கவேண்டுமெனவும் கேட்டு நிற்கின்றார்.*

*நாம் பெற்றுக்கொண்ட விசுவாசத்தை ஏனோ தானோ என்ற மனநிலையில் கடைப்பிடிக்க முடியாது என திருத்தந்தை எச்சரிக்கின்றார். உலகியல் மயமாக்கல் மற்றும் சமய எதிர்ப்புச் சக்திகள் மிகுந்து காணப்படும் இவ்வுலகில் விசுவாசம் என்னும் கொடையை தொடர்ந்து பாதுகாப்பது எமது கடமையாகும். புனித பவுலடிகளாரும் இதை ஆணித்தரமாக பின்வருமாறு எடுத்துரைக்கின்றார். "இந்த உலகத்தின் போக்கின்படி ஒழுகாதீர்கள். மாறாக, உங்கள் உள்ளம் புதுப்பிக்கப்பெற்று மாற்றம் அடைவதாக! அப்போது கடவுளின் திருவுளம் எது என்பதை தேர்ந்துகொள்வீர்கள். எது நல்லது, எது உகந்தது, எது நிலையானது என்பதும் உங்களுக்கு தெளிவாகத் தெரியும்" (உரோ.12:2).*

*விசுவாச ஆண்டு அருளின் காலமாகவும், அர்ப்பணத்தின் காலமாகவும் அமையும் என்றும் முழு மனதுடன் கடவுளிடம் திரும்பி வந்து அவரில் கொண்டுள்ள விசுவாசத்தை ஆழப்படுத்தும் காலமாக அமையும் என்றும் திருத்தந்தை குறிப்பிட்டுள்ளார். அருளின் காலமாகிய இந்த ஆண்டில் எமது விசுவாசத்தை ஆழப்படுத்துவோமா?*

***மீண்டும் மறுமடலில் வந்து சந்திக்கும்வரை***
***அன்புடன் அருட்பணியாளர் தமிழ் நேசன்***
***மன்னா பதிப்பாசிரியர்***

## எழுத்தாளர் எஸ். ஏ. உதயனுக்கு மேலும் இரண்டு தேசிய விருதுகள்



கடந்த 2008ல் இருந்து ஒவ்வொரு வருடமும் இலக்கியதுறையில் பல்வேறு விருகளை எழுத்தாளர். எஸ். ஏ. உதயன் பெற்று வருவது வாசகர்கள் அறிந்ததே.

தமிழியல் விருதுகள், இலங்கை இலக்கியப் பேரவை விருதுகள், வடமாகாண சிறந்த நூல் விருதுகள், மற்றும் இலங்கை அரச இலக்கிய சாகித்திய விருதினையும் இவர் பெற்று மன்னார் மண்ணுக்குப் பெருமை சேர்த்துள்ளார்.

கடந்த பல வருடங்களாக சிங்கள இலக்கியவாதிகளே பெற்றுவந்த கொடகே தேசிய சாகித்திய விருதினை முதன்முறையாக எஸ். ஏ. உதயன் அவர்கள் சென்ற 06.09.2012 அன்று கொழும்பு ஜோன் டி சில்வா அரங்கில் தேசபந்து கொடகே அவர்களினால் பெற்று சாதனையாளரானார்.

தொடர்ந்து 30.09.2012 அன்று அரச இலக்கிய சாகித்திய விருதினை இரண்டாம் முறையாக இவர் பெற்றுள்ளார்.

தொடர்ந்து இந்த வருடத்திற்கான இலங்கை இலக்கியப் பேரவை விருதிற்கும், வடமாகாண சிறந்த நூல் விருதிற்கும் திரு. எஸ். ஏ. உதயனின் பெயரே பேராசிரியர்களாலும், ஆய்வாளர்களாலும் பரிந்துரைக்கப்பட்டுள்ளது.

இவ்வாறு மன்னார் மாவட்டத்திலும், வடக்கிலும் அதிக விருதுகளைப் பெற்றவர் எழுத்தாளர் எஸ். ஏ. உதயனே ஆவார்.

அத்தோடு 1998ம் வருடத்திற்கான சிறந்த நாடக நெறியாளருக்கான ஜனாதிபதி வழங்கும் ஆனந்த கீர்திக்கா விருதினையும் எஸ். ஏ. உதயனே பெற்றிருந்தார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

## குறுநாடக ஆக்கப் போட்டியில் தேசிய ரீதியில் முதலாமிடம்

அகில இலங்கை தேசிய மட்டத் தமிழ் மொழித்தினப் போட்டி – 2012 இல் பேசாலை மன். பற்றிமா ம.ம.வி ஐச் சேர்ந்த செல்வி தா. அமல செபஸ்ரி அவர்கள் நான்காம் பிரிவிற்கான குறுநாடக ஆக்கப் போட்டியில் முதலாம் இடத்தைப் பெற்றுள்ளார். இவரை மன்னார் வலயக்கல்விப்பணிமனை, வலயக் கல்விப் பணிப்பாளர் எம். எம். சியான். உதவிக் கல்விப் பணிப்பாளர் (தமிழ்), பி. பி. எம். வி. லெம்பேட் ஆகியோர் வாழ்த்தி நிற்கின்றனர்.

## மன்னார் மறைமாவட்டம்

### திருவழிபாட்டு நாட்காட்டி – 2012

### மார்கழி

03 - தூய சவேரியார் திருவிழா - கீளியன் குடியிருப்பு, புளியங்குளம்
- மன்னார் தூய சவேரியார் ஆண்கள், பெண்கள் கல்லூரிகளின் விழா
- யாழ் தூய சவேரியார் பெரிய குருமட விழா

06 - தூய நீக்கிலாஸ் திருவிழா - பட்டித்தோட்டம்


08 - தூய கன்னிமரியாளின் அமல உற்பவம் - கடன்திருநாள்
- தூய வெற்றிநாயகி திருவிழா - பேசாலை
- அ.ம.தி. குருக்களின் திருவிழா
- அமலோற்பவமாதா அருட்சகோதரிகளின் விழா

13 - தூய லூசியா திருவிழா - பள்ளிமுனை

25 - இயேசு பிறப்பு பெருவிழா - கடன்திருநாள்

30 - திருக்குடும்பத் திருநாள்

### உண்மை உறைக்கும் கமிலஸ்




(நன்றி - தி மெசஞ்சர்)

### அமதிகள் மறையுரைஞர் குழுமத்தின் ஏற்பாட்டில்
## குருக்கள், துறவிகளுக்கான புதுப்பித்தல் நிகழ்வுகள்

வவுனியாவிலுள்ள அமதிகள் மறையுரைஞர் குழுமத்தினால் குருக்கள், துறவியருக்கான புதுப்பித்தல் நிகழ்வுகள் ஒழுங்குசெய்யப்பட்டு வருகின்றன. கடந்த புரட்டாதி மாதம் 15ம் திகதி வவுனியாவிலுள்ள அமதிகளின் மறையுரைஞர் இல்லத்தில் துறவிகளுக்கான முதல் ஒன்றுகூடலும் புதுப்பித்தல் நிகழ்வும் இடம்பெற்றது. இதனை அருட்பணி. எஸ். எம். செபஸ்ரியான் அ.ம.தி, அருட்பணி ஸ்ரனி அன்ரனி அ.ம.தி நெறிப்படுத்தி வழிநடத்தினார்கள். ஐப்பசி மாதம் 8ம் திகதி குருக்களுக்கான புதுப்பித்தல் நிகழ்வு இடம்பெற்றது. இதனை யாழ் மறைமாவட்டத்தைச் சேர்ந்த அருட்பணி ம. ரவிச்சந்திரன் அடிகளார் நெறிப்படுத்தினார். இன்னும் விசுவாச ஆண்டில் குருக்கள் துறவிகளுக்கான புதுப்பித்தல் நிகழ்வு ஐப்பசி மாதம் 29ம் திகதி மன்னார் ஞானோதயத்தில் நடைபெறவுள்ளது. இத்தகைய புதுப்பித்தல் நிகழ்வுகளுக்குப் பொறுப்பாக மறையுரைஞர் குழும முதல்வர் அருட்பணி. ஸ்ரனி அன்ரனி அ.ம.தி செயற்பட்டு வருகின்றார்.

## புலமைப் பரிசில் பரீட்சையில் மடு வலயத்தில் மன்/ அடம்பன் ம. ம. வி முதலிடம்



2012ஆம் ஆண்டு இடம்பெற்ற தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சையில் மன்/ அடம்பன் ம. ம. வி. ஐச் சேர்ந்த செல்வன் லீ. லீனஸ் சியாம் என்பவர் 161 புள்ளிகளைப் பெற்று மடு வலயத்தில் 1ம் இடத்தினையும் செல்வன் கி. ஜேர்ட் மியூலர் என்பவர் 156 புள்ளிகளைப் பெற்று வலயத்தில் 2ம் இடத்தினையும் பெற்றுக்கொண்டதுடன் செல்வி ப. நிறோஜினி என்பவர் 149 புள்ளிகளையும் பெற்று சித்தியடைந்துள்ளனர். இப்பாடசாலையில் மூன்று மாணவர்கள் சித்தியடைந்ததையும் ஆசிரியர், அதிபர் ஆகியோரின் ஆயத்த முயற்சியையும் இப்பாடசாலைச் சமூகம் நன்றியுடன் நினைக்கின்றது. புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களுடன் வகுப்பாசிரியர், அதிபர், பிரதி அதிபர் என்பவர்களையும் படத்தில் காணலாம்.

## அகில இலங்கை ரீதியான நாடக எழுத்துப் போட்டியில் நான்காமிடம்



கொழும்பு றோயல் கல்லூரியின் தமிழ் நாடக மன்றம் நடாத்திய நாடக எழுத்துப்போட்டியில் மடு வலயத்தின் வெள்ளாங்குளம் மன்/ மூன்றாம் பிட்டி அ. த. க. பாடசாலை அதிபர் திரு. லதிஸ்லாஸ் அமலானந்தகுமார் அவர்கள் அகில இலங்கை ரீதியில் 4ம் இடத்தைப் பெற்றுள்ளார். 'மன்னிப்போம் மறப்போம்' என்ற தலைப்பிலான இந்த நாடகப் பிரதிக்கு பணப்பரிசும், கேடயமும், சான்றிதழும் இவருக்கு வழங்கப்பட்டன.

## அருட்பிரகாசம் அடிகளார் அதிபர் சேவை பரீட்சையில் சித்தி



மன்னார் மறை மாவட்டத்தைச் சேர்ந்த அருட்திரு. மா. க. அருட்பிரகாசம் அவர்கள் இலங்கை அதிபர் சேவை வகுப்பு 2 தரம் II இற்கு நியமனம் பெற்றுள்ளார். கடந்த ஒக்ரோபர் மாதம் 2ஆம் திகதி ஜனாதிபதி மாளிகையில் நடைபெற்ற வைபவத்தில் இந்த நியமனம் வழங்கப்பட்டது. இத்தகைய நியமனம் பெற்றுள்ள முதலாவது மறைமாவட்டக் குரு இவர் என்பது குறிப்பிடத்தக்கது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அருட்பணி வின்சன்ற் பற்றிக் அடிகளாரை இயக்குனராகக்கொண்டு இயங்கும்

# திருப்புமுனை புதுவாழ்வகத்தினர் செய்யும் பணி அளவிட முடியாதது!

## சிற்றாலயத் திறப்புவிழாவில் வினோ எம்.பி.



தவறு என்பது எல்லா மனிதர்களும் தெரிந்தும் தெரியாமலும் செய்கின்றதொரு பழக்கம். அந்த வகையிலே தெரிந்து செய்தாலும் தெரியாமல் செய்தாலும் சில தவறுகள் சட்டத்தின்முன் தண்டிக்கப்படுவதும் மனிதாபிமானத்தின்முன் திருத்தப்படுவதும் வாழ்வின் ஒரு பக்கமாக உள்ளது என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் கௌரவ எஸ். வினோ நோகராதலிங்கம் தெரிவித்தார். மன்னார் தோட்டவெளியில் புதிதாக அமைக்கப்பட்ட திருப்புமுனை சிற்றாலயத் திறப்பு விழா கடந்த செப்ரம்பர் மாதம் 11ஆம் திகதி இடம்பெற்றபோது அதில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே இவ்வாறு தெரிவித்தார். அவர் தொடர்ந்து உரையாற்றுகையில் கூறியதாவது.

அருட்தந்தையர்களின் இந்த முயற்சி மன்னார் மாவட்டத்தில் பல்வேறு வழிகளில் நெறிதவறிய பிரஜைகளுக்கு புதிய வழியைக் காட்டியுள்ளது. சமுதாயத்தினால் ஒதுக்கப்படுகின்ற கட்டம் வருகின்றபோது அவர்கள் திருத்தப்பட்டவர்களாக மீண்டும் சமுதாயத்தோடு இணைக்கப்படுகின்றார்கள். மதுபோதைக்கு அடிமையாகின்றவர்களுக்கு புதிய வாழ்வை வழங்குகின்ற இந்தப் பாரிய பணியை அருட்தந்தையர்களும் ஏனைய பணியாளர்களும் சிறப்பாக செய்துவருகின்றமை எமக்கு நன்றாகத் தெரியும்.

எனது நண்பர் ஒருவர்கூட மதுவுக்கு அடிமையாக இருந்தார். கடந்த 2 வருடங்களுக்கு முன்பாக அவரைப் பிடிப்பதற்கு திருப்புமுனை புதுவாழ்வக பணியாளர்களும் அதன் இயக்குனரும் முயற்சி செய்தனர். ஆனால், அவர் ஒளிந்து திரிந்தார். பின் குறித்த நண்பர் இந்த மையத்திற்கு வந்தபின் இப்போது நல்ல மனிதராகவும் சமுதாயத்தில் ஒரு திருந்திய மனிதராகவும் வாழ்ந்து வருகின்றார். இந்த மையமானது நிரந்தரமாக தங்கி இருக்கின்ற இடம் இல்லை. இங்கு வருகின்றவர்கள் தமது மாற்றத்தின்பின் திரும்பிச் செல்ல வேண்டிய நிலை உள்ளது. எனவே இங்கே வருகின்றவர்கள் மீண்டும் வீட்டிற்குச் செல்கின்றபோது ஆன்மீக ரீதியாகவும் தங்களைக் குணப்படுத்திச் செல்வதற்கு இந்தத் திருப்புமுனைச் சிற்றாலயம் அவசியமான ஒன்றாகும் என்றார்.

# பொன் விழாக் காணும் அருட்சகோதரி டொமினிக்

மன்னார் மறைமாவட்டத்தின் துள்ளுகுடியிருப்பு கிராமத்தில் அமைந்துள்ள டொமினிக்கன் கன்னியர் மடத்தில் வசித்துவரும் அருட்சகோதரி டொமினிக் திருச்செல்வம் அவர்கள் கடந்த செப்ரம்பர் மாதம் 26ஆம் திகதி தனது துறவற வாழ்வின் 50 ஆண்டுகள் நிறைவு யூபிலி நன்றித் திருப்பலியை இக்கன்னியர் இல்லத்தில் ஒப்புக்கொடுத்தார். மன்னார் ஆயர் மேதகு இரா. யோசேப்பு ஆண்டகையின் நெருங்கிய உறவினரான இச்சகோதரியின் யூபிலி நன்றித் திருப்பலியை ஆயர் அவர்களே ஒப்புக்கொடுத்தார்.

யாழ்ப்பாணம் நெடுந்தீவைப் பிறப்பிடமாகக் கொண்ட அருட்சகோதரி டொமினிக் திருச்செல்வம் கடந்த ஆவணி 4ம் திகதி தன்னுடைய பொன்விழாவை பன்னிப்பிட்டியாவிலுள்ள கிறிஸ்து அரசர் ஆலயத்தில் இறைவனுக்கு நன்றித் திருப்பலியாக ஒப்புக்கொடுத்து கொண்டாடினார்.

இவர் 1939ம் ஆண்டு யூன் 10ம் திகதி நெடுந்தீவில் திருச்செல்வம் தம்பதியினருக்கு மகளாகப் பிறந்தார். இவர் சாமிநாதர் துறவற சபையில் (Congregation of Dominican Sisters of St. Catherine of Siena) இணைந்து 1962ம் ஆண்டு யூலை 26ம் திகதி துறவியானார்.

அருட்சகோதரிகளின் உருவாக்கத்தில் ஆர்வமுடன் ஈடுபட்ட இவர், மலையகத் தோட்டப்பகுதி மக்களுடன் அன்பும், பரிவும் கொண்டு அவர்களின் தேவைகளில் உதவுவதில் ஆர்வம் காட்டினார். பாகிஸ்தான் நாட்டில் 14 வருடங்கள் கல்விப் பணியிலும் ஈடுபட்டார். இவ்வாறாக சாதி, மத, இன வேறுபாடின்றி தன்னுடைய துறவற வாழ்வில் அர்ப்பணிப்புடன் செயற்பட்டார்.



இறுதியாக மன்னார் மறைமாவட்டத்தில் துள்ளுகுடியிருப்பில் யுத்தத்தால் பாதிப்புற்ற, தாய் தந்தையை இழந்த சிறுவர்களின் எதிர்காலத்தை வளமாக்க ஒரு இரக்கத்தின் இல்லத்தை மறைமாவட்டத்தின் ஒத்துழைப்போடு அமைத்து அவர்களுக்காகப் பணிபுரிந்தார். இவரையும் இவரோடு இணைந்த சகோதரியையும் வாழ்த்தி இறையாசீர் வேண்டி நிற்கிறோம்.

- டொமினிக்கன் அருட்சகோதரிகள், துள்ளுகுடியிருப்பு

## கிளறிசியன் சபையில் மூன்று திருத்தொண்டர்கள்
### இருவர் மன்னார் மைந்தர்கள்

கிளறிசியன் துறவற சபையைச் சார்ந்த மூன்று அருட்சகோதரர்கள் கடந்த 27.09.2012 அன்று காலி மறைமாவட்ட ஆயர் வண றேமன் விக்கிரமசிங்க அவர்களால் திருத்தொண்டர்களாக திருநிலைப் - படுத்தப்பட்டார்கள்.

சந்தான் ஜெகநாதன், (முருங்கன், சிறுக்கண்டல்), சுதேஸ் டனுஸ்க சில்வா, (குருநாகல், நெல்கமுவ) அந்தோனி சூசை நாயகம் கொடுதோர் (முருங்கன், கற்கடந்தகுளம்) ஆகியோரே தியாக்கோன்களாக திருநிலைப்படுத்தப் - பட்டவர்களாவர். நீர்கொழும்பு கிளறிசியன் சிறிய குருமடம் கட்டுவையில் இத்திருப்பொழிவு இடம்பெற்றது.

இவர்களின் பணி வாழ்வு சிறக்க இவர்களை வாழ்த்தி இவர்களுக்காக மன்றாடுவோம்.

## மன்னார் சிறிய குருமடத்தில் இருந்து குருத்துவப் பயிற்சிக்காக செல்லும் மாணவர்கள்

மன்னார் மறைமாவட்டத்தின் மடுமாதா சிறிய குருமடத்தில் தமது பயிற்சியை நிறைவுசெய்த 4 மாணவர்கள் தமது உயர் குருத்துவக் கல்வியை ஆரம்பிக்கும்பொருட்டு களுத்துறை குருமடத்திற்குச் செல்லுகின்றனர். றொ. ஜெயராஜ் (சிறுநீலாசனை), ச. லுமன் லோகு (பேசாலை), அ. அன்ரனி (பிச்சைகுளம்), யே. யேசுபரநாதன் (வஞ்சியன்குளம்) ஆகியோரே களுத்துறை செல்லும் மாணவர்கள் ஆவர். கடந்த ஒக்ரோபர் மாதம் 17ஆம் திகதி இவர்கள் கழுத்துறை குருமடத்தில் இணைந்துகொண்டனர். கடந்த ஒக்ரோபர் 14ஆம் திகதி மன்னார் சிறிய குருமடத்தில் இவர்களுக்கான பிரியாவிடை நிகழ்ச்சி இடம்பெற்றது.

உயர் குருத்துவக் கல்லூரியில் குருத்துவக் கல்வியை (மெய்யியல், இறையியல்) ஆரம்பிப்பதற்கு முன்னர் அனைத்து மறை மாவட்டங்களின் சிறிய குருமடங்களிலிருந்து ஆங்கில உள்நுழைவுப் பரீட்சையில் (English Entrance Exam) சித்திபெறும் மாணவர்கள் களுத்துறையில் அமைக்கப்பட்டுள்ள இடைநிலை குருமடத்தில் (Intermediate Seminary) வைத்து ஒரு வருடமளவில் பயிற்சி வழங்கப்பட்டு பின்னர் உயர் குருத்துவக் கல்லூரிக்கு அனுப்பப்படுகின்றார்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

கிறிஸ்தவ மதகுருக்கள் தொடர்பான எம்.பியின் உரைக்கு

# மன்னாரில் கண்டனத் தீர்மானம்

பாலியல் துஷ்பிரயோகம் தொடர்பில் கிறிஸ்தவர்களையும் தொடர்புபடுத்தி நாடாளுமன்றத்தில் தமிழ் தேசியக் கூட்டமைப்பின் உறுப்பினர் சுமந்திரன் ஆற்றிய உரையைக் கண்டித்து மன்னார் நகர சபையில் கண்டனத் தீர்மானமொன்று நிறைவேற்றப்பட்டுள்ளது.

மன்னார் நகர சபையின் மாதாந்தக் கூட்டம் கடந்த ஓகஸ்ட் மாதம் 28ஆம் திகதி இடம்பெற்றபோது குறித்த தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

கடந்த ஓகஸ்ட் 1 ஆம் திகதி நாடாளுமன்றத்தில் இலங்கை தமிழரசுக்கட்சியின் தேசியப் பட்டியல் நாடாளுமன்ற உறுப்பினர் சுமந்திரன் பாலியல் துஷ்பிரயோகம் தொடர்பில் உரையாற்றினார். அவரது உரையில் மதத்தலைவர்களும் பாலியல் குற்றச்சாட்டுக்களுடன் தொடர்புடையவர்கள்தான் என்றும், கிறிஸ்தவ மதத்தலைவர்களும்கூட பலியல் குற்றச்சாட்டில் ஈடுபட்டே உள்ளனர் என்று சாரப்படவும் கூறியிருந்தார். அவரது இந்த உரைக்கே மன்னார் நகர சபையின் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் உறுப்பினர் மெரினஸ் பெரேரா கண்டனத் தீர்மானமொன்றை முன்மொழிந்தார்.

குறித்த கண்டனத் தீர்மானத்தை மன்னார் நகர சபையின் தலைவர், உபதலைவர், ஆளுந்தரப்பு, எதிர்த்தரப்பு உறுப்பினர்கள் ஏகமனதாக ஏற்றுக்கொண்டு நிறைவேற்றினர்.

கத்தோலிக்க அமைப்பான வரோட் நிறுவனத்தின் ஏற்பாட்டில்

## மாற்றுத் திறனாளிகளுக்கான நிகழ்வுகள்

மாற்றுத் திறனாளிகளின் நலனுக்காக உழைத்துவரும் கத்தோலிக்க அமைப்பான வரோட் நிறுவனத்தின் வருடாந்த விளையாட்டு, கண்காட்சி மற்றும் கலை இலக்கியப் போட்டிகள் கடந்த செப்ரம்பர் மாதம் 7ஆம் 8ஆம் திகதிகளில் வவுனியா பம்பைமடு வளாகத்தில் உள்ள விளையாட்டு மைதானத்தில் நடைபெற்றன. மாற்றுத் திறனாளிகளின் திறமைகளை வெளிக்கொணர்ந்து அவர்களுக்கான சம வாய்ப்பு மற்றும் உரிமைகளை முன்னிலைப்படுத்தி சமூகத்தில் அவர்களுக்கான சுய கௌரவத்தை உறுதிப்படுத்துவதே இதன் பிரதான நோக்கமாகும்.

அன்றைய நாள் மாலை நிகழ்வில் மன்னார் மறைமாவட்ட ஆயரும் வரோட் அமையத்தின் போஷகருமான கலாநிதி இராயப்பு யோசேப்பு ஆண்டகை கலந்துகொண்டு வரோட் வளாகத்தில் புதிதாக அமைக்கப்பட்ட 'தாய்மடி' பலநோக்கு மண்டபத்தை ஆசீர்வதித்து வைபவ ரீதியாகத் திறந்து வைத்தார்.

இந்நிகழ்வுக்கான அனைத்து ஏற்பாடுகளையும் அமையத்தின் நிறைவேற்று இயக்குனரான அருட்தந்தை அல்பேட் ஜோ. அருள்ராஜாவின் வழிகாட்டலின்கீழ் மாற்றுத் திறனாளிகளுடன் இணைந்து பணியாளர்களும் மேற்கொண்டுள்ளனர்.

இவ்விளையாட்டு, கண்காட்சி மற்றும் கலை இலக்கிய நிகழ்வுகளில் சுமார் 375 மாற்றுத் திறனாளிகள் பங்குபற்றியமை குறிப்பிடத்தக்கது.

விசுவாச ஆண்டை முன்னிட்டு பங்களூரில் நடைபெற்ற

## கருத்தமர்வில் மன்னார் குருக்கள்

சிலாவத்துறைப் பங்குத்தந்தை அருட்பணி. இராஜநாயகம் மற்றும் அளவக்கைப் பங்குத்தந்தை அருட்பணி. சுரேந்திரன் றெவல் ஆகியோர் விசுவாச ஆண்டை முன்னிட்டு இந்தியாவில் நடைபெற்ற விசேட பயிற்சிநெறியில் பங்கெடுத்து நாடு திரும்பியுள்ளனர். பங்களூர் தேசிய விவிலிய, மறைக்கல்வி மற்றும் திருவழிபாட்டு மையத்தில் இடம்பெற்ற 10 நாள் பயிற்சி நெறியிலேயே இவர்கள் கலந்துகொண்டனர்.

## மன்னாரில் 'வலியின் விம்பங்கள்' கவிதை நூல் வெளியீட்டு விழா



'கலையருவி' எனப்படும் மன்னார் மறைமாவட்ட சமூகத்தொடர்பு அருட்பணி மையத்தின் வெளியீடாக வந்துள்ள 'மன்னார் பெனில்' என்பவரின் 'வலியின் விம்பங்கள்' என்ற கவிதை நூலின் வெளியீட்டு விழா கடந்த ஒக்ரோபர் 7ஆம் திகதி காலை 10.00 மணிக்கு மன்னார் புனித சவேரியார் ஆண்கள் கல்லூரி மண்டபத்தில் நடைபெற்றது.

கலையருவி அமைப்பின் இயக்குனரும் மன்னார் சர்வமதப் பேரவையின் தலைவருமான அருட்திரு. தமிழ் நேசன் அடிகளார் தலைமையில் நடைபெற்ற இவ்விழாவில் முதன்மை விருந்தினராக மன்னார் ஆயர் மேதகு இரா. யோசேப்பு ஆண்டகை கலந்துகொண்டார். மன்னார் பிரஜைகள் குழுவின் தலைவர் அருட்திரு. இ. செபமாலை அவர்கள் இந்நிகழ்வில் வரவேற்புரை நிகழ்த்தினார். வெளியீட்டுரையை கவிஞர் மயூறன் நிகழ்த்தினார். பல்துறை வித்தகர் ஆசிரியர் ஏ. நிஷாந்தன் அவர்கள் நூல் மதிப்பீட்டுரையை வழங்கினார்.

இந்நிகழ்வில் பாராளுமன்ற உறுப்பினர்களான கௌரவ சுரேஷ் பிரேமச்சந்திரன், கௌரவ வினோ நோகராதலிங்கம், கௌரவ சிவசக்தி ஆனந்தன் மற்றும் மன்னார் நகரபிதா திரு. ஞானப்பிரகாசம், வவுனியா மனிதவள மேம்பாட்டு ஆலோசகர் திரு. சண் ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாகக் கலந்துகொண்டனர்.

இக்கவிதை நூலின் ஆசிரியர் பெனில் அவர்கள் தற்போது மன்னார் தோட்டவெளியில் வசிக்கின்றார். 10 வருடங்களுக்கு முன்னர் மரத்தில் இருந்து தவறி விழுந்ததால் முள்ளந்தண்டில் பாதிப்பு ஏற்பட்டு நெஞ்சுப் பகுதிக்குக் கீழே உணர்விழந்தவராக சிகிச்சைகள் பலனின்றி சக்கர நாற்காலியில் வாழ்ந்து வருகின்றார். சூரியன் எவ். எம். வானொலியின் ரீங்காரம் என்ற நிகழ்ச்சியில் கவிதைகளை வாசித்து வருகின்றார். அத்துடன் 'சிறகுடைந்த இளஞ்சிட்டு' என்ற பெயரில் மன்னா கத்தோலிக்க பத்திரிகையிலும், 'மன்னார் பெனில்' என்ற பெயரில் வீரகேசரி, மித்திரன், தினமுரசு போன்ற பத்திரிகைகளிலும் கவிதைகளை எழுதிவருகின்றார்.


இந்நூலை வெளிக்கொணர்வதற்கு மன்னார் வர்த்தக சமூகத்தைச் சேர்ந்த அல்போன்ஸ் சம்மாட்டியார் அவர்கள் நிதியுதவி அளித்தமை குறிப்பிடத்தக்கது. இவரைப்போன்ற நலன்விரும்பிகள் இதுபோன்ற உதவிகளைச் செய்ய விரும்பினால் மன்னா கலையருவி அமைப்பின் இயக்குனரோடு தொடர்புகொள்ளவும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மன்னார் மறை மாவட்டத்தில் சமரசம், மனித உரிமைகள் மற்றும் மனிதாபிமான அக்கறை தொடர்பாக

# மன்னார் ஆயர் ஜனாதிக்கு வழங்கிய அறிக்கை

தமிழ் மொழியாக்கம் – திரு. ஆரோக்கியம் குரூஸ். உதவிக் கல்விப் பணிப்பாளர். மடு வலயம். (வங்காலை)



### 1. தமிழர் தேசியப்பிரச்சினை. தேசிய இனம். மாகாணசபைத் தேர்தல்கள்

1956 ம் ஆண்டுகளிலும் அதனைத் தொடர்ந்த காலங்களிலும் எம் இனிய தாய்த் திருநாட்டில் சொல்லொண்ணாத் துயர சம்பவங்கள் இடம்பெற்றமைக்கும், எமது இலங்கை மாதாவின் உடலிலே மாறாத வடுக்களாக அவை நிலைபெற்றிருப்பதற்கும் தீர்க்கப்படாத தேசிய இனப்பிரச்சினையும் அதனைத் தீர்ப்பதிலே அக்கறை காட்டவேண்டிய குறித்த தரப்பினரின் உறுதியான திடமனது இன்மையுமே காரணமெனில் அது மிகையில்லை. இத்தகு தீவினைகள் யாவற்றிற்கும் தீர்க்கமான விடையாக அமையத்தக்கது அரசியல் தீர்வொன்றே ஆகும். ஒரேநாடு என்ற சட்டகத்தினுள் தமிழர் தம் தேசிய இனத்துவத்தை அங்கீகரிக்கத்தக்க அதிகாரப் பகிர்வினூடே இனப்பிரச்சினைக்கு நீண்ட கால நிரந்தரத்தீர்வு ஒன்று எட்டப்படாதா? என நாம் ஏங்கி நிற்கின்றோம். தத்துவார்த்த அடிப்படையில் நாம் தேர்தல்களை ஆதரிக்கின்றோம். ஆயினும் 13வது திருத்தச் சட்டத்தில் உள்ள வடக்கு, கிழக்கு தொடர்ந்தும் பிரிக்கப்பட்டிருத்தல் என்பதில் அதிதீவிர கவனம் குவிக்கப்படுவதால் வடக்கு, கிழக்கு மாகாண சபைத் தேர்தல்கள் எமது எதிர்பார்ப்புகளையும்விட தாழ்ந்தவையாக இருப்பதனால் நாம் இவை குறித்து எச்சரிக்கையாக இருக்க வேண்டியுள்ளது.

**ஆலோசனைகள்**

□ 25 வருடங்களாக அரசியல் அமைப்பில் ஓர் அங்கமாக விளங்கும் 13வது திருத்தச் சட்டமானது மாகாணங்களுக்கான நிலம் மற்றும் பொலிஸ் அதிகாரங்களுடன் கூடியதாக இப்பொழுதாவது முழுமையாக அமுல்படுத்தப்படல் வேண்டும்.

□ வடக்கு கிழக்கினை தனியொரு அலகாக அங்கீகரித்தல், வடக்கு கிழக்கின் பாரம்பரிய வாழிடம், தமிழ் மக்களின் தேசிய இனத்துவம், உள்ளாந்த சுயநிர்ணயம் போன்றவை எந்தவொரு அரசியல் தீர்வினதும் அடிப்படை அம்சங்களாக கொள்ளப்படல் வேண்டும். எமது நாட்டின் குறித்த நிலைமைக்கு இயைபானவையாக இத்தகு பொதுக்கருத்துக்களின் பொருள் விபரிக்கப்படல் வேண்டும்.

□ கல்விமான்கள், தொழில்சார் நிபுணர்கள், சமயத்தலைவர்கள் போன்ற ஏனைய தமிழ் குழுக்களையும், தமிழ்த்தேசிய கூட்டமைப்பினரையும் உள்ளடக்கியதாக இனப்பிரச்சினைக்கான அரசியல் தீர்வை நோக்கிய பரந்தளவிலான கருத்தாடல் செயற்பாங்கு ஆரம்பிக்கப்படல் வேண்டும்.

### 2. பலவந்தமாகக் காணாமல்போனவர்கள்

பொலிசார், தேசிய மனித உரிமை ஆணைக்குழு, செஞ்சிலுவைச் சங்கத்தினர், LLRC போன்றவர்களுக்கு முறைப்பாடுகளினையும், அரச உயர் அதிகாரிகள், பல்வேறு அரசியல்வாதிகள் போன்றோருக்கு தமது கருணை வேண்டல்களினையும் சமர்ப்பித்தபோதினும் தமது அன்பிற்குரியவர்கள் எங்கே இருக்கின்றார்கள்? அவர்களது கதி என்னவாயிற்று? என்று அறிய முடியாது பலவந்தமாக காணாமல்போனவர்களின் குடும்பங்கள் அனைத்தும் கதிகலங்கி நிற்கின்றன. யுத்த காலத்தின்போது பலவந்தமாக காணாமல் போனவர்கள் பற்றிய ஆயிரக்கணக்கான சம்பவங்களினை அறிய முடிகிறது. தற்போது இந்த எண்ணிக்கை குறைவடைந்துள்ள போதிலும் வடக்கு உள்ளிட்ட இலங்கை பூராகவும் காணாமல் போவோர் பற்றிய சம்பவங்கள் இடம்பெறுவதை நாம் காணும்படி நேர்கிறது. மரணச்சான்றிதழ்களை ஏற்றுக்கொள்ளுமாறு பலவந்தப்படுத்தப்படுவதாக பல குடும்பங்கள் முறையிடுகின்றன. ஏனையவர்கள் தம் முறையீடுகளை சமர்ப்பித்தபோது பயமுறுத்தப்படுவதாகவும், பொலிசார் முறைப்பாட்டினை ஏற்க மறுப்பதாகவும் குறிப்பிடுகின்றனர்.

**ஆலோசனைகள்**

□ இலங்கையின் எப்பாகத்திலும் பலவந்தமாக காணாமல் போதல் சம்பவங்கள் இடம்பெறாமையை அரசாங்கம் உறுதி செய்தல் வேண்டும்.

□ அனைத்துப் பிரச்சினைகளையும், தனியான சம்பவங்களையும் ஆராய்வதற்கு செஞ்சிலுவைச்சங்கத்தின் பரிந்துரைக்கிணங்க ஒரு விசேட ஆணையாளர் நியமிக்கப்படல் வேண்டும். அத்தகு ஆணையாளர் அரசின் தலையீடுகள் அற்றவராகவும், காணாமல் போனவர்களின் குடும்பத்தினர், எதிர்க்கட்சி அரசியல்வாதிகள், மற்றும் சிவில் சமூகத்தினர் போன்றோரால் சுதந்திரமானவராக காணப்படுபவராக விளங்க வேண்டும். அத்தகைய ஆணையாளர் சுதந்திரமாக செயலாற்றத்தக்க அதிகாரம் வழங்கப்பட்டவராகவும் போதியளவு வளங்கள், ஆற்றல் உள்ளவராகவும் விளங்க வேண்டும்.

□ இறுதிக்கட்ட யுத்தத்தின்போது கணக்கிடப்படாத 146,679 மக்கள் பற்றி நாம் செஞ்சிலுவைச்சங்கத்தினருக்கு சமர்ப்பித்துள்ள ஆவணப்படுத்தப்பட்ட சான்றுகளுடனான விடயமும் ஏனைய விடயங்களுடன் கட்டாயம் ஆராய்ந்து பார்க்கப்பட வேண்டியதாகும்.

□ மக்களால் செய்யப்படுகின்ற எல்லா முறைப்பாடுகளையும் பொலிசார் ஏற்றுக்கொள்வதுடன் அவற்றிற்கு சட்டப்படி நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும்.

□ பலவந்தமாக காணாமல் போனவர்களது குடும்பத்தினர் மரணச்சான்றிதழ்களை ஏற்றுக்கொள்ள வற்புறுத்தப்படல் கூடாது. மரணச்சான்றிதழ் ஒன்றினை பெற்றுக்கொள்வதானது விசாரணைக்கும், வகை கூறல் செயன்முறைக்கும் முற்றுப்புள்ளி வைப்பதாக அமையக்கூடாது.

□ பலவந்தமாக காணாமல்போவோர் தொடர்பான ஐ.நா. செயற்குழுவிற்கு இலங்கையைத் தரிசிப்பதற்கும் தமது உதவியையும், ஆலோசனையையும் வழங்குவதற்கும் அழைப்பினை விடுத்தல்.

□ பலவந்தமாக காணாமல்போவதற்கு எதிரான அரசின் ஈடுபாட்டை எடுத்தியம்பும் குறிகாட்டியாக பலவந்தமாக காணாமல்போவதற்கு எதிரான சர்வதேச சாசனத்தினை ஒப்புதல் கொடுத்து உறுதி செய்தல்.

□ துன்புறுத்தலுக்கு எதிரான பாதுகாப்பு வலையமைப்பினை அதிகரிப்பதன் ஒரு பாகமாக துன்புறுத்தல்களுக்கு எதிரான சர்வதேச சாசனத்திற்கான தேர்ந்தெடுக்கும் உரிமை கொண்ட, இரு நாடுகளுக்கு இடையிலான உடன்படிக்கையின் முதல் குறிப்பிற்கு ஒப்புதல் கொடுத்து உறுதிசெய்தல்.

### 3. அரசியற் கைதிகள்

பெருமளவிலான அரசியற் கைதிகள் பல வருடங்களாக விசாரணையின்றி தடுத்துவைக்கப்பட்டுள்ளனர். விசாரணை செய்யப்பட்டவர்களது வழக்குகளும் பல ஆண்டுகளாக இழுபட்டுச்செல்வதனால் அவர்களும் தொடர்ந்தும் தடுத்து வைக்கப்பட்டுள்ளார்கள். போதியளவு சுகாதார வசதிகள் உள்ளிட்ட அடிப்படை வசதிகள் இன்றி தடுத்து வைக்கப்பட்டுள்ளவர்கள் நெருக்கமான சிறைக்கூண்டுக்குள் வாழ பலவந்தப்படுத்தப்படுகின்றனர். தம்முடன் உள்ள சிறைக்கைதிகள், சிறைக்கூடக் காவலர்கள் போன்றோரால் ஏற்படுத்தப்படத்தக்க வன்முறைகள் பற்றிய நிலையான பீதியின் காரணமாக சிறைப்பிடிக்கப்பட்டவர்கள் மிகவும் மன அழுத்தம், மனத்தாக்கங்களுக்கு உட்பட்டவர்களாக வாழ நேர்ந்துள்ளது. அரசியல் கைதிகள், பாதாள உலகக் குற்றவாளிகள், போதைப்பொருளுக்கு அடிமையானவர்கள் போன்றவர்களிலிருந்து வேறுபடுத்தப்படாமையினால் அரசியல் கைதிகளுக்கெதிரான வன்முறை பயத்தினையும் மன அழுத்தத்தினையும் அதிகரிக்க காரணமாகின்றது. தடுத்து வைக்கப்பட்டவர்களில் அநேகர் குடும்பப் பொறுப்புக்களை தாங்க வேண்டியவர்களாதலால் அநேகமான குடும்பங்கள் வறுமையில் வாடுகின்றன. 2012ம் ஆண்டிலும்கூட எமது பிரதேசங்களில் மக்கள் பயங்கரவாத தடுப்பு சட்டத்தின்கீழ் கைதுசெய்யப்பட்டு தடுத்து வைக்கப்படுவது தொடர்ந்து செல்கின்றது.

**ஆலோசனைகள் :-**

□ குற்றச்சாட்டுக்களின்றி தடுத்துவைக்கப்பட்டுள்ள அனைவரையும் விடுதலை செய்ய வேண்டும்.

□ போதுமான அளவு தடயங்கள் உள்ளவர்கள்மீது தாமதமின்றி ஒரு வருடத்தினுள்ளும் பல ஆண்டுகளாக தடுத்து வைக்கப்பட்டுள்ளவர்கள்மீது இவ்வருட இறுதிக்குள்ளும் வழக்குத்தாக்கல் செய்யப்படல் வேண்டும்.

□ குற்றவாளிகள் எனத் தீர்மானிக்கப்பட்வர்கள்மீது அரசியல் குற்ற பொது மன்னிப்பு வழங்குவது பற்றி எண்ணங்கொள்ளுதல் வேண்டும்.

□ தடுத்துவைக்கப்பட்டுள்ள அரசியல் கைதிகள் அனைவரதும் பட்டியலை மக்களுக்கு வெளிப்படுத்தல் வேண்டும்.

□ தடுப்பில் உள்ளவர்களை அவர்தம் குடும்பத்தவர்களும், நண்பர்களும் அன்பொழுக சந்திப்பதற்கான வாய்ப்புக்களையும் உதவிகளையும் வழங்குவதுடன் இத்தகு சந்திப்புகளுக்கு பொலிசார், அரச அதிகாரிகளிடமிருந்து சான்றிதழ் பெற வேண்டும் என்ற தேவையினை இல்லாதொழிக்க வேண்டும்.

□ முன்கூட்டிய அனுமதியின்றி நியமிக்கப்பட்ட நாட்களிலும், நேரங்களிலும் வழக்கறிஞர்கள் தடுப்பில் உள்ளவர்களை சந்திக்கக்கூடியதாகவும், சிறைக்காவலர்கள், பொலிசாரது பிரசன்னமின்றி தடுப்பில் உள்ளவர்கள் வழக்கறிஞர்களுடன் நம்பிக்கையுடன் தொடர்பாடக்கூடிய நிலையினைத் தோற்றுவிக்க வேண்டும்.

□ வடக்கிலிருந்து தடுத்து வைக்கப்பட்டுள்ளவர்களும், வடக்கிலுள்ள நீதிமன்றங்களில் வழக்குத்தாக்கல் செய்யப்பட்டவர்களும் வடக்கில் உள்ள சிறைச்சாலைகளிலேயே தடுத்து வைக்கப்படல் வேண்டும். தெளிவான திட்டவட்டமான காரணமின்றி இவர்கள் பூசா, கொழும்பு, கண்டி போன்ற இடங்களிலுள்ள தடுப்பு நிலையங்களுக்கு இடமாற்றப்படக்கூடாது. இடமாற்றத்திற்கு முன்னர் இக்குறிப்பிட்ட காரணம் பற்றி தடுத்து வைக்கப்பட்டவருக்கும் அவரது உறவினர்களுக்கும் எழுத்து மூலம் தெரியப்படுத்தப்படல் வேண்டும்.

□ பயங்கரவாத நடவடிக்கைகளில் ஈடுபட்டமைக்கான தெளிவான சான்றுகளோ மற்றும் சந்தேகத்திற்கான அடிப்படைகளோ இல்லர்விடில் பயங்கரவாதத் தடைச் சட்டத்தின்கீழ் கைது செய்வதனை வாடிக்கையாக தொடரக்கூடாது.

□ அரசியல் கைதிகளுக்கு எதிரான ஆதாரமற்ற பழிசுமத்தல்கள் பற்றி முறையிடப்படும்போது சுதந்திரமான விசாரணைகள் மேற்கொள்ளப்படுவதுடன் பொறுப்பானவர்கள் வகைகூறத்தக்கதாகவும் இருக்க வேண்டும். 2012ம் ஆண்டு யூன் மாதம் வவுனியா சிறைக்கூடத்தில் அநேக அரசியல் கைதிகள் கடுமையாக தாக்கப்பட்டு இருவர் கொல்லப்பட்டது தொடர்பா.; இது உடனடியாக மேற்கொள்ளப்படல் வேண்டும்.

### 4. சட்டத்திற்கு புறம்பான கொலைகள்

[illegible] இறுதிக்கட்ட யுத்தத்தின்போதும் பல்லாயிரக்கணக்கான மக்கள் சட்டத்திற்கு புறம்பான வகையில் கொல்லப்பட்டுள்ளனர். சிலர் தனிப்பட்ட ரீதியில் இலக்குவைத்து கொல்லப்பட்டுள்ள அதேவேளை அநேகர் மூன்று சகாப்தகால யுத்தத்தின்போது பெரும் எண்ணிக்கையில் படுகொலை செய்யப்பட்டுள்ளனர். ஏறக்குறைய எல்லா சம்பவங்களிலும் கொலைகளைப்பற்றி விசாரணை செய்வதற்கும் பாதிக்கப்பட்ட சமூகங்களுக்கும் பலிகொள்ளப்பட்ட குடும்பங்களுக்கும் நீதி வழங்கப்படுவதற்கும், வகை கூறுவதற்கும் எந்தவொரு முயற்சியும் மேற்கொள்ளப்படவில்லை.

**ஆலோசனைகள்**

□ அனைத்து தனிப்பட்ட சம்பவங்களும் படுகொலைகளும் சுதந்திரமான குழு ஒன்றினால் விசாரணை செய்யப்பட வேண்டுவதுடன் அச்சம்பவங்களுக்கு பொறுப்பானவர்கள் அடையாளங்காணப்பட்டு வகைகூற செய்யப்படல் வேண்டும்.

□ உண்மைநிலை அறியப்பட்டு பொறுப்புக் கூறுதல் ஏற்றுக்கொள்ளப்பட்டதன் பின்னர் பொது மன்னிப்பு பற்றியும் கருத்திற்கொள்ள வேண்டும்.

□ மரணச்சான்றிதழ் வழங்கும் நடைமுறை எளிதானதாகவும், ஒழிவுமறைவற்றதாகவும் ஆக்கப்படுவதுடன் மரணத்திற்கான காரணம் அரசியல் காரணங்களுக்காக திரித்துக் கூறப்படக்கூடாது. குற்றமிழைத்தவர் அல்லது கொல்லப்பட்டவரது இனம், மதம் என்பவற்றை கருத்திற் கொள்ளாது உயிர் பிழைத்த, எஞ்சியிருப்பவர்களது எல்லா குடும்பங்களுக்கும் நேர்மையான விதத்தில் விரைவாக நட்ட ஈடு வழங்கப்படல் வேண்டும்.

□ மரணச் சான்றிதழ்களும், நட்டஈடும் நீதியை நாடுகின்றதும், வகை கூறப்பட வேண்டியதுமான குடும்பங்களது உரிமைகளை நீக்குவதாக அமையக்கூடாது.

### 5. இறந்தவர்களுக்கான மரியாதை. கொல்லப்பட்ட. காணமல்போனவர்களுக்கான நீதி

யுத்தம் முடிவுக்கு வந்ததிலிருந்து கொல்லப்பட்டவர்கள் காணமற்போனவர்களுக்கான சமய, சம்பிரதாய சடங்குகளின் போதும் அதனை ஒழுங்குபடுத்துகின்ற கத்தோலிக்க குருமார்கள் உள்ளிட்ட ஒழுங்கமைப்பாளர்கள்மீதும் பாதுகாப்புபடையினரது அச்சுறுத்தல்களும், மிரட்டல்களும் அதிகரித்தவண்ணமுள்ளன.

யுத்தத்தின்போது கொல்லப்பட்ட தமது அன்பிற்குரியவர்களது உருவப்படங்களை வைத்திருப்பதற்குக்கூட சில குடும்பங்கள் அனுமதிக்கப்படுவதில்லை. தமிழ் போராளிகளது மயானங்கள் புல்டோசர் மூலம் நிர்மூலமாக்கப்பட்டுள்ளன. அண்மைக் காலங்களில் வடக்கு பிரதேசத்தில் இறுதிச்சடங்குகளினை நடாத்துவதிலும்கூட பாதுப்பு படையினரும் பொலிசாரும் குறுக்கீடுகளைச் செய்ய முயன்றுள்ளனர். இறுதிச் சடங்கின்போது பாதுகாப்புப் படையினரும், பொலிசாரும் பெருமளவில் குவிக்கப்படுவதனால் சம்பந்தப்பட்ட குடும்பத்தினருக்கு தேவையற்ற மனக்கவலையை தோற்றுவிப்பதுடன் சமயச் சடங்குகளில் அமைதியாக ஈடுபடமுடியாத நிலையும் ஏற்படுகின்றது.

**ஆலோசனைகள்**

□ யுத்தத்தின்போது கொல்லப்பட்ட தமது அன்பிற்குரியவர்களது உருவப்படங்களை வைத்திருப்பதற்கு குடும்பங்கள் அனுமதிக்கப்படல் வேண்டும்.

□ இறந்தவர்களுக்கான இறுதிச்சடங்குகள் உள்ளிட்ட இறந்தவர்களுக்கான சமய, சம்பிரதாய சடங்குகள் யாவும், பாதுகாப்புப்படையினர், பொலிசாரது எவ்வித தலையீடுகளுமின்றி சுதந்திரமாக நடைபெற வேண்டும்.

□ 2012ம் ஆண்டு யூலை மாதம் நெளுக்குளத்தில் நடைபெற்ற அமரர். நிமலரூபன் அவர்களது ஈமச்சடங்கின்போது அவரது இல்லத்தில் பெருமளவு பாதுகாப்புப்படையினர், பொலிசார் குவிக்கப்பட்டிருந்த சம்பவம் மீண்டும் இடம்பெறக்கூடாது. இச்சம்பவத்தில் ஈமச்சடங்கு ஏற்பாடுகள் குடும்பத்தினராலேயே தீர்மானிக்கப்படல் வேண்டும் என்ற உச்சநீதிமன்ற ஆணையை அரசாங்கம் பின்பற்ற வேண்டும்.

□ புதிய கட்டிடங்களை அமைத்தல், பயிர் செய்கை மேற்கொள்ளல் போன்ற நடவடிக்கைகளினால் இறந்த போராளிகளது சேமக்காலைகள், மயானங்கள் அவமதிப்புக்கு உள்ளாக்கப்படக்கூடாது.

(தொடர்ச்சி 5ஆம் பக்கம்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மன்னார் மறை மாவட்டத்தில் சமரசம், மனித உரிமைகள் மற்றும் மனிதாபிமான அக்கறை தொடர்பாக

# மன்னார் ஆயர் ஜனாதிக்கு வழங்கிய அறிக்கை

(4ஆம் பக்கத் தொடர்ச்சி)

## 6. யுத்த வெற்றியை கொண்டாடுவதற்குப் பதிலாக யுத்தத்தில் பலியானவர்களை நினைவுகூருதல்

முப்பது ஆண்டுகால யுத்தத்தின்போதும், இறுதிக்கட்ட யுத்தத்தின்போதும் ஆயிரக்கணக்கான பொது மக்கள், அரசபடையினர், தமிழ் போராளிகள் கொல்லப்பட்டும், காணாமல்போயும், காயப்பட்டும் உள்ள நிலையில் யுத்தத்தின் நிறைவினை ஒவ்வொரு வருட மே மாதத்தில் கோலாகலமாக கொண்டாடுவது இன ரீதியான மன அழுத்தத்தினை மேலும் துருவப்படுத்தி நிற்கிறது.

### ஆலோசனைகள்

□ யுத்த நிறைவினைக் கொண்டாடுவதற்குப் பதிலாக மோதலின் போது கொல்லப்பட்டவர்கள், காணாமற்போனவர்கள், சொத்து இழப்புக்கள் மற்றைய எல்லாத் துன்பங்களையும் நினைத்து யுத்தம் நிறைவுற்ற மே மாதம் 18ம் திகதி சமயச் சடங்குகளினை அனுஸ்டித்தல்.

□ யுத்தத்தின்போது கொல்லப்பட்ட, காணாமலும்போன சகலரையும் நினைவுகூரும் வகையில் பொதுவான நினைவுச்சின்னம் ஒன்றினை நிறுவுதல் / ஸ்தாபித்தல்.

## 7. தடுப்பிலிருந்து விடுவிக்கப்பட்டோர் மற்றும் தஞ்சம் புகுந்திருந்த நாட்டை விட்டு வெளியேற்றப்பட்டோர்

பாதுகாப்புப் படையினர், பொலிஸார், புலனாய்வுப் பிரிவினர் ஆகியோரது தொடர்ச்சியான உன்னிப்பான கண்காணிப்பு, விசாரணைகள், மீளக் கைது செய்தல், அச்சுறுத்தல், பயமுறுத்தல்கள் கட்டுப்பாடுகள் போன்றன காரணமாக தடுப்பிலிருந்து விடுவிக்கப்பட்டவர்கள்/ புனர்வாழ்வு அளிக்கப்பட்டவர்கள் பயத்திலேயே சீவித்து வருகின்றனர். தஞ்சம் புகுந்திருந்த நாடுகளிலிருந்து திருப்பி அனுப்பப்பட்ட மக்களும் இத்தகைய பிரச்சினைகளை எதிர்நோக்குகின்றனர். தடுப்பிலிருந்து விடுவிக்கப்பட்டவர்களுக்கு எதிரான கட்டுப்பாடுகளுக்கான சட்டரீதியான அடிப்படை தெளிவாக்கப்படவில்லை.

பாதுகாப்புப்படையினர், பொலிசார் தடுப்பிலிருந்து விடுதலையானவர்களைத் தமக்காக வேலைசெய்ய - குறிப்பாக தமக்கு தகவல் தெரிவிப்பவர்களாகச் செயற்பட வேண்டுதல் அல்லது பயமுறுத்தலானது சமூகங்களில் மேலதிக மன அழுத்தங்களினை தோற்றுவித்துள்ளது.

### ஆலோசனைகள்

□ உன்னிப்பான கண்காணிப்பு, கட்டுப்பாடுகள், விசாரணைகள், ஏனைய வடிவங்களிலான தொடர்ந்து தொல்லை கொடுத்தல், பாகுபாடு காட்டுதல் போன்றவற்றிலிருந்து விடுபட்டவர்களாக, சாதாரண மக்களைப்போன்று தடுப்பிலிருந்தும் விடுவிக்கப்பட்டவர்களும் வாழ அனுமதிக்கப்பட வேண்டும்.

□ புதிதாக குற்றங்களில் ஈடுபட்டமைக்கான போதுமான ஆதாரங்களின்றி அவர்கள் மீண்டும் கைது செய்யப்படலாகாது.

□ பாதுகாப்பு அதிகாரிகளினதும், பொலிசாரினதும் எண்ணக்கோளாறு மற்றும் போதிய ஆதாரமின்றி நம்புகின்ற தன்மைகளினடிப்படையில் தடுப்பிலிருந்து விடுவிக்கப் - பட்டவர்கள்மீது கட்டுப்பாடுகள் விதிக்கப்படலாகாது. ஏதாவது கட்டுப்பாடுகள் விதிக்கப்பட வேண்டுமானால் அவை சட்டத்தின்பாற்பட்டதாகவும் தெளிவுபடுத்தப்பட்டதாகவும் இருக்க வேண்டும்.

□ தடுப்பிலிருந்து விடுவிக்கப்பட்டவர்களை, பாதுகாப்புப் படையினரும், பொலிசாரும் தமக்கு தகவல் தெரிவிப்பவர்களாக செயற்படுமாறு கேட்பதனை தவிர்த்துக் கொள்ள வேண்டும்.

□ உதவி தேவைப்படும் அனைவருக்கும் வங்கிக் கடன் உள்ளிட்ட வாழ்வாதார சந்தர்ப்பங்கள் சமமாக வழங்கப்பட வேண்டும்.

□ இவ்வாறான மக்களை சமூகத்துடன் சிறந்த முறையில் ஒன்றிணைப்பதற்காக சமூகக்குழுக்கள், சமயக்குழுக்கள், அரசசார்பற்ற நிறுவனங்களினை அரசாங்கம் ஊக்கப்படுத்த வேண்டும்.

## 8. ஒன்றுகூடுவதற்கான, மற்றும் கருத்து வெளிப்பாட்டிற்கான சுதந்திரம்

யுத்தம் முடிவுற்றபோதினும் அடிப்படை உரிமைகள் மற்றும் சுதந்திரங்கள் போன்றன தொடர்ந்தும் கடுமையாக கட்டுப்படுத்தப்படுகின்றன. வடக்கிலுள்ள மக்களுக்கு உதவிபுரிதல், அவர்களுக்குரிய அதிகாரம் வழங்குதல் போன்ற தமது நடவடிக்கைகளில் உள்ளூர், சர்வதேச, அரச சார்பற்ற நிறுவனங்கள், பொது அமைப்புக்கள், மனித உரிமை பாதுகாவலர்கள் போன்றோர் தொடர்ந்தும் கட்டுப்பாடுகளுக்கும் தடைகளுக்கும் முகம் கொடுக்கின்றனர்.

### ஆலோசனைகள்

□ அரசியலமைப்பில் உத்தரவாதமளிக்கப்பட்டுள்ள உரிமைகளையும், சுதந்திரங்களையும் கட்டுப்படுத்தக்கூடாது. எதுவித சட்ட ரீதியான அடிப்படைகளுமின்றி வடபகுதி மக்கள் மேலதிகக் கட்டுப்பாடுகளுக்கு உள்ளாக்கப்படக்கூடாது.

□ 2012ம் ஆண்டு மே மாதம் மன்னாரில் கத்தோலிக்க குருமார் ஒழுங்கமைக்க முயன்ற சமாதான ஊர்வலத்தை தடை செய்தது போன்று சமாதான ஊர்வலங்களை நீதிமன்ற துணைகொண்டு பொலிசார் தடுக்கவோ அன்றேல் தடைசெய்யவோ கூடாது.

□ யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உள்ளூர் மற்றும் சர்வதேச அரச சார்பற்ற நிறுவனங்கள் செய்கின்ற உதவிகள் அடையாளம் காணப்பட்டு வரவேற்கப்படுவதுடன் தமது உதவிகளை விரிவாக்கம் செய்வதற்கு அவர்களுக்கு ஆதரவு வழங்க வேண்டும். அரசசார்பற்ற நிறுவனங்களை சந்தேகக்கண்கொண்டு நோக்கக்கூடாது. அரசசார்பற்ற நிறுவனம் அல்லது அந்நிறுவன ஊழியர்கள்மீதான குற்றச்சாட்டு தொடர்பான ஊகங்கள் அல்லது ஆதாரமற்ற குற்றச்சாட்டுக்கள் அவை சார்ந்த சட்ட ரீதியான நடைமுறைகளுக்கு இணங்க விசாரணை செய்யப்படல் வேண்டும்.

□ ஜனாதிபதி செயலணியின் சட்டத்தைப் (PTF) பின்பற்றும் பண்பு குறிப்பாக அது செயற்படுகின்ற சட்டரீதியான அடிப்படை அமைப்பானது தெளிவாக்கப்படல் வேண்டும்.

## 09. யுத்தத்தினால் அங்கவீனமாக்கப்பட்டோர். குடும்பச்சுமையை தாங்கியவர்களை இழந்தவர்கள். குணமாக்கமுடியா மனஅழுத்தம் அடைந்தவர்களுக்கான உதவி

யுத்தத்தின்போது ஆயிரக்கணக்கான மக்கள் கொல்லப்பட்டதுடன் அநேகர் நிரந்தர இயலாமையினால் அவதியுற்றனர். அவர்களில் பலர் சக்கர நாற்காலி, செயற்கையுறுப்புக்கள் போன்ற உதவிகளைப் பெற்றுள்ளனர். ஆயினும் இன்னும் பலர் தேவையான மருத்துவக் கவனத்தையும், உதவியையும் பெறவில்லை. ஒரு தொகையான குடும்பங்கள் இறுதிப்போரின்போது தமது குடும்பச்சுமையைத் தாங்கியவர்களை இழந்து தற்போது நிர்க்கதியாகியுள்ளன. ஏறக்குறைய வடபிரதேச மக்கள் அனைவரும் யுத்தத்தின் சித்திரவதையை கண்களால் கண்டு அனுபவித்ததுடன், குணப்படுத்த முடியாத மனஅழுத்தத்தினால் தொடர்ந்தும் உபாதைப்படுகின்றனர்.

### ஆலோசனைகள்

□ தேவை மதிப்பீடு ஒன்றின் மூலம் மருத்துவ உதவி தேவைப்படுவோர் இனங்காணப்பட்டு மருத்துவ உதவிகள் வழங்கப்படல் வேண்டும்.

□ தமது பாரம்பரிய வாழ்வாதார நடவடிக்கைகளில் ஈடுபட முடியாதவாறு காயப்பட்டவர்களுக்கு மாற்று வாழ்வாதார உதவிகள் வழங்கப்படல் வேண்டும்.

□ இவ்வாறான குடும்பங்கள் பற்றிய விபரங்கள் சேகரிக்கப்பட்டு நிலையான வருமானம் தரத்தக்க செயற்றிட்டங்களுக்கான உதவிகள் வழங்கப்படல் வேண்டும்

□ ஆலோசனைச் சேவைகள் தேவைப்படுபவர்களுக்கு தொழில் சார்ந்ததும், சுதந்திரமானதுமான ஆலோசனைச் சேவைகள் வழங்கப்படுவதுடன் இத்தகைய சேவைகளை வழங்கத்தக்க தொழில்சார் நிபுணர்களை தன்னகத்தேகொண்டு விளங்கும் அரசசார்பற்ற நிறுவனங்கள், சமய ஸ்தாபனங்களுக்கு எதுவித கட்டுப்பாடுகளும் விதித்தலாகாது.

## 10. அரசியல் தலையீடுகள்

மன்னாரில் சிவில் நிர்வாகத்திலும், நீதிமன்றத்திலும் தனது செல்வாக்கை பிரயோகிக்க கைத்தொழில், வர்த்தக அமைச்சர் ரிசாட் பதியுதீன் அவர்கள் பல தடவைகள் முயன்றுள்ளார். மன்னாரில் தமிழர்கள் பெரும்பான்மையினராக உள்ள நிலையில் அண்மைக்காலங்களில் மன்னாரில் உள்ள அரச காரியாலயங்களில் வழங்கப்பட்ட முக்கியமான நியமனங்களில் அதிகமானவை அமைச்சருடன் இணைந்த முஸ்லீம் சமூகத்தினருக்கே வழங்கப்பட்டுள்ளது. தனது நீதிமன்றத்தில் வழக்கொன்றிற்கு தான் வழங்கிய தீர்ப்பினை மாற்றி அமைக்குமாறு அதே அமைச்சரினால் தான் பயமுறுத்தப்பட்டதாக மன்னார் நீதிபதி அவர்கள் 2012ம் ஆண்டு ஜூலை மாதம் குறிப்பிட்டுள்ளார். அதற்கு அடுத்த நாள் மன்னார் நீதிமன்றம் பெரிய கும்பல் ஒன்றின் தாக்குதலுக்கு இலக்காகியது.

### ஆலோசனைகள

□ அமைச்சர் பதியுதீன் அவர்கள் தன்னை அழைத்து தனது தீர்ப்பினை மாற்றி அமைக்கும்படி தன்னை பயமுறுத்தியதாக மன்னார் நீதிபதி அவர்கள் குறிப்பிடும் சம்பவம் போன்று அமைச்சர்கள், அரசியல்வாதிகள் மற்றும் இராணுவத்தினர் நீதிமன்றம் அல்லது சிவில் நிருவாகத்தில் ஒருபோதும் தலையிடவோ, செல்வாக்கு செலுத்தவோ அல்லது பயமுறுத்தவோ கூடாது.

□ விவசாயம், கல்வி , சுகாதாரம் உள்ளிட்ட அரச உத்தியோகத்தர் நியமனங்களில் அரசியல் தலையீடு இருக்கக் கூடாது. எல்லாவகையான அபிவிருத்தி நடவடிக்கைகளும் எதுவித அரசியல் தலையீடுகளும் இன்றி அந்தந்த மாவட்ட அரச நிருவாக கட்டமைப்பினாலேயே திட்டமிட்டு நடைமுறைப்படுத்தப்படல் வேண்டும்.

□ எல்லா சிவில் சேவையாளர்களும் தொழில்சார்ந்த சிவில் சேவையாளர்களாக இருத்தல் வேண்டும். அரசியல்வாதிகளோ இராணுவ அதிகாரிகளோ சிவில் பதவிகளுக்கோ அன்றேல் ஆளுநர்களாகவோ நியமிக்கப்படக்கூடாது.

□ தற்பொழுதும் இடம்பெயர்ந்து உள்ளவர்கள் வாக்களிப்பதை உறுதிப்படுத்தும் வகையிலும் அதேவேளை இரட்டைப்பதிவின் ஊடாக யாருமே இருதடவைகள் வாக்களிக்காததை உறுதிப்படுத்தும் வகையிலும் வாக்காளர் பட்டியலை திருத்தியமைத்தல் வேண்டும்.

(அடுத்த மாத இதழில் தொடரும்)

முருங்கனில் கலைஞர் குழந்தையைக் கௌரவித்து

# 'கலைத்தவசி' கலைப்பணி நயப்பு மலர் வெளியீடு




பேரா. சண்முகதாஸ், மன்னார் ஆயர், கலைஞர் குழந்தை, அவரது பாரியார் திருமதி றோஸ்மேரி ஆயியோர் மேடையில்

முருங்கனைச் சேர்ந்த கலைஞர் செ. செபமாலை குழந்தை அவர்களின் கலைப்பணியைப் பாராட்டி அவரைப் பற்றிய தங்கள் அனுபவங்களை அவருடைய கலையுலக நண்பர்கள், சக கலைஞர்கள், உறவினர்கள் அறிஞர் பெருமக்கள் எழுத்தில் பதிவுசெய்திருக்கின்றார்கள். இவர்கள் அனைவரும் எழுதிய கட்டுரைகளின் தொகுப்பாக 'கலைத்தவசி' என்ற பெயரில் இந்தக் கலைப்பணி நயப்பு மலர் வெளிடப்பட்டது. 300 பக்கங்களைக்கொண்ட இந்நூலில் நூறு பேர் வரை எழுதியுள்ளனர். முருங்கன் முத்தமிழ் கலாமன்றத்தின் ஏற்பாட்டில் நடைபெற்ற இம்மலர் வெளியீட்டு விழா கடந்த 7.10.2012 மாலை 2.30 மணிக்கு முருங்கன் மகாவித்தியாலய மண்டபத்தில் இடம்பெற்றது. இந்நிகழ்விற்கு அருட்திரு. தமிழ் நேசன் அடிகளார் தலைமைதாங்கினார். வரலாற்றுப் பதிவுகளை மேற்கொள்ளவேண்டியதன் அவசியத்தைக் குறித்து அவர் உரையாற்றினார். இந்நிகழ்வில் மன்னார் ஆயர் மேதகு இரா. யோசேப்பு ஆண்டகை அவர்கள் முதன்மை விருந்தினராகக் கலந்துகொண்டார்.

இந்நிகழ்வில் நூல் மதிப்பீட்டுரையை யாழ் திருமறைக்கலாமன்ற பதில் இயக்குனர் திரு. ஜே. ஜே. ஜோண்சன் ராஜ்குமார் வழங்கினார். இந்நிகழ்வின்போது கலைஞர் குழந்தை அவர்களின் கலைப்பயணத்தில் இணைந்து பயணித்த கலைஞர்கள் சிலரும் விருது வழங்கிக் கௌரவிக்கப்பட்டனர். முருங்கனைச் சேர்ந்த நாடக நடிகர் திரு. செ. சீமான் அவர்கள் 'அரங்க வேந்தன்' என்ற பட்டத்தையும். முருங்கனைச் சேர்ந்த மிருதங்கக் கலைஞர் திரு. செ. இயேசுதாசன் அவர்கள் 'லய வேந்தன்' என்ற பட்டத்தையம், ஆவணத்தைச் சேர்ந்த திரு. செ. வேதநாயகம் அவர்கள் 'ஒப்பனைச் செம்மல்' என்ற பட்டத்தையும் பெற்றுக்கொண்டனர். அமரர்களான முருங்கனைச் சேர்ந்த திரு. ப. அந்தோனிப்பிள்ளை, காத்தான்குளத்தைச் சேர்ந்த ஆசிரியர் சீ. இம்மானுவேல் ஆகியோரும் கௌரவ விருதுகள் வழங்கி கௌரவிக்கப்பட்டனர்.

இந்நிகழ்வில் சிறப்பு விருந்தினர்களாக யாழ் பல்கலைக்கழக வாழ்நாள் பேராசிரியர் அ. சண்முகதாஸ், கலாநிதி மனோன்மணி சண்முகதாஸ், மன்னார் வலயக் கல்விப் பணிப்பாளர் திரு. எம். எம். சியான், அமதிகளின் யாழ் மாகாண முதல்வர் எம். போல் நட்சத்திரம் அடிகளார், யாழ் பல்கலைக்கழக கிறிஸ்தவத் துறைத் தலைவர் பேராசிரியர் ஞா. பிலேந்திரன் அடிகளார், பேராசிரியர் அகஸ்ரின் சூசை, நானாட்டான் பிரதேச செயலாளர் திரு. க. அ. சந்திரஐயா ஆகியோர் பங்கெடுத்தனர்.

கௌரவ விருந்தினர்களாக பாராளுமன்ற உறுப்பினர்கள் கௌரவ சிவசக்தி ஆனந்தன், கௌரவ வினோ நோகராதலிங்கம் ஆகியோரும் நானாட்டான் பிரதேசசபைத் தலைவர் திரு. ஏ. ரீ. அன்புராஜ் லெம்பேட் அவர்களும் கலந்துகொண்டனர். இம்மலர் தொகுப்பு முயற்சியையும், விழா ஏற்பாடுகளையும் அருட்திரு. அன்புராசா அடிகளார் தலைமையிலான குழுவினர் மேற்கொண்டிருந்தனர்.

## இளைஞர் கலைவிழா .... 16ஆம் பக்கத் தொடர்

இந்நிகழ்விற்கு பிரதம அதிதியாக மன்னார் மறைமாவட்ட குருமுதல்வர் விக்ரர் சோசை அடிகளாரும் சிறப்பு விருந்தினர்களாக யாழ் மறைமாவட்ட இளைஞர் பணி இயக்குனர் அருட்பணி. இரவிச்சந்திரன், யாழ்ப்பாண நீதிபதி உயர்திரு. அமலவளன் ஆகியோரும் சிறப்புப் பேச்சாளராக வவுனியா கல்வியியற் கல்லூரித் தலைவர் உயர்திரு. பேனாட் ஆகியோரும் கலந்துகொண்டனர்.

இந்த நிகழ்வுகளை சிறப்பாக நடத்தி முடிப்பதற்கு உதவிய வேப்பங்குளம் பங்குத்தந்தை அருட்திரு. றஜனிகாந்த், வேப்பங்குளம் பங்கு மக்கள், பங்குச் சபை மற்றும் கத்தோலிக்க இளைஞர் ஒன்றியத்தினர் ஆகிய அனைவருக்கும் மறைமாவட்ட இளைஞர் ஒன்றியம் நன்றிகளையும், வாழ்த்துக்களையும் தெரிவித்து நிற்கின்றது.

கலை வழி இறைபணி என்று கலையூடாக இறையரசின் விழுமியங்களை மண்ணில் விதைக்கவும், சிதறிக்கிடக்கும் இளைஞர்களை ஒன்றுகூட்டி, தூர்ந்துபோன கலைகளுக்கு உயிர்கொடுக்கவும், சமகால நிலைகளை எல்லோருக்கும் எடுத்துக்காட்டவும் மன்னார் மறைமாவட்ட கத்தோலிக்க இளைஞர் ஒன்றியத்தினர் முன்னெடுக்கும் செயற்பாடானது பாராட்டுக்குரியதாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விசுவாச ஆண்டு சிறப்புப் பொழிவு

சிறப்புக் கட்டுரை

# விசுவாசத்தை வளர்க்கும் இறைவார்த்தை

**இன்றைய எதார்த்த சூழலில், சமூகத்தில் விளிம்பில் தள்ளப்பட்டு, அன்றாட வாழ்வையே போராட்டமாக வாழ்ந்து சமூக, அரசியல், பொருளாதார, சமயத் தளங்களில் தள்ளாடிக்கொண்டிருக்கும் சாமானியருக்கு 'விசுவாச ஆண்டு' என்ன செய்தியைத் தரப்போகிறது?**



சவால்களைச் சந்திக்கத் திராணி இல்லாதவர்கள், பன்னாட்டு பண முதலைகளுக்கு தனது காணி நிலத்தையும் தாரைவார்த்து தவிக்கும் மக்களுக்கு எத்தகைய நம்பிக்கையை இந்த விசுவாச ஆண்டு தரப்போகிறது என்ற பின்புலத்திலே நம்பிக்கையின் விளைநிலமான விவிலியத்திற்குச் செல்வோம்.

## 1. பழைய ஏற்பாட்டில்

பழைய ஏற்பாட்டில் விவிலியக் கதை மாந்தர்களுக்கு இறைவார்த்தை விசுவாசத்தை வளர்த்து வாழ்வில் முன்னேறிச் செல்ல, இறை மனித உறவில் ஆழம்பெற உதவியது. இதனை குலமுதுவர் தந்தையர்கள், நீதித்தலைவர்கள், அரசர்கள், இறைவாக்கினர்கள் ஆகியோரின் வாழ்வில் காணலாம். இதே போன்று மக்களுடைய தனிப்பட்ட வாழ்விலும் எப்போதுமே இறைவார்த்தை நம்பிக்கையை வளர்த்து இருக்கிறது ஏனென்றால் விவிலியம் மக்களால் மக்களுக்காக எழுதப்பட்டது. என்று "ஆண்டவரின் அருள்வாக்கு" என்ற மடல் கூறுகின்றது (எண் 30).

### குலமுதுவர் காலம்

குலமுதுவர் இறைவார்த்தையை நம்பி தங்களது நம்பிக்கையை வளர்த்துக்கொண்டார்கள். அவர்களில் ஒருசிலருடைய வாழ்வை மட்டும் இவன் கோடிட்டுக் காட்ட விழைகிறேன்.

நோவா நேர்மையானவராகவும், குற்றமற்றவராகவும் இருந்ததால் கடவுள் (தொநூ 6:19) அறிவித்த அனைத்தையும் நம்பி, "கடவுள் தமக்குக் கட்டளையிட்டபடியே நோவா எல்லாவற்றையும் செய்து முடித்தார் (6:22-27). பேழையிலிருந்து வெளியேவரக் கடவுள் கட்டளையிட்டபோது அவர்கள் அனைவரும் வெளியே வந்து ஆண்டவர்மீது தங்களது விசுவாசத்தை வளர்த்துக்கொண்டதாகவும் அதன் வெளி அடையாளமாகப் பலி செலுத்தியதாகவும் விவிலியம் கூறுகிறது (8:16, 18, 20). ஆண்டவர் "உன்னை நான் பெரிய இனமாக்குவேன்; உனக்கு ஆசி வழங்குவேன்" (தொநூ 12:2-4) என்று சொன்னபோது புறப்பட்டுச் சென்றார்.

ஆபிரகாம். 12:7ல் ஆண்டவருக்கு பலிபீடம் அமைத்ததும் (12:8, 13, 18) மகன் பிறப்பான் என்ற இறைச்செய்தியை நம்பி, விருத்தசேதனம் உடன்படிக்கையின் அடையாளம் என்று சொன்னபோது தனது முதிய வயதில் தானும் அதைச் செய்துகொண்டு (17:24) தனது பிள்ளைகளையும் செய்யத் தூண்டியதும் விசுவாசமே. எனவே ஆபிரகாமின் நம்பிக்கையை நீதியாக இறைவன் கண்டார் (15:6).

ஈசாக்கு காலத்தில் பஞ்சம் ஏற்பட்டபோது ஆண்டவர் தோன்றி எகிப்து நாட்டிற்குப் போகாமல், 'நான் காட்டும் நாட்டிலேயே தங்கியிரு' என்றார். இவ்வார்த்தைகளைக் கேட்ட ஈசாக்கு கெராரிலேயே தங்கிவிட்டார் (தொநூ 26:2, 6). "உனக்கு ஆசி வழங்கி உனது வழிமரபைப் பெருகச் செய்வேன்" என்ற வார்த்தை அவருக்கு நம்பிக்கை ஊட்ட ஒரு பலிப்பீடம் எழுப்பி ஆண்டவரைப் புகழ்ந்து போற்றினார் (26:25:35:12-14). ஆண்டவர் ஈசாக்கிடம் "நீ உடனே இந்த நாட்டை விட்டுப் புறப்பட்டுச் செல்" என்றதும் (தொ.நூ. 31:13. 18:35:1) அவரும் நம்பிச் சென்றார் என்று காண்கிறோம்.

மோசேயின் வாழ்வில் அவரது அழைப்பையும் பணியையும் ஏற்கத் தயங்கியபோது "நான் உன்னோடு இருப்பேன்" (வி.ப 3:12, 4:12) என்ற வார்த்தைகளை எடுத்துக் கூறியபோது மக்கள் நம்பினர் (விப 4:20, 4:30, 19:8, 15:25, 17:6, 19:20, 24:12) எண் 9:5). மோசேயும் ஆரோனும் இறைவார்த்தையை நம்பி, ஆண்டவர் கட்டளையிட்டதெல்லாம் செய்தனர் (7:6, 7:10, 20, 8:9, 10). குறிப்பாகச் செங்கடலைக் கடந்த நிகழ்விலும் ஆண்டவரின் வார்த்தையை நம்பி மோசே அனைத்தையும் செய்வதையும், "இதைக் கண்ட மக்கள் இருவர்மேலும் நம்பிக்கை வைத்தனர்" என (14:31) வாசிக்கிறோம். மேலும் மக்கள், "ஆண்டவர் கூறியபடியே அனைத்தும் செய்வோம்" என்று உறுதியளித்தது அவர்களது நம்பிக்கையை எடுத்துரைக்கிறது (19:8).

யோசுவாவிடம் ஆண்டவர் கூறிய வார்த்தையைக் கேட்டு அவரில் விசுவாசம் கொண்டு (யோசு 1:2, 11) யோர்தானைக் கடந்துசெல்ல மக்களைத் தயார் செய்தார். யோசுவா வழியாகச் சொன்ன எல்லா இறைவாக்குகளும் ஒவ்வொன்றாக நிறைவேறியதைக் கண்ட மக்கள் யோசுவாவுக்கும் இறைவனுக்கும் அஞ்சினார்கள் என அறிகிறோம் (4:24). குறிப்பாக எரிகோவை ஏழுமுறை சுற்றி, நகரினுள் நுழைந்த (6:20) நிகழ்வும், இறைவார்த்தை எவ்வாறு அம்மக்களை நம்பிக்கைகொள்ளச் செய்து வெற்றிபெறச் செய்தது என்பதையும் படம்பிடித்துக் காட்டுகிறது (8:1-29, 10:1-25, 11:6-8).

நீதித்தலைவர்கள் அனைவரும் இறைவனின் வார்த்தையால் நம்பிக்கையும் ஊக்கமும் பெற்றனர் என்பதைக் காண முடிகிறது (நீதி 4:14,6:12-14,16-17,23) குறிப்பாக கிதியோன் வாழ்வில் நடந்த நிகழ்வுகள் சிம்சோனின் பிறப்பு நிகழ்விலும் இறைவார்த்தை நம்பிக்கையூட்டி மகன் பிறக்கக் காரணமாயிருந்தது என வாசிக்கிறோம் (13).

அன்னாவின் வாழ்வில் ஏலியின் வார்த்தைகள் திடமூட்ட, அவள் சென்று உணவருந்தினாள் என்றும், அவள் முகம் வாடவில்லை என்றும், இத்தகைய நம்பிக்கை சாமுவேல் என்ற மகனைப் பெற்றுத்தந்தது என்றும் (1சாமு 1:17-18) வாசிக்கின்றோம். தாவீதை சாமுவேல் திருப்பொழிவு செய்ததும் இறைவார்த்தையை முன்னிட்டே (1 சாமு 16:12-15) என்றும் தாவீது கோலியாத்தை வென்றதும், பின்பு தன் மனைவி மக்களுடன் எபிரோன் சென்றதும் இறை நம்பிக்கையில்தான் என அறிகிறோம். (2:1-2, 2 சாமு 5:19-23) நாத்தான் வழியாகத் தரப்பட்ட இறைவாக்கை தாவீது ஏற்று, "உமது வார்த்தைகள் நம்பிக்கைக்கு உரியவை" (7:28) என்று ஆண்டவரின் திருமுன் அமர்ந்து, இறைவனைப் புகழ்வது அவரது நம்பிக்கையை வெளிப்படுத்துகிறது (7:18-28).

எலியா கார்மேல் மலையில் செபித்ததும் மழை பெய்யச் செய்ததும் இறை நம்பிக்கையில்தான் (1 அர 18:41,19:11). எலியாவுக்குச் சொன்னபடியே எல்லாம் நிகழ்ந்ததால், அவரும் அவரைச் சார்ந்தவர்களும் இறைவார்த்தையை நம்பி வாழ்வு பெற்றவர்களாகவே விவிலியம் காட்டுகிறது.

திருப்பாடல்கள் பல இறைவன்மீது அவரது பேரன்பின்மீது, பராமரிப்பின்மீது விசுவாசத்தை எடுத்துரைக்கின்றன. தனி மனித வாழ்விலும் குழும வாழ்விலும் நம்பிக்கையை வளர்ப்பதாகவும், உறுதிப்படுத்துவதாகவும் உள்ளது (3:7,7:1,11:1,13:5,16:1-2,17:8,14). "ஆண்டவரின் வாக்கு நம்பத்தக்கது. அவரில் அடைக்கலம் புகுவோருக்கு அவரே கேடயமாய் இருக்கின்றார்" (18:30,19:7) எனத் திருப்பாடல் ஆசிரியர் விசுவாசத்தை வெளிப்படுத்த எடுத்துரைக்கிறார். குறிப்பாக திருப்பாடல் 22 இஸ்ரயேல் மக்களின் விசுவாசத்தை வெளிப்படுத்தும் உன்னதமான பாடலாகும். இது தங்களின் மூதாதையர் கொண்டிருந்த நம்பிக்கையை எடுத்துக்கூறி (22:4) தனது நம்பிக்கையை வெளிப்படுத்தும் பாடலாக உள்ளது.

இறைவாக்கினர் வாழ்வில் இறைவன் என் மீட்பர் அவர்மேல் நம்பிக்கை வைக்கிறேன் (எசா 12:2) என்றும், மக்களினங்கள் அனைவரின் முகத்தை மூடியுள்ள முக்காட்டை அகற்றி விடுவார் என்றும் (25:7) ஏனெனில் இறந்த உம் மக்கள் உயிர் பெறுவர் (27:19) என்றும் சீயோனில் ஓர் அடிக்கல் நாட்டுகிறேன். அதில் நம்பிக்கை கொண்டோர் பதற்றமடையார் என்றும், (28:16) நீங்கள் என்னிடம் திரும்பி வந்து அமைதியுற்றால் விடுதலை பெறுவீர்கள், அமைதியிலும் நம்பிக்கையிலுமே நீங்கள் வலிமை பெறுவீர்கள். (30:15), என் பொருட்டும், என் ஊழியன் தாவீது பொருட்டும் இந்நகரைக் காப்பேன் (37:35) என்ற செய்தியின் உச்சமாக எசாயா 40வது அதிகாரம் இறைவனை ஆயனாக காட்டி நம்பிக்கையை முன்வைக்கிறது. 'அஞ்சாதே, நான் உன்னுடன் இருக்கிறேன்' (41:10 எசே 3:14, 34:75) போன்ற வரிகள் இறைவாக்கினர்கள் அனைவரையும் உந்தித்தள்ளி செயல்பாட்டிற்கு இட்டுச் சென்றன என்றால் மிகையாகா (எசா 41:10, 43:10 எரே 1:8, 30:11, தானி 10:12). தானியேல் வாழ்வில் தம் கடவுளை உறுதியாக நம்பியதால் யாதொரு தீங்கும் நேரவில்லை என வாசிக்கிறோம் (தானி 6:23).

## 2. புதிய ஏற்பாட்டில்

பழைய ஏற்பாட்டில் எவ்வாறு மக்கள் பொதுவாழ்விலும் தனி வாழ்விலும் இறைவார்த்தையால் விசுவாசத்தில் வளர்ந்து பலருக்கும் சிறந்த வழிகாட்டிகளாக மாறினார்களோ அதே போன்று புதிய ஏற்பாட்டிலும் இறைவார்த்தை விசுவாசத்தை வளர்ப்பதற்கு உறுதுணையாக அமைந்திருப்பதை அறிகிறோம். புதிய ஏற்பாட்டின் ஒவ்வொரு பக்கமும் மக்களுடைய வாழ்வுக்கு உரம் தந்து, விசுவாசத்திற்கும் செயல்பாட்டிற்கும் இட்டுச்சென்றுள்ளது என்பது வெள்ளிடைமலை. குறிப்பாக இயேசுவின் வாழ்வும் சொல்லும் செயலும் இந்த விசுவாச ஊட்டலை மையக் கருத்தாகக் கொண்டிருந்தது. வரலாற்று இயேசுவின் வார்த்தைகள் யூதர் அல்லாத பிற இனத்தவர்களையும் விசுவாசம்பெறச் செய்தது. காரணம் இயேசுவே 'இறைவாக்கு' இதை யோவான் பின்வருமாறு எழுதுகிறார். "வார்த்தை மனுஉருவானவர். நம்மிடையே [illegible]க்கைச் செய்தி நம் சிந்தனையை ஆழப்படுத்துகிறது. புதிய ஏற்பாடு முழுவதும் நம்பிக்கையூட்டுவதாய் இருப்பினும் ஒரு சிலருடைய தனிப்பட்ட வாழ்வில் நிகழ்ந்த நிகழ்வுகளை அடிக்கோடிட்டுக் காட்டுவது சிறந்தது என எண்ணுகிறேன்.

செக்கரியா தனது முதுமையிலே, இறைப்பணி செய்தபோது (லூக் 1:13) வானதூதர் விசுவாசத்தை வளர்க்கும் செய்தியொன்றைச் சொல்ல, அதைக்கேட்ட அவர் மட்டுமல்லாது அவரைச் சார்ந்த அனைவரையும் விசுவாசமும் வியப்பும் கவ்விக்கொண்டன என 1:66, 2:18ல் வாசிக்கிறோம். அதுபோலவே 1:30-38ல் காணும் மரியா - வானதூதர் சந்திப்பும், அப்போது தரப்பட்ட இறைவார்த்தைகளும் மனுக்குலம் முழுவதையும் நம்பிக்கை பெற்று வாழ்வு பெறவும் அதையும் நிறைவாகப் பெறவும் (யோவா 10:10) உதவின. இதை எலிசபெத்தை மரியா சந்திக்க வந்தபோது உறுதிப்படுத்துகிறார். (1:45)

நம்பிக்கையை நங்கூரமாக பாய்ச்சிக் காத்திருந்த அன்னா, சிமியோன் ஆகியோரது பாடலும் இதே கருத்தை வலியுறுத்துகிறது. மேலும் மத்தேயு நற்செய்தியில் கூறப்பட்டுள்ள அனைத்து பழைய ஏற்பாட்டு மேற்கோள்களும் (மத் 1:22-23,2:5-6,15,17-18,23,3:3) இறைவார்த்தை மக்கள் மத்தியில் வளர்ந்திருந்த நம்பிக்கைகள் நிறைவுபெறுகின்றன என்பதையே தெளிவுபடுத்துகின்றன. மேலும் 3:17ல் காணுகின்ற தந்தையின் சாட்சிய வார்த்தைகள் "என் அன்பார்ந்த மைந்தர்." என்ற வார்த்தைகள் இயேசு தன் தந்தையிடம் கொண்டிருந்த நம்பிக்கையை ஆழப்படுத்தி அவருடைய இறையாட்சிப்பணிக்கு இட்டுச் சென்றது. சோதனைக்குட்படுத்தப்பட்டபோது இறைவார்த்தைகள் வெற்றி தரும் கருவியாக மாறி, அவரது நம்பிக்கையை அறிவிக்க உதவின (4:4,6,7).

இயேசுவின் போதனைகள் மக்களுக்கு அவர்மீதிருந்த விசுவாத்தை ஆழப்படுத்தின. பெருந்திரளான மக்கள் அவரைப் பின்தொடர்ந்தனர் (லூக் 4:20.25). வானத்துப் பறவைகளைக் காட்டி இறைப்பராமரிப்பை நினைவூட்டி, நாளைக்காக கவலைப்படாதீர்கள். அதற்கு நாளைக்கு வழிபிறக்கும் என நம்பிக்கையூட்டிய வார்த்தைகளை 6:34ல் காண்கிறோம். விசுவாசத்தோடு இறைவேண்டல் செய்பவர்களுக்கு தந்தை மிகுதியாக நன்மைகள் அளிப்பார் எனக் காண்கிறோம். (7:11)

இயேசுவின் இறையாட்சி மலர ஆரம்பித்துவிட்டது என்பதை ஓங்கி ஒலிப்பவை அவரது வல்ல செயல்களே. அவரது ஆட்சியில் நம்பிக்கை இழந்து சமூகத்தால், சமயத்தால், அரசியல், பொருளாதாரக் கூறுகளால் புறம் தள்ளப்பட்ட மக்கள் மையம் பெற்றதும், அவர்களிலும் மாண்பும் இறைச்சாயலும் உண்டு என்று உணர்ந்த பல முன்னெடுப்புக்களைச் செய்தவர் இயேசு. அவைகளையே நாம் வல்ல செயல்களாக் காண்கிறோம். ஐயா நீர் விரும்பினால் (மத் 8:3 மாற் 1:40 லூக் 5:12-13) 'நான் விரும்புகிறேன்' எனச் சொல்ல உடனே தொழுநோய் நீங்கியது, 'ஐயா நீர் வீட்டிற்குள் வர.... ஒரு வார்த்தை மட்டும் சொல்லும் என் பையன் நலமடைவான்' என்ற வார்த்தைகள், இயேசுவையே வியப்பில் ஆழ்த்தி, நீர் விரும்பிய வண்ணமே உமக்கு நிகழும் என்று சொல்ல வைத்ததும், அந்நேரமே சிறுவன் குணமடைந்ததும் இறைவார்த்தையின் வல்லமையைப் புலப்படுத்துகிறது (8:13)

'மகளே, உனது நம்பிக்கை உன்னைக் குணமாக்கிற்று, நீ நோய் நீங்கி நலமாயிரு" என்று சொல்ல வைத்தது இரத்தப் போக்குடைய பெண்ணின் ஆழமான அவளது பற்றுறுதியே (மாற்5:29,34) 'அஞ்சாதீர், நம்பிக்கையை மட்டும் விடாதீர்கள்' (5:36,41) என்று சொல்லி யாயீரின் நம்பிக்கைக்குப் காரணமும் இயேசுவின் வார்த்தையை நம்பியதால்தான். 'நீ எழுந்து உன்னுடைய கட்டிலைத் தூக்கிக்கொண்டு வீட்டிற்குப் போ' என்ற வார்த்தை முடக்குவாதமுற்றவரை நடக்கச் செய்தது (மத் 9:2,6).

இயேசு தன் வார்த்தைகளால் சாமானிய மக்களை விசுவாசத்தோடு வாழ திடம் தந்துள்ளார். 'நீங்கள் சிட்டுக்குருவிகளைவிட மேலானவர்கள். எனவே அஞ்சாதீர்கள்' என்றார் (மத் 10:31). சீடர்கள் கலங்கி அச்சமுற்றபோது "துணிவோடிருங்கள், நான்தான் அஞ்சாதீர்கள்" என்ற நம்பிக்கையை வெளிப்படுத்தியபோது "அம்மா உன் நம்பிக்கை பெரிது. நீர் விரும்பியவாறே நிகழட்டும்" என்று பாராட்டி அவரின் மகளுக்கு நலம் தந்தார். (15:28), "தாவீதின் மகனே, எனக்கு இரங்கும், நான் மீண்டும் பார்வைபெறச் செய்யும்' என்று கூறி (லூக் 18:42) நலம் தந்தார். இவ்வாறு தன்னுடைய வாக்கால் பலரின் வாழ்வில் விசுவாச விளக்கை ஏற்றிவைத்தார். அதுபோல அவர்களுடைய நம்பிக்கைக்கு வெகுமதி வழங்கும் வகையில் நலம் தந்து நம்பிக்கையூட்டினார். 'நம்புகிறவருக்கு எல்லாம் நிகழும்" என்று (9:23) கூறி இறைவார்த்தையின் ஆற்றலை மற்றவர்களும் தன் சீடர்களும் அறியச் செய்தார். இதனால்தான் பலர் 'இயேசு அனுபவம்' பெற்ற பிறகு அவரைப் பின்பற்றி இறையாட்சியின் தூதுவர்களாக, சாட்சிகளாக மாறினர். அவர்களின் நம்பிக்கை வளர்ந்து இயேசுவில் சீடத்துவ வாழ்வில் பயணிக்க உதவியது.

இயேசுவின் வாக்கு பலரின் வாழ்வில் எப்படி நம்பிக்கையை வளர்த்தது என்பதைப் பற்றிய அனுபவத்தை யோவான் எடுத்துக் காட்டுகிறார். யோவான் 5:24-ல் 'என் வார்த்தையைக் கேட்டு என்னை அனுப்பியவரை நம்புவோர்க்கு நிலைவாழ்வு கிடைக்கும் எனவும் 5:39 'மகனைக் கண்டு அவரிடம் நம்பிக்கை கொள்ளும் அனைவரும் நிலைவாழ்வு பெறுவர்' என்றும் வாசிக்கிறோம் (6:40) இயேசுவின் வார்த்தை நம்பிக்கை வளர்ப்பதாக மட்டுமல்ல நிலைவாழ்வையும் தருகின்றது. என்பதை எடுத்தியம்பியுள்ளார். 'என் வார்த்தையைக் கடைப்பிடிப்போர் என்றுமே சாகமாட்டார்கள்' (8:51,11:25). எனவே இறைவார்த்தை இயேசுமீது நம்பிக்கை கொள்வதற்கு மட்டுமல்ல, நிலைவாழ்வுக்கும் இட்டுச்செல்கிறது (காண் 13:18-20). (தொடர்ச்சி அடுத்த இதழில்)

அருட்பணி. திருத்துவதாஸ், திருச்சி. நன்றி - தோழன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இலங்கைத் திருச்சபைச் செய்திகள்

# இலங்கைக்கு அழுத்தம் கொடுத்தபோதும் தேசிய பிரச்சினைக்குத் தீர்வு எட்டப்படவில்லை!

### இலங்கைக்கான புதிய அமெரிக்கத் தூதுவர் யாழ் ஆயரிடம் தெரிவிப்பு



இலங்கையின் தேசியப் பிரச்சினைக்குத் தீர்வுகாணுமாறு அரசாங்கத்திற்கு பல்வேறு சந்தர்ப்பங்களிலும் அழுத்தங்களைக் கொடுத்துவருகின்றோம். அதற்கான தீர்வுகள் இன்னமும் எட்டப்படவில்லை என்று இலங்கைக்கான புதிய அமெரிக்கத் தூதுவர் மிச்செல் ஜே. சிசன் தெரிவித்தார். யாழ். மாவட்ட மக்கள் கவலைக்கு மத்தியில் வாழ்கின்றனர். அவர்களுக்கு அதிகளவிலான தேவைகள் இருக்கின்றன. அவற்றை நிறைவான விதத்தில் பெற்றுக்கொடுக்க வேண்டும். சிறிய அளவிலான உதவிகளை செய்வதற்கு உதவுவோம் என்றும் அவர் குறிப்பிட்டார்.

யாழ்ப்பாணத்துக்கான விஜயத்தினை மேற்கொண்டிருந்த அமெரிக்கத் தூதுவர் யாழ் ஆயர் இல்லத்தில் ஆயர் தோமஸ் சௌந்தரநாயகம் ஆண்டகையைச் சந்தித்துக் கலந்துரையாடினர். இதன்போது, அரசியல் தீர்வை நோக்கி நகர அரசாங்கத்திற்குக் கூடிய அழுத்தங்களை கொடுக்குமாறும் கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகளை செயற்படுத்த வலியுறுத்துமாறும் அமெரிக்கத் தூதுவரிடம் யாழ் ஆயர் வேண்டுகோள் விடுத்தார். இதற்குப் பதிலளித்த தூதுவர் இப்பிரச்சனைக்குத் தீர்வுகாணுமாறு அரசாங்கத்திற்கு பல்வேறு சந்தர்ப்பங்களிலும் அழுத்தங்களைக் கொடுத்து வருவதாகவும் அதற்கான தீர்வுகள் இன்னும் எட்டப்படவில்லை எனவும் கூறினார்.

# இத்தாலிய ஆயர் பேரவை இலங்கைத் திருச்சபைக்கு உதவி





இத்தாலிய ஆயர் பேரவையின் மூன்றாம் உலக நாடுகளின் துயர் துடைப்பு பணிகளுக்குப் பொறுப்பான ஆயர் மேதகு ஜியோவன்னி பற்றிஸ்ரா காண்டோல்வோ (Giovanni Battista Gandolfo) அவர்கள் கடந்த செப்ரம்பர் 3ஆம் திகதி அன்று கொழும்பு பேராயர் இல்லத்தில் புதிய அலுவலகக் கட்டிடத்தை திறந்து வைக்கின்றார்.



ஆயர் மேதகு ஜியோவன்னி பற்றிஸ்ரா காண்டோல்வோ (Giovanni Battista Gandolfo) அவர்கள் கொழும்புப் பேராயர் கர்தினால் மல்கம் றஞ்சித் ஆண்டகையுடன் இணைந்து கடந்த செப்ரம்பர் 3ஆம் திகதி அன்று கொழும்பு பேராயர் இல்லத்தில் புதிய மண்டபத்திற்கான அடிக்கல்லை நாட்டுகின்றார்.



கடந்த செப்ரம்பர் 4 ஆம் திகதி ஆயர் மேதகு ஜியோவன்னி பற்றிஸ்ரா காண்டோல்வோ (Giovanni Battista Gandolfo) அவர்களுடன் சேர்ந்து சிலாப ஆயர் மேதகு வலன்ஸ் மெண்டிஸ் அவர்கள் சிலாப மறைமாவட்டத்தில் உயர் கல்வி மையத்தைத் திறந்துவைக்கின்றார்.

# தூயவர்கள் அனைவரும் மனிதர்கள் அவர்கள் தேவதூதர்கள் அல்ல

தூயவர்கள் அனைவரும் மனிதர்கள். அவர்கள் தேவ தூதர்கள் அல்ல" என்று கொழும்பு உயர் மறைமாவட்டப் பேராயர் அதி வந்தனைக்குரிய மல்கம் கருதினால் ரஞ்சித் ஆண்டகை அவர்கள் "ஏழைகளின் தூய கிளேயா சகோதரிகள்" துறவற சபையின் 800வது ஆண்டு நிறைவு விழாத் திருப்பலியின் மறையுரையில் குறிப்பிட்டார்.

அண்மையில் இறாகம, தேவத்தையில் உள்ள அச்சகோதரிகளின் துறவற மடத்தில் பேராயர் தலைமையில் சிறப்புத் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டது. தூயவர்களை நாடி வருவோருக்கு தூயவர்களில் இருந்து பிரகாசிக்கின்ற இறையருள் அவர்களைத் தொட்டு மாற்றுகின்றது. தூய பவுல் குறிப்பிடுவது போன்று "என் வலுவின்மையிலும், இகழ்ச்சியிலும், இடரிலும், இன்னலிலும், நெருக்கடியிலும் கிறிஸ்துவை முன்னிட்டு நான் அகமகிழ்கின்றேன்.

ஏனெனில் நான் வலுவற்றிருக்கும்போது வல்லமை பெற்றவனாக இருக்கின்றேன்." என்பதையும், விடுதலைப்பயண நூல் 34வது அதிகாரத்தையும் குறிப்பிட்டு மோசே இறைவனோடு உரையாடி சீனாய் மலையிலிருந்து பத்துக்கட்டளைகளோடு வரும்போது அவருடைய முகம் பிரகாசமாக இருந்ததையும் பேராயர் அவர்கள் தனது மறையுரையில் விளக்கினார்.

1993ம் ஆண்டு மறைந்த திருத்தந்தை 2ஆம் அருளப்பர் சின்னப்பர் ஏழைகளின் தூய கிளேயா சகோதரியின் 800வது பிறந்த தினத்தில் பின்வருமாறு குறிப்பிட்டுள்ளார். ஏழைகளின்மீது பரிவுகொண்டு அன்பு செய்து சிலுவைச் சாவை ஏற்ற இயேசுக்கிறிஸ்துவைப் போன்று தானும் அடையாளம் காணப்பட வேண்டும் என்று செயற்பட்டவர்தான் இச்சகோதரி. இவை எல்லாம் எமக்குக் காட்டுவது யாதெனில் இறைவன் எவ்வளவுக்கு மனித இனத்தை அன்பு செய்கின்றார் என்பதேயாகும். இன்று இந்த நவீன கணணி யுகத்தில் எமக்குத் தேவை தூய பிரான்சிஸ், தூய கிளேயா போன்றவர்கள். இன்று ஆன்மீக வாழ்வில் நாட்டம் குறைந்து ஒழுக்கயீனமாக மனித இனம் வாழ்ந்துகொண்டிருக்கின்றது. திருச்சபைக்குள் பல குழப்பங்கள், சந்தேகங்கள் இதனால் ஆன்மீக வாழ்விலே வெறுமை காணப்படுகின்றது. எனவே தூயவர்களின் வாழ்வைப் பின்பற்றி நாமும் ஆன்மீக நாட்டம் உள்ளவர்களாகவும், ஏழைகளை சிறப்பாக மனித இனத்தை அன்பு செய்து வாழ முயற்சி எடுப்போம்.

## துறவற வாழ்வில் பொன் விழா

பிரான்சிஸ்கன் மறைபரப்பு சகோதரர்கள் சபையைச் சேர்ந்த அருட்சகோதரர் தோமஸ் பெர்னான்டோ அவர்கள் துறவற வாழ்க்கையில் 50 வருடங்களைப் பூர்த்தி செய்துள்ளார்.

அருட்சகோதரர் தோமஸ் அவர்கள் தனது யூபிலி விழா நன்றித் திருப்பலியை கடந்த 22.08.2012 அன்று ஏகல, ஜா - எலயில் உள்ள மாகாணத் தலைமை இல்லத்தில் சிறப்பாகக் கொண்டாடினார்.

அன்றைய தினம் நன்றித் திருப்பியை அருட்திரு. இம்மானுவேல் பெர்னான்டோ அ.ம.தி அவர்கள் நிறைவேற்றி வைத்தார்.

சபையின் மாகாணத் தலைவர் அருட்சகோதரர் செ. தொபியாஸ் அவர்களும் இவ்விழாவில் கலந்துகொண்டார்.

### பாப்பிறை மறைபரப்புச் சபைகளின் தேசிய இயக்குனர் அருட்பணி ரெஜினோல்ட் சபரமாது அவர்களின்

## மறைபரப்பு ஞாயிறு தினச் செய்தி

## *எமது வார்த்தையாலும் வாழ்வாலும் கிறிஸ்துவின் சாட்சிகளாவோம்*



கிறிஸ்து இயேசுவே மேன்மையான மறை - யறிவிப்பாளர். வழிதவறி, பாவிகளாய் அலைந்து திரிந்த மனிதனை மீண்டும் இறைவனிடம் அழைத்துச் செல்ல தம் தந்தையால் மனுக்குலத்தின் மீட்பராக இவ்வுலகிற்கு அனுப்பப்பட்டார். ஆகையால்தான் கிறிஸ்துவே மறையறிவுப்புப் பணிகளின் முன்னோடி எனக் காண்கின்றோம். அவர் தனக்களிக்கப்பட்ட பணியை இவ்வுலகில் தன் வார்த்தைகளாலும் மறைபரப்புதலினாலும் செயற்பாடுகளாலும் மிகச் சிறப்பான முறையில் மனுக்குலத்தின் நன்மைக்காகச் செய்தார். உலகில் தனது பணிவாழ்க்கை முடிவுறும் காலகட்டத்தில் தன் பணியை தன் சீடர்களிடம் அதாவது திருச்சபையிடம் கையளித்து மீட்பின் நற்செய்தியை அறிவிக்கவும் இறையரசின் மதிப்பீடுகளையும் இறைத்தந்தையின் அன்பையும் பறைசாற்ற அழைத்தார்.

1. "தந்தை என்னை அனுப்பியதுபோல நானும் உங்களை அனுப்புகிறேன்" (யோவான் 20:21).
2. "எனவே நீங்கள் போய் எல்லா மக்களினத்தாரையும் சீடராக்குங்கள்" (மத்தேயு 28:19).
3. "தூய ஆவி உங்களிடம் வரும்போது நீங்கள் கடவுளது வல்லமையைப் பெற்று எருசலேமிலும் யூதேயா, சமாரியா முழுவதிலும் உலகின் கடையெல்லை வரைக்கும் எனக்குச் சாட்சிகளாய் இருப்பீர்கள்" (தி.பணி 1:8).

இவ்வனைத்து நற்செய்தி வசனங்களும் எமக்கு தெளிவாக எதைக்காட்டுகிறது என்றால் இறைமகன் கிறிஸ்து தனது திருச்சபையை ஆயர்கள், குருக்கள், துறவியர், பொதுநிலையினர், இளைஞர், வயோதிபர் ஏன் குழந்தைகளையும்கூட தனக்கு சாட்சி பகரும்படி அழைத்துள்ளார். எனவே முழுத்திருச்சபையும் ஒரு மறையறிவுப்புத் திருச்சபையாகும். திருமுழுக்கின் மூலம் கிறிஸ்து மீட்பரின் சாட்சிகளாக வாழ நாம் அழைக்கப்பட்டுள்ளோம்.

அனைத்து கிறிஸ்தவர்களும் இயேசுவில் விசுவாசம் கொண்டுள்ளோம். பல தடவைகளில் அவரைப்பற்றி வாசித்தும் கேள்விப்பட்டும் உள்ளோம். எனவே, அவரை நாம் அறிவோம், அவரிலும் அவர் படிப்பினைகளிலும் நம்பிக்கையுள்ளபோதிலும் எம்மில் பலர் அவரின் போதனைகளுக்கு ஏற்ப வாழ்வதில்லை. திருப்பாலத்துவ சபையில் குழந்தைகள் சிறுவயதிலிருந்தே இயேசுவை அறியவும் கிறிஸ்துவை வாழவும் அவ்வாறு வாழ்வதன் மூலம் தங்கள் நண்பர்களுக்கும் கிறிஸ்துவை அறிமுகமாக்கவும் அவர்கள் பயிற்றுவிக்கப்படுகின்றார்கள். நாம் சிறுவயது முதலே இயேசுவை எம்மில் ஏற்று வாழப் பழகாவிடில் பெரியவர்களான பின்பு அவருக்கு சாட்சிபகர தவறிவிடுவோம் என்பதை அப்போஸ்தலரான புனித யாக்கோபு எமக்கு மிகத்தெளிவாகக் கூறியுள்ளார்.

அவர் கூறுகிறார்.- "அறிவிலிகளே, செயலற்ற நம்பிக்கை பயனற்றது என நான் எடுத்துக்காட்ட வேண்டுமா?" (யாக்கோபு 2:20) - "அதைப்போலவே நம்பிக்கையும் செயல்வடிவம் பெறாவிட்டால் தன்னிலே உயிரற்றதாயிருக்கும்" (யாக்கோபு 2:17) - உயிர் இல்லாத உடல்போல செயல்கள் இல்லாத நம்பிக்கையும் செத்ததே" (யாக்கோபு 2:26) உலக மறைபரப்பு தினத்திற்கான இவ்வருட கருப்பொருளானது "எமது வார்த்தையாலும் வாழ்வாலும் கிறிஸ்துவின் சாட்சிகளாவோம்" எனவே கிறிஸ்துவில் நாம் கொண்டுள்ள விசுவாசத்தை வார்த்தைகளுள் மட்டும் அடக்கிவிடாமல் முதல் கிறிஸ்தவர்களின் பாதச் சுவடுகளில் நடந்து வாழ்வின் மூலம் எம் தலைவரும் குருவுமான கிறிஸ்துவுக்கு சாட்சிபகர முன்வருவோம். ஆதிக்கிறிஸ்தவர்களின் வாழ்க்கை முறைகளைப் பற்றி அப்போது வாழ்ந்த உரோமையர்கள் மிகவும் புகழ்ந்தார்கள். "கிறிஸ்தவர்கள் எவ்வளவு அழகாக ஒருவர் ஒருவருடன் வாழ்கிறார்கள் என்பதைப் பாருங்கள்" இதே வார்த்தைகளை இக்காலகட்டத்தில் கிறிஸ்தவர்கள் அல்லாத எமது வேற்றுமத சகோதரர்களிடமிருந்து கேட்கக்கூடியதாக உள்ளதா!!!

இறுதியாக எம் ஆண்டவரின் வார்த்தைகளை எம்முள் எதிரொலிக்கச் செய்வோம்.

- "நீங்கள் மண்ணுலகிற்கு உப்பாயிருக்கிறீர்கள். உப்பு உவர்ப்பற்று போனால் எதைக்கொண்டு அதை உவர்ப்புள்ளதாக்க முடியும்?" (மத் 5:13)
- "நீங்கள் உலகிற்கு ஒளியாய் இருக்கிறீர்கள், மலைமேல் இருக்கும் நகர் மறைவாய் இருக்க முடியாது" (மத் 5:14)
- "உங்கள் ஒளி மனிதர் முன் ஒளிர்க! அப்பொழுது அவர்கள் உங்கள் நற்செயல்களைக் கண்டு உங்கள் விண்ணகத் தந்தையைப் போற்றிப் புகழ்வார்கள்" (மத் 5:16)

விசுவாசத்தின் ஆண்டான இவ்வருடத்தில் நாமும் எமது விசுவாசத்தைத் திடப்படுத்துவோம். அவ்வாறு எமது விசுவாசம் உறுதிபெற்று செயற்திறனுடன் மற்றவர்களுக்கும் ஒளி வீசுவதாக அமையட்டும். இவ்வருட உலக மறைபரப்பு ஞாயிறு தினத்திற்கான இறைவனின் அழைப்பு என்னவென்றால் எமது வார்த்தையாலும் வாழ்வாலும் கிறிஸ்துவின் சாட்சிகளாக மாறுவதே. இறைவன் உங்களை நிறைவாய் ஆசீர்வதிப்பாராக, தேவ அன்னை உங்களை பாதுகாப்பாராக!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முள்ளிக்குள மக்களின் மீள்குடியேற்றத்தை அரசு தடுப்பதன் நோக்கம் என்ன?

## அலசுகிறார் புவியியல் பேராசிரியர் கலாநிதி சூசை ஆனந்தன்

போரினால் இடம்பெயர்ந்த மக்களை யுத்தம் முடிவுற்று மூன்று வருடங்கள் கழிந்துவிட்ட நிலையிலும், அவர்களது சொந்த இடங்களில் குடியமரவிடாது அப்பகுதிகளை ஆக்கிரமித்துக்கொண்டு மக்களின் விருப்புக்கு மாறாக பொருத்தமற்ற இடங்களில் அவர்களை குடியமர்த்த அரசு சகல வழிகளிலும் முயன்று வருகின்றது. திருகோணமலையில் சம்பூர், யாழ்ப்பாணத்தில் மயிலிட்டி, பலாலி ஆகிய கிராமங்களுக்கு நடந்துகொண்டிருப்பதுபோல் மன்னாரில் முள்ளிக்குளம் என்ற பாரம்பரியமிக்க கத்தோலிக்க தமிழ்க் கிராமம் ஒன்றுக்கு வேட்டுவைப்பதற்கான முயற்சிகள் நடைபெற்றுக் - கொண்டிருக்கின்றன.

மன்னார் மாவட்டத்தில் தென் எல்லையோரமாக கடற்கரையோரத்தில் மன்னார் பட்டினத்திலிருந்து சுமார் 50 கிலோமீற்றர் தொலைவில் இது இடஅமைவு பெற்றுள்ளது. 1990இல் இராணுவ நகர்வு ஒன்றின் காரணமாக சுமார் 300க்கும் அதிகமான குடும்பங்கள் இக்கிராமத்தை இழந்து வெளியேறி பல்வேறு இடங்களிலும் தஞ்சம் புகுந்திருந்தனர். 2009ல் யுத்தம் முடிவுக்கு கொண்டுவரப்பட்டபின் தமது சொந்த இடத்திற்கு மீளத் திரும்பலாம் என எதிர்பார்த்திருந்த இக்கிராம மக்களுக்கு இதுவரையில் ஏமாற்றமே மிஞ்சியுள்ளது. இக்கிராமத்திற்கு சமீபமாக உள்ள 'பூக்குளம்' என்ற சிங்கள கிராம மக்களும், கரடிக்குழி, மறிச்சுக்கட்டி ஆகிய முஸ்லிம் கிராம மக்களும் சகல வசதிகளுடனும் மீளக்குடியேற அனுமதிக்கப்பட்டு விட்டனர். ஆயினும் முள்ளிக்குள மக்கள் மீளக்குடியமர கடற்படை மறுப்புத் தெரிவித்து வருகின்றது. முள்ளிக்குள கிராமம் முழுவதும் ஆக்கிரமிக்கப்பட்டு வடமேற்கு கடற்படை கட்டளைத் தலைமையகம் என மாற்றப்பட்டுள்ளதுடன் இப்பகுதி மக்களை முள்ளிக்குளத்திலிருந்து வடக்காக 20 கி.மீ தொலைவிலுள்ள கரையோரத்தில் குடியேற்ற நிர்ப்பந்திக்கின்றனர்.

'காயாக்குழி' என்ற இடத்தில் குடியமரும் முள்ளிக்குள மக்களுக்கு குடும்பம் ஒன்றிற்கு 50 ஆயிரம் ரூபாவும் 1 ஏக்கர் வயல் காணியும் வழங்கப்படுமென அமைச்சர் ரிஷாத் பதியுதீன் உறுதியளித்துள்ளார் என பத்திரிகைச் செய்திக்குறிப்பு (19.07.2012 – உதயன்) ஒன்று கூறுகின்றது.

முள்ளிக்குள மக்களுக்கு காயாக்குழியில் வெட்டும் சவக்குழிக்கான முன் அறிவிப்பு இது எனலாம். சிங்கள (பூக்குளம்), முஸ்லிம் குடியிருப்புகளுக்கு அனுமதியளித்துவிட்டு தமிழ்க் கிராமமான முள்ளிக்குள மக்களை மட்டும் வேறு இடத்திற்கு இடமாற்றுவதற்கான சதியின் பின்னணி என்ன? முள்ளிக்குளத்தை முழுவதும் கடற்படை கட்டளைத் தலைமையகமாக மாற்றியதன் நோக்கம் என்ன என்பதைக் கண்டறிவது அவ்வளவு கடினமல்ல.

**புவியியல் பின்னணி**

மன்னார் மாவட்டத்தில் தென் எல்லையோரமாக அனுராதபுரம், புத்தளம் ஆகிய மாவட்டங்களில் எல்லையை அண்டி மடுரோட், கொண்டச்சி, தம்பபன்னி, மரமுந்திரிகைப் பண்ணைக் குடியிருப்பு இவைகளை இணைத்து மன்னார் மாவட்டத்தின் தென் எல்லையில் சிங்கள பிரதேச செயலர் பிரிவு ஒன்றினை ஏற்படுத்துவதற்கான ஒரு திட்டமிட்ட ஏற்பாடாகவே இந்த முள்ளிக்குள ஆக்கிரமிப்பைப் பார்க்க முடியும். தென் எல்லையில் முஸ்லிம் பிரதேச செயலகப் பிரிவில் அடங்கும் முள்ளிக்குளம் என்ற கிராமம் வளமிக்கதும் (விவசாயம், மீன்பிடி, காட்டுவளம்) முற்றிலும் தமிழ்க் கத்தோலிக்கர்களைக் கொண்ட ஒரு கிராமமாகும். இக்கிராமத்தை கையகப்படுத்தி இங்குள்ள மக்களை வேறு இடத்திற்கு குடியமர்த்திவிட்டால் அமையவுள்ள சிங்கள பிரதேச செயலகப் பிரிவுக்கு சௌகரியமாக அமையும் என்ற அடிப்படையிலேயே இக்கிராமம் இன்று கடற்படைத் தளமாக மாற்றப்பட்டுள்ளது.

**எல்லைப்பகுதியில் சிங்களக்குடியேற்றம் - போரின் முன்**

மன்னார் மாவட்டத்தின் தென் எல்லையோரமாக அமைந்துள்ளது புத்தளம் மற்றும் அனுராதபுர மாவட்டத்தின் எல்லைப் பகுதிகளாகும். 'வில்பத்து சரணாலயம்' இப்பகுதியிலேயே அமைந்துள்ளது. சனச்செறிவு குறைந்த ஒரு பகுதியாகவும், காடுகளாகவுமே இப்பகுதிகள் காணப்படுகின்றன. முஸ்லிம் மக்களைப் பெரும் பான்மையினராகக் கொண்ட முசலி பிரதேச செயலர் பிரிவும் இப்பகுதியிலேயே உள்ளது. நானாட்டான் பிரதேச செயலக பிரிவிலடங்கிய மடுரோட், குஞ்சுக்குளம் ஆகிய பகுதிகளும் இம்மாவட்டத்தின் எல்லையோரமாகவே அமைவு பெற்றுள்ளன. இப்பகுதிகளை சிங்களப் பிரதேசங்களாக மாற்றும் முயற்சிகள் இன்று நேற்று ஏற்பட்டதல்ல அன்று அம்பாறையில் 'திகாமடுல்ல' திருகோணமலையில் 'பதவியா' இன்று முல்லைத்தீவில் 'வெலிஓயா' உருவாக்கம்போல இப்பகுதிகளும் முந்திரிகைப்பண்ணை அபிவிருத்தி என்ற போர்வையில் 1970களையடுத்து சிங்கள மயமாக்கும் முயற்சிகள் முன்னெடுக்கப்பட்டன.

மடுரோட் மடு வீதியில் மரமுந்திரிகைப் பண்ணை ஒன்றும் கொண்டச்சியில் 6000 ஏக்கர் பரப்பில் இன்னொரு பண்ணையும் 1972இல் ஆரம்பிக்கப்பட்டன. இதன் விளைவு மடுரோட் என்ற இடத்தில் சிங்களக் குடியேற்றமும், பௌத்த விகாரை, சிங்களப் பாடசாலை ஆகிய குடியிருப்பு பண்புகளோடு உருவாகியது. கொண்டச்சியில் ஆறாயிரம் (6000) ஏக்கர் பரப்பில் மரமுந்திரிகையும், வேலையாட்களுக்கென விஜய தொகுதி, குவேனி தொகுதி, பராக்கிரம தொகுதி, அபயதொகுதி, தம்பபன்னித் தொகுதி, விக்கிரம தொகுதி, மகாசேன தொகுதி என ஏழு குடியிருப்புத் தொகுதிகளும், சிங்களப் பாடசாலை, பௌத்த விகாரை, கூட்டுறவு மொத்த விற்பனை நிலையம் ஆகியவற்றுடனான குடியிருப்பு வளர்ச்சிபெற்று வந்தது. கொண்டச்சியிலிருந்து தெற்காக புத்தளம், அனுராதபுரம் வீதியுடன் வில்பத்து சரணாலயம் ஊடாக அமைக்கப்பட்டு மிக இரகசியமான முறையில் குடியேற்ற முயற்சிகள் இடம்பெறலாயின. எனினும் 1983இல் ஏற்பட்ட கலவரமும், 1990இல் கொண்டச்சி முகாம் தகர்ப்பும் இந்தச் சிங்கள குடியிருப்புக்களை இல்லாதொழித்தன.

**போரின் பின்னரான காலப்பகுதி**

2009இல் போர் முடிவுக்கு வந்த கையோடு அவசர அவசரமாக வடக்கில் குறிப்பாக வன்னிப் பகுதிகளில் முடியுமானளவில் நிலங்களை பல்வேறு வழிகளில் ஆக்கிரமிக்கின்ற வேலைகளில் அரசு இறங்கியது. பௌத்த விகாரைகள் கட்டுதல், அரச மரங்களை நாட்டுதல், நினைவுத் தூபிகளை நிறுவுதல், தென் பகுதி உல்லாசப் பயணிகளுக்கான இடைத்தங்கல் விடுதிகளை அமைத்தல், காட்டுப்பகுதிகளில் இரகசியமான முறைகளில் பெரும் படைத்தளங்களை அமைத்தல், அத்துடன் சிங்கள குடியேற்றங்களை மீள ஆரம்பித்தல் என்ற வகையில் பெருந்தொகையான நிலங்களை அரசாங்கம் இன்று அரச படைகளின் உதவியுடனும் பிக்குகளின் உதவியுடனும் அபகரித்துள்ளது.

இந்த வகையில் மன்னார் மாவட்டத்தில் மடுரோட், புதுப்பொலிவு பெற்ற பெரிய குடியேற்றமாக பரிணமித்துள்ளது. மடுரோட் சந்தியில் வில் வளைவுடன்கூடிய பௌத்த விகாரை, சிங்களப் பாடசாலை உட்பட வங்கி ஒன்றின் உதவியுடன் பல வீடுகள் கட்டப்பட்டு சிங்கள மக்கள் குடியேற்றப்பட்டுள்ளனர். பறையனாலங்குளம் சந்தியிலிருந்து கட்டையடம்பன் வரையிலான (5 கி.மீ நீளமானது) மன்னார் - மதவாச்சி வீதியில் இரு மருங்கிலும் பல கொட்டில்கள் போடப்பட்டு பொலிஸ் நிலையம் இராணுவ காவலரண்களின் உதவியுடன் இந்த குடியிருப்பு பாதுகாக்கப்பட்டு வருகின்றது.

கொண்டச்சி மரமுந்திரிகைப் பண்ணை மீண்டும் ஆரம்பிக்கப்படுவதற்கான முயற்சிகளும் முடுக்கி விடப்பட்டுள்ளன. புத்தளம் - அநுராதபுரம் வீதியிலிருந்து தந்திரிமலையூடாக செட்டிகுளம் வரையிலான வீதியும் புனரமைக்கப்பட்டு இன்று பாவனையில் விடப்பட்டுள்ளன. மேலும் மடுரோட்டிலிருந்து மேற்காக காடுகள் வழியே குஞ்சுக்குளத்தை ஊடறுத்தும் வீதிகள் செப்பனிடப்பட்டு வருவதாகவும் தகவல்கள் தெரிவிக்கின்றன. புத்தளத்திலிருந்து வடக்காக சிலாபத்துறை வரை கரையோர வீதி சிலாபத்துறை முதல் முருங்கன் வரையிலான வீதி என்பனவும் புனரமைக்கப்பட்டாயிற்று. இவ்வாறான துரித அபிவிருத்தி நடவடிக்கைகளை அவதானிக்கின்றபோது மன்னார் மாவட்டத்தின் தென் எல்லையோரமாக சிங்களப் பிரதேச செயலர் பிரிவு ஒன்று ஆரம்பிக்கப்படுவதற்கான ஏற்பாடுகள்போலவே அமைவதாக இப்பகுதியிலுள்ள பலரும் அச்சம் தெரிவித்துள்ளனர். இதன் ஒரு பகுதியாகவே முள்ளிக்குளம் என்ற கிராமத்தின் சர்ச்சையினையும் நோக்க வேண்டியுள்ளது.

**முள்ளிக்குளம் இடப்பெயர்வு**

1990இல் இடம்பெயர்ந்திருந்த முள்ளிக்குள மக்கள் 2004இல் ஏற்பட்ட அமைதியுடன்படிக்கையின் பின்னர் மீளக்குடியமர்ந்தனர். எனினும் 2007இல் போர் தொடங்கியபோது இங்குள்ள மக்களை இராணுவம் வெளியேற்றி, சில தினங்களின் பின்னர் மீளக்குடியமர அனுமதிக்கப்படுவர் என கூறப்பட்டதாகவும், எனினும் யுத்தம் முடிந்து மூன்று வருடங்கள் கழிந்துவிட்ட நிலையில் இப்பகுதி கடற்படைத்தளமாக மாற்றப்பட்டு விட்டதாகவும், அங்கு மக்களைக் குடியேறவிடாது படைத்தரப்பு மறுத்து வருவதாகவும் கூறப்படுகிறது. ஆயினும் மன்னார் ஆயர் அவர்கள் எடுத்துக்கொண்ட அயராத முயற்சியின் பயனாக மக்கள் ஒருவாறு அப்பகுதிக்குச் செல்ல அனுமதிக்கப்பட்டபோதிலும் தமது சொந்த வீடுகளில் அவர்களை குடியேறவிடாது அருகிலுள்ள காட்டுப் பகுதியில் 'மலங்காடு' என்ற இடத்தில் தற்காலிக குடிசைகளை அமைத்து வாழும்படி நிர்ப்பந்திக்கப்பட்டுள்ளனர்.

இன்று ஏறத்தாழ 212 குடும்பங்கள் வரையில் மலங்காடு என்ற இடத்தில் தற்காலிக குடிசைகளை அமைத்து எதுவித அடிப்படை வசதிகளுமின்றி வாழ்ந்து வருகின்றனர். சுமார் 2500 ஏக்கர் வரையிலான நெற்காணிகள் சிங்களவர்களால் பயன்படுத்தப்படுவதாகவும் வீடுகளில் படைகள் நிலை கொண்டுள்ளதாகவும் கடற்பகுதியில் மீன் பிடிக்க அனுமதிக்கப்படவில்லை எனவும் அங்குள்ளவர்கள் கூறுகின்றனர். தற்காலிக பாடசாலை ஒன்று குறித்த பகுதியில் 90 மாணவர்களுடன் அடிப்படை வள வசதிகளின்றி இயங்குவதாகவும் ஆலயத்திற்கு அனுமதி பெற்றே வழிபடவேண்டியிருப்பதாகவும் கூறுகின்றனர்.

இக்கிராமத்தை சேர்ந்த பல வறிய குடும்பங்கள் அரசியல்வாதிகளால் ஏமாற்றப்பட்டு 'காயாக்குழி' என்ற இடத்தில் குடியமர்த்தப்பட்டுள்ளனர். வேறு வழியின்றி இப்பகுதியில் தாம் வாழவேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளதாகவும் அப்பகுதி மக்கள் கூறுகின்றனர். எப்பாடுபட்டாவது முள்ளிக்குள மக்களை அகற்றி காயக்குழி என்ற இடத்தில் குடியமரவைப்பதுதான் அரசின் கபடத்தனமான செயற்பாடாகவுள்ளது.

([illegible] ஆம் பக்கம்)

# யாரைத் தேடுகிறீர்கள்?

**கி. அருளப்பு, விடத்தல்தீவு, மன்னார்.**

தரை பாயும் ஆறெல்லாம் கடலோடு சேரும்
தாவரங்கள் எல்லாமே கதிரோனை நாடும்
வேரினங்கள் எல்லாமே நீர் இருப்பைத் தேடும்
மன்னுயிர்க்கெல்லாமே இறைவா உன் அருளே வேண்டும்.

மனிதனுடைய வாழ்விலே இறைவனைப் பற்றிய சிந்தனை பிரிக்க முடியாத ஒன்று. ஏனெனில் இறைவனின் அன்பில் நிறைந்து வாழ்பவனே உண்மையான மனிதனாக இருக்க முடியும். இதை உணர்த்துவதுதான் ஆன்மீகம். ஆன்மீகம் என்பது இறைவனைப்பற்றி மட்டும் அறிவதல்ல; இறைவனில் தன்னைக் கண்டு அடுத்தவனில் ஆண்டவனைக் காணும் அற்புதந்தான் ஆன்மீகம். இந்த ஆன்மீகம் நம் ஆண்டவர் யேசு தன்னுடைய வாழ்விலே வாழ்ந்து காட்டிய ஒன்றாக இருக்கின்றது. இத்தகைய ஆன்மீகத்தில் போலித்தனமோ பொறாமைக்குணங்களோ இருப்பதில்லை மாறாக அன்பும் அக்கறையும் மனித நேயமும் மிகுந்திருக்கும்.

ஏனெனில் மனிதன் வாழ்வதற்காக அன்பு செய்கிறான். கடவுளோ அன்பு அன்புசெய்வதற்காக வாழ்கிறார். ஆண்டவரின் வார்த்தையோ என்றென்றும் நிலைத்திருக்கும். இவ்வார்த்தையே உங்களுக்கு அறிவிக்கும் நற்செய்தி என்று புனித பேதுரு கூறுகின்றார் (1பேதுரு 1:25). புல் உலந்துபோம். பூ வதங்கிவிழும். ஆண்டவரின் வார்த்தையோ என்றென்றும் நிலைத்திருக்கும் (ஏசா 40:8).

யேசு அறிவித்த நற்செய்திப் போதனையின் மையக்கருத்து விண்ணரசு. இது கடவுளின் ஆட்சியாகும்! கடவுள்தான் படைப்புலகு அனைத்தையும் ஆண்டு வழிநடத்துபவர் என்னும் உண்மையை அனைவரும் ஏற்று அந்த நம்பிக்கைக்கு ஏற்ப தம் வாழ்க்கையை சீர்படுத்திக்கொள்வதைக் குறிப்பதே கடவுளின் ஆட்சியாகும்.

விண்ணரசின் முழுமை இன்னும் வரவில்லை என்பது உண்மையே! ஆகவேதான் நாம் உமது ஆட்சி வருக என்று இறைவேண்டல் செய்கின்றோம். மத்தேயு 6:10 இப்படிக் கூறுகிறது! எனினும் கடவுளின் ஆட்சியானது ஏற்கனவே தொடங்கிவிட்டது. அந்த ஆட்சியின் முன் சுவையாகவும் தொடக்கமாகவும் இருப்பவர் ஆண்டவர் யேசு. அவர் மக்களுக்கு நலமளிப்பதில் ஈடுபட்டு உவமைகள் வாயிலாக இறையாட்சியின் பண்புகளை விளக்கினார். குறிப்பாக தம் சாவு மட்டும் உயிர்தெழுதல் வழியாக இறையாட்சியின் உண்மையை நிலைநிறுத்தினார்.

இந்த ஆட்சி இன்னும் தன் முழுமையை எய்தவில்லை என்று நற்செய்திகள் யாவும் நமக்கு விபரிக்கின்றன (மத்தேயு 24.24:26). எனவே இறையாட்சியின் நிறைவை எதிர்பார்த்து நாம் ஒவ்வொருவரும் விழிப்பாக இருக்க அழைக்கப்படுகின்றோம்.

யேசுவின் துன்பங்களும் சாவும் உயிர்த்தெழுதலும் விண்ணேற்பும் அவரது மாட்சிமை பெற்ற நிகழ்வைச் சார்ந்தவையாகும். இதைத்தான் யேசு 'எனது நேரம்' என்று குறிப்பிட்டார் (யோவான் 7:6). ஆகவே யேசுவின் நேரம் தோல்வியின் காலம் அல்ல, மாறாக மாட்சிமையுடன் வெற்றிவாகை சூடும் காலம்! அவர் சிலுவையில் உயர்த்தப்பட்டதையும் மாட்சியோடு உயர்நிலை ஏற்றிவைக்கப்பட்டதையும் இந்த நிகழ்வுகள் குறிக்கின்றன.

இயேசு தம் சீடர்களுக்கு பிரியாவிடை உரைகள் வழங்குதற்கு முதல் அவர்களுடைய கால்களைக் கழுவுகின்றார். இந்தக் குறியீடான செயல் வழியாக இரு ஆழமான உண்மைகளை எடுத்துரைக்கின்றார். ஒன்று யேசு மனித மீட்புக்காக இறப்பது கடவுளின் கொடை, இரண்டு பிறருக்கு பணிசெய்வதன் வழியாக நாம் ஒவ்வொருவரும் உயர்வடைகின்றோம் என்பதைக் குறிக்கின்றது.

யேசு வழங்கிய வெவ்வேறு பிரியாவிடை உரைகள் அவர் ஏற்கனவே தொடக்கிவைத்த திருச்சபை என்னும் இயக்கம் அவரது மண்ணக வாழ்வுக்குப்பின் எவ்வாறு தொடர்ந்து இயங்க வேண்டுமென்பதன் எதிர்பார்ப்பாக உள்ளது. அதாவது கடவுள்மீது நாம் நம்பிக்கைகொள்ளவும், யேசு தந்தையையும் மனுக்குலம் முழுவதையும் அன்பு செய்ததுபோல நாமும் ஒருவரை ஒருவர் அன்புசெய்து தூய ஆவியிடம் இருந்து வரும் கொடைகளைப்பெற்று வழிநடக்கவே திருச்சபையை அவர் நிறுவினார். இதற்காகவே அவர் தந்தையிடம் தம்மை மாட்சிமைப்படுத்த வேண்டுகிறார். தம் சீடர்களும் ஒன்றாய் இருக்க வேண்டுமென மன்றாடுகின்றார். சீடர்களின் வார்த்தை வழியாக தம்மிடம் நம்பிக்கைகொள்வோரையும் அவர் மறைக்கவில்லை. அவர்களும் நாம் ஒன்றாய் இருப்பதுபோல தமக்குள் ஒன்றாய் இருக்கும்படி அவர் இறைவனை வேண்டுகின்றார்.

எனவே கிறிஸ்தவர்கள் என்ற முறையில் நம் வாழ்விற்கும் வாழ்க்கைச் சூழலுக்கும் இறைவார்த்தைகள் ஓர் அச்சாணி போன்றவை. நாம் ஏதோ வந்தோம், இருந்தோம், வாழ்ந்தோம் சுகமெல்லாம் அனுபவித்துவிட்டுச் சென்றோம் என்பதற்காக நாம் படைக்கப்படவில்லை. நம் ஒவ்வொரு நடவடிக்கைகளுக்கும் நாம் கடவுளுக்கு கணக்கு கொடுக்க வேண்டும். நம் ஒவ்வொரு செயல்களுக்கும் எதிர்பார்ப்பும் உண்டு. நம்மிடம் கொடுக்கப்பட்டவைகள் பிறருக்கு பகிர்ந்தளிக்கப்பட்டதா? என்ற கேள்வியும் நமக்குண்டு. நம்முடைய ஆன்மாக்கள் நம்முடைய விருப்பம்போல் நடத்தப்பட வேண்டிய ஓர் உடமை அல்ல! அது கடவுளிடம் இருந்து வந்தது; கடவுளுக்குரியது; கடவுளிடமே திரும்பி ஒப்படைக்கப்படவேண்டியது. அதை நாம் கவனமின்றி கையாண்டு கவலையின்றி வாழ்ந்து கொண்டிருக்கின்றோம். திடீரென அந்த நாள் வரும். அது எந்நேரம் என்று நமக்குத் தெரியாது. எனவே கடவுள் நமக்குத் தருகின்ற ஒவ்வொரு வினாடியையும் ஒரு கொடையாக, அருள் அடையாளமாக நன்றியோடு ஏற்றுக்கொள்வோம். கடவுளுடைய ஆட்சியின் நிறைவு எந்நேரத்திலும் வரக்கூடும் என்னும் எதிர்பார்ப்போடு தயார் நிலையில் நாம் வாழ்வோம். ■


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**உலகத் திருச்சபைச் செய்திகள்**

## உலகிலேயே மிகப்பெரும் கிறிஸ்தவ நிகழ்வு

# இயேசுவுக்காக ஊர்வலம்

# ஒரு மில்லியன் பேர் பங்கேற்பு



பிரேஸிலின் சாயோ போலோ நகரில் அண்மையில் இடம்பெற்ற இயேசுவுக்காக ஊர்வலம் நிகழ்வில் ஒரு மில்லியனுக்கும் அதிகமான கிறிஸ்தவர்கள் பங்கேற்றனர். இந்த ஊர்வலமானது உலகிலேயே மிகப்பெரிய கிறிஸ்தவ நிகழ்வாக விபரிக்கப்படுகிறது.

பிரேஸிலில் இயேசுவுக்காக ஊர்வல நிகழ்வு 1993 ஆம் ஆண்டிலிருந்து வருடாந்தம் இடம்பெற்று வருகிறது.

## இலங்கையில் 6வது அசிப்பா பொது மாநாடு ...

1ம் பக்கத் தொடர்ச்சி

இம்மாநாடுகளுக்கு பிரதிநிதிகளாக தெரிவுசெய்யப்படும் ஆசியாவைச்சேர்ந்த அனைவரும் மூன்று வருடத்திற்கு ஒருமுறை ஒன்றுகூடி தங்களுடைய பணியின் அனுபவங்களை பகிர்ந்தும் ஏனையவர்களை ஊக்குவித்தும், மற்றவர்களின் புதிய அனுபவங்களை தெரிந்துகொள்வதும் இதன் நோக்கமாயுள்ளது. இவ்வாறு அனைத்து ஆயர்கள், குருக்கள், துறவியர், பொதுநிலையினர் அனைவரையும் இச்செயற்பாட்டில் ஆர்வத்துடன் பங்குகொள்ள தூண்டுவதும் இவ்வொன்றுகூடல்களின் எண்ணமாயுள்ளது. முன்னைய மாநாடுகள் தாய்லாந்து (1996,2000) தென் கொரியா (2003), இந்தியா (2006) மற்றும் பிலிப்பைன்ஸ் (2009) ஆகிய நாடுகளில் இதுவரை நடைபெற்றுள்ளன.

இந்நிகழ்வானது தேவத்தை இலங்கை மாதா பசிலிக்காவின் நடைபெற்ற சிறிய கிறிஸ்தவ குழுமத்தின் பேரணியுடன் நிறைவு பெற்றது. இந்நிகழ்விற்கு அதிமேதகு கர்தினால் மல்கம் ரஞ்சித் அவர்கள் தலைமைதாங்கினார். இப்பேரணியின் ஒன்றுகூடலில் இலங்கையின் அனைத்து ஆயர்களும் அன்பியப் பணியாளர்கள் மற்றும் அன்பிய அங்கத்தவர்களும் தம் மறைமாவட்டத்தின் சார்பாக கலந்துகொண்டார்கள்.

இலங்கையில் முதலாவது அசிப்பா ஒன்றுகூடல் 1995ல் நடைபெற்றது. 1996இல் வெளியிடப்பட்ட இலங்கை கத்தோலிக்க ஆயர்களின் கூட்டு மேய்ப்புப்பணி திருமுகத்தில் அசிப்பாவானது இலங்கையில் பங்கேற்புத் திருச்சபையினை கட்டியெழுப்பும் கருவியாகத் திகழும் என்றும், இலங்கைக்கான தேசிய மேய்ப்புப்பணித் திட்டம் என்றும் குறிப்பிட்டிருந்தனர். அன்று முதல் அனைத்து மறைமாவட்டங்களும் தமது மறைமாவட்டங்களில் சிறிய கிறிஸ்தவ குழுமங்களை (அன்பியங்களை) உருவாக்குவதில் ஆர்வம் காட்டி வருகின்றனர்.

## மனமாற்றம் இன்றும் நடைபெறுகின்றது!

## பிரிட்டிஷ் பிரதமரின் முன்னாள் காதலி தற்பொழுது அமெரிக்காவில் அருட்சகோதரி

பிரிட்டிஷ் பிரதமர் டேவிட் கமரூனின் முன்னாள் காதலியான லௌரா அட்சீத் அமெரிக்காவில் தற்பொழுது அருட்சகோதரியாக பணிபுரிந்து வருகின்றார்.

1990களில் லௌரா கன்சர்வேட்டிவ் கட்சியின் உறுப்பினராக இருந்த காலப்பகுதியிலேயே இருவரும் காதலித்துள்ளனர். அரசியலில் இருந்து வெளியேறிய லௌரா விளம்பர நிறுவனம் ஒன்றில் பணியாற்றியதுடன் மதுபோதைக்கும் அடிமையானவராக இருந்து இறுதியில் தன் வாழ்வை ஆண்டவருக்கு ஒப்புக்கொடுத்தார். ஆசீர்வாதப்பர் சபையில் இணைந்து ஒரு அருட்சகோதரியாக மாறி தற்பொழுது அமெரிக்காவில் மூடிய கன்னியர் இல்லத்தில் (Cloistered Convent) 36 கன்னியர்களோடு வாழ்ந்து வருகின்றார்.

அவர் ஒக்ஸ்போட் பல்கலைக்கழகத்திலேயே கமரூனைச் சந்தித்துள்ளார். பின்னர் அரசியலில் இணைந்து அதில் இருந்து வெளியேறி பிலால் பெடியாவிலுள்ள வர்த்தக பாடசாலையில் கல்விகற்றுள்ளார். அதனைத் தொடர்ந்து விளம்பர நிறுவனம் ஒன்றின் நிறைவேற்று அதிகாரியாக பணியாற்றிய அவர் பின்னர் அழுத்தங்கள் வெறுப்புக்கள் காரணமாக மதுபோதைக்கு அடிமையாகி தற்பொழுது அருட்சகோதரியாகியுள்ளார்.

சிலரை சந்தித்தல், திருமணம் செய்தல், குழந்தைகள் பெற்றுக்கொள்ளுதல் போன்ற சாதாரண வாழ்க்கைப் படிமுறையில் எனது வாழ்க்கை தொடரும் என்றே நான்



நம்பினேன். ஆனால் அப்பாதையை கடவுள் எனக்கு வழங்கவில்லை என அருட்சகோதரி ஜோன் மேரி என தற்போது அழைக்கப்படும் லௌரா கூறுகின்றார்.

## இந்தியாவின் மிக உயரமான 33 அடி உயர யேசுநாதர் சிலை



இந்தியாவிலேயே மிக உயரமான யேசுநாதர் சிலை கேரளாவில் உள்ள பொறியியல் கல்லூரி ஒன்றில் நிறுவப்பட்டுள்ளது. தலைநகர் திருவனந்தபுரத்தில் உள்ள ஒரு பொறியியல் கல்லூரியில் நிறுவப்பட்டுள்ள இந்த யேசுநாதர் சிலை 33.5 அடி உயரத்தில் வெள்ளை நிறத்தில் உருவாக்கப்பட்டுள்ளது. கேரளாவைச் சேர்ந்த பிரபல கலை இயக்குநரும், சிற்பியுமான பிரேமசந்திரன் என்பவர் இந்தச் சிலையை உருவாக்கி உள்ளார்.

பைபர், மெழுகு உட்பட பல்வேறு பொருள்களை கொண்டு உருவாக்கப்பட்டுள்ள இந்தச் சிலையை 35 நாள்களில் 30 தொழிலாளர்கள் துணையுடன் இந்த சிற்பி வடிவமைத்துள்ளார்.

சிலை 22.5 அடி உயர பீடத்தில் நிறுவப்பட்டுள்ளது. இந்தச் சிலையை பேராயர் மோரான் மார் திறந்துவைத்தார்.

இந்தக் கல்லூரியில் படித்த மிதுன் என்ற மாணவர் சாலை விபத்தில் உயிரிழந்ததை அடுத்து அவரது பெற்றோரின் வேண்டுகோளுக்கு இணங்கவே இந்த யேசுநாதர் சிலை உருவாக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## முகமது நபி தொடர்பான திரைப்படத்தின் எதிரொலி!

## பாகிஸ்தானில் கிறிஸ்தவ பாடசாலையும் தேவாலயமும் தீக்கிரை






அமெரிக்காவின் இஸ்லாமுக்கெதிரான திரைப்படத்திற்கு எதிர்ப்புத் தெரிவித்து வடமேற்கு பாகிஸ்தானில் இடம்பெற்ற ஆர்ப்பாட்டத்தின்போது 82 வருடம் பழமை வாய்ந்த தேவாலயமும் அதனுடன் இணைந்த பாடசாலையொன்றும் நூற்றுக்கணக்கான கலகக்காரர்களால் தீயிட்டு கொளுத்தி எரிக்கப்பட்டுள்ளன.

இச்சம்பவத்தையடுத்து சிறுபான்மையினரான கிறிஸ்தவ மதத்தினரிடையே பதற்றநிலை உருவாகியுள்ளது.

கடந்த செப்ரம்பர் 21ஆம் திகதி அன்று 'முஸ்லிம்களின் அப்பாவித்தனம்' என்னும் திரைப்படத்திற்கு எதிர்ப்புத் தெரிவித்து மேற்கொள்ளப்பட்ட ஆர்ப்பாட்டங்களின்போது பெஷாவார் நகருக்கருகில் உள்ள மார்டன் நகரிலுள்ள லூதேரன் திருச்சபையைச் சேர்ந்த சென் போல் தேவாலய நுழைவாயிலை உடைத்துக்கொண்டு உள்நுழைந்த கலகக்காரர்கள் அத்தேவாலயத்தினை தாக்கி தீயிட்டு எரித்துள்ளனர்.

இதேவேளை பாதிரிமார்களின் கார் மற்றும் மோட்டார் சைக்கிள் போன்ற வாகனங்களும் அசையாத சொத்துக்கள் பலவும் கலகக்காரர்களால் சேதமாக்கி அழிக்கப்பட்டுள்ளன. அத்துடன் பாதிரியொருவரின் 17 வயதுடைய மகனையும் கலகக்காரர் தாக்கியதில் அச்சிறுவன் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளான்.

21.09.2012 அன்றிலிருந்து அச்சுறுத்தலுக்குள்ளாகியும், தேவாலய சொத்துக்களுக்கு பாதுகாப்பு வழங்குமாறு உள்நாட்டு நிர்வாகத்திடம் கோரிக்கை விடுத்துள்ளோம் என பாகிஸ்தானின் வடபகுதியிலுள்ள தேவாலயங்களின் - குழுச்செயலாளர் தெரிவித்துள்ளார்.

ஆயினும் ஆயுததாரிகளின் தாக்குதலை கட்டுப்படுத்த இப்பாதுகாப்பு போதுமானதாக இல்லையெனவும் தெரிவிக்கபடுகின்றது. தாக்குதல்களை மேற்கொண்டவர்கள் துப்பாக்கிச்சூட்டைக் கடுமையாக மேற்கொண்டதுடன் மண்ணெண்ணை ஊற்றியும் தீமூட்டினர். பைபிள் மற்றும் பிரார்த்தனை நூல்களும் எரிக்கப்பட்டன. உடனடியாக தாங்கள் தீயணைப்பு படையினரை வரவழைத்ததாக கிறிஸ்தவ குருமார்கள் தெரிவித்தனர்.

ஆனால் கலகக்காரர்கள் தீயணைப்புப்படையினரை உள்ளே நுழையவிடாது தடுத்துநிறுத்தி அவர்கள்மீதும் தாக்குதல்களை மேற்கொண்டதாகவும் அவர்கள் தெரிவித்தனர்.


## இயேசு பிறந்த பெத்லகேம் உலக பாரம்பரியச் சின்னமாகிறது



மேற்குக் கரையிலுள்ள பெத்லகேம் நகரை உலக பாரம்பரிய பகுதியாக யுனெஸ்கோ எனப்படும் ஐக்கிய நாடுகளின் கல்வி விஞ்ஞான பண்பாட்டு நிறுவனம் பிரகடனம் செய்துள்ளது.

இயேசுநாதர் பிறந்த இடமாகக் கிறிஸ்தவர்களால் கருதப்படும் பெத்லகேமை புனரமைப்பதற்கும் நிதியுதவி வழங்கவும் யுனெஸ்கோ அங்கீகாரம் வழங்கியுள்ளது. எனினும் இந்தத் தீர்மானத்திற்கு எதிர்ப்பு தெரிவித்துள்ள அமெரிக்கா மற்றும் இஸ்ரேல் ஆகிய நாடுகள் இதுவொரு அரசியல் மயமாக்கப்பட்ட ஒன்றென குறிப்பிட்டுள்ளன. உலகப் பாரம்பரிய குழுவிலுள்ள 21 உறுப்பு நாடுகளில் 13 நாடுகளும் இதற்கு ஆதரவாக வாக்களித்துள்ளன என சர்வதேசத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# அதிர்வுகள்.....!

## அருட்பணியாளர் அன்புராசா (அமதி) எழுதும்

### சமகால சமூக அரசியல் ஆன்மீகம் சார்ந்த தொடர் 14.

**மன்னிக்க பழகிக்கொள்ள, நம்மைப் பழக்கிக்கொள்ள வேண்டும்**

ஓய்வுநிலை ஆசிரியர் ஒருவர் அதிர்வுகள் தொடரினை வரி விடாமல் வாசிக்கின்ற ஓர் அன்பர். ஓரிரு வாரங்களுக்கு முன்னர் என்னைச் சந்தித்தபோது, "உங்களின் கட்டுரைகளை வரிவிடாமல் வாசித்து அனுபவிக்கிறேன். அதேவேளை, வரிகளுக்கிடையிலும் நீங்கள் சொல்வதையும் புரிந்துகொள்கிறேன். ஆனால், நாம் மன்னிக்கவும் பழகிக்கொள்ள, நம்மைப் பழக்கிக்கொள்ள வேண்டும்தானே!..." எனக் கனிவான வேண்டுகோள் விடுத்து என் கவனத்தை ஈர்த்தார்.

எமக்கும் எம்மக்களுக்கு எதிராகவும் நேரடியாகவோ மறைமுகமாகவோ கைகோர்த்து நின்று செயல்பட்ட, செயற்படுகின்ற திருநிலை(?) சார்ந்தோரையும், திருநிலை சாராதோரையும் மன்னிக்க வேண்டும். இது சரியானதும் சந்தேகத்திற்கு இடமில்லாததுமான கிறிஸ்தவ நெறிமுறையாகும். மகாத்மா காந்தி கூறுவதுபோல 'கண்ணுக்குக் கண் பல்லுக்குப் பல்' என்ற விதியைப் பிற்பற்றுவோராக இருந்தால் நாம் எல்லோரும் ஒற்றைக் கண்ணராகத்தான் மாறியிருப்போம்' என்ற சிந்தனை மனங்கொள்ளத்தக்கது. எனினும் அதனோடு இணைந்த இன்னுமொரு விடயம் இருக்கிறது என்பதை யாரும் 'லேசாக' மறந்து போகக்கூடாது.

**'எழுபது தடவை ஏழுமுறை!...'**

இயேசுவின் இறுதி வேண்டுதல்களில் ஒன்று, "தந்தையே! இவர்களை மன்னியும். ஏனெனில் தாங்கள் செய்வது என்னவென்று இவர்களுக்குத் தெரியவில்லை" (லூாக். 23:34) என்பதாகும். அறிந்து, நன்றாகத் தெரிந்து, வேண்டுமென்றே வாழத்துடிக்கும் ஒரு மக்கள் இனத்தின் இருப்பைக் கேள்விக்குறியாக்கி, அவர்களை எப்படி எல்லாம் அடிமைப்படுத்த முடியுமோ அப்படியெல்லாம் அடிமைப்படுத்தி, செயல்படுகின்றவர்களையும் அதற்குத் துணை போகின்றவர்களையும் எப்படி மன்னிப்பது? எத்தனை முறை மன்னிப்பது? ஏன் மன்னிக்க வேண்டும் போன்ற அடிப்படையான கேள்விகள் உள்ளத்தை இன்னும் குடைந்துகொண்டுதான் இருக்கின்றன.

மேற்சொன்ன வினாவிற்கு, "ஏழுமுறை மட்டுமல்ல, எழுபது தடவை ஏழுமுறை என நான் உனக்குச் சொல்கிறேன்" (மத்.18:22) என இயேசு மேற்கோள் காட்டப்படலாம். கணக்குப் பார்க்காமல் இயேசு இக்கருத்தைச் சொல்லிவிட்டு, நம்மையும் கணக்குப் பார்க்காமல் மன்னிக்கக் கேட்கிறார் போலத்தான் படுகிறது! எது எப்படியிருந்தாலும், 'மன்னிக்க வேண்டும்' என்பதற்கு மாற்றுக்கருத்து இருக்கமுடியாது. எனினும், மன்னிப்பதற்கான மனமும், சந்தர்ப்பமும், சூழலும் அமையவும் வேண்டும் அல்லவா?

**நீதி நிலைநாட்டப்பட வேண்டும்**

எமக்கெதிராகத் தீமை செய்பவர்களை மன்னிக்கவேண்டும். அதேசமயத்தில் உண்மையை மறைக்காமல், தீமையைச் சுட்டிக்காட்டும் துணிபும் வேண்டும், நீதியை நிலைநாட்டத் துணியவும் வேண்டும். உண்மைகள் கண்டறியப்பட்டு ஏற்றுக்கொள்ளப்படும் சந்தர்ப்பத்தில் மன்னிப்பு இயல்பாக இடம்பெறுவது சாத்தியமாகும். "உங்களை வலக் கன்னத்தில் அறைபவருக்கு மறுகன்னத்தையும் திருப்பிக் காட்டுங்கள்" (மத். 5:39) என்கின்ற இயேசு, "நான் தவறாகப் பேசுயிருந்தால் தவறு என்னவெனக் காட்டும். சரியாகப் பேசியிருந்தால் ஏன் என்னை அடிக்கிறீர்?" என கன்னத்தில் அறைந்தவனைப் பார்த்துக் கேட்பதன் பொருளென்ன? என்பதையும் நம் சிந்தனைக்கு எடுத்துக்கொள்ள வேண்டும். இதில்தான் இன்னுமொரு ஆழமான அர்த்தம் பொதிந்திருக்கிறது. இயேசு, "உங்களை வலக்கன்னத்தில் அறைபவருக்கு மறு கன்னத்தையும் திருப்பிக் காட்டுங்கள்" என்றாரே தவிர, 'வலது கன்னத்தில் அறைபவனுக்கு மறு கன்னத்தை திருப்பி, திருப்பி, திருப்பி, திருப்பிக் காட்டுங்கள்' எனக் கூறவில்லை! அத்துடன், 'சரியாகப் பேசியிருந்தால் ஏன் அடிக்கிறீர்?' என நீதியைக் கேட்கத் துணிவுவேண்டும் என்பதையும் எடுத்துக்காட்டுகிறார்.

ஆக, "நீதி நிலைநாட்டும் வேட்கை கொண்டோர் பேறுபெற்றோர்: ஏனெனில் அவர்கள் நிறைவுபெறுவர்" (மத். 5:6) என்றும், "நீதியின் பொருட்டுத் துன்புறுத்தப்படுவோர் பேறுபெற்றோர்: ஏனெனில் விண்ணரசு அவர்களுக்குரியது" (மத். 5:10) எனவும் இயேசு நீதி நிலைநாட்டுவோரையும், நீதிக்காகத் துன்புறுகிறவர்களையும் விசேடவிதமாக நோக்குகிறார். நீதிக்காக உழைப்போருக்கு விண்ணரசு உண்டெண்று இயேசு உறுதியாய் கூறுகிறார் (மத். 5:10).

**'வன்னிப் பயணம்'**

2012ஆம் ஆண்டுத் தொடக்கத்தில் நான்கு தடவைகள் வன்னிப் பிரதேசத்திற்குச் சென்றிருந்தாலும் புதுக்குடியிருப்புக்கு அப்பால் முள்ளிவாய்க்கால் ஊடாக செல்லமுடியாத நிலமையே நிலவியது. 2012, ஆவணி மாதம் முதல்முறையாக முள்ளிவாக்கால் ஊடாக வட்டுவாகல் அடைந்து முல்லைத்தீவுக்குச் சென்றுவரக்கூடியதாக இருந்தது. அங்கு கண்ணில் பட்ட விடயங்களே குருதியை உறைய வைத்தன என்றால் கிராமங்களுக்குள் சென்று பார்த்திருந்தால்...!

எங்கள் மண்ணில் எங்கள் மொழியில் வாசிப்பதற்குக்கூட நாதியில்லையே என்றெண்ணியபோது இதயம் ஒரு கணம் நின்று துடித்தது. இது வெறும் வார்த்தைகள் அல்ல, உடலும் மனமும் அனுபவித்த ஓர் அவல அனுபவம் அது. அறிவிப்புப் பலகைகளில் சிங்களத்திலும் ஆங்கிலத்திலும் மட்டுமே எழுதி வைத்திருக்கிறார்கள்! 1956இல் 'சிங்களம் மட்டும்', எஸ். டபிள்யு. ஆர். டி. பண்டாரநாயக்க மூலம் அறிமுகமானது. 1956ஆம் ஆண்டிலிருந்து இற்றைவரை (2012) சரியாக 56 ஆண்டுகள் கடந்த நிலையில், இக்கொள்கையில் ஒருவாறாக ஒருபடி முன்னேற்றம் கண்டிருக்கிறார்கள்: 'சிங்களம் ஆங்கிலம் மட்டும்' என்று!! இதுதான் சனநாயக சோசலிசக் குடியரசு!!!

**'எலும்பும் இரும்பும்' ஆன முள்ளிவாக்கால் பிரதேசம்**

"முள்ளிவாக்கால் சென்று என்ன பாத்தீர்கள்?" எனப் பலர் உள்நாட்டில் இருந்தவர்களும் வெளிநாட்டிலிருந்து கதைத்தவர்களும் கேட்டார்கள். "எலும்பும் இரும்பும்" என்றேன். "இதைப் பார்க்கத்தானா இவ்வளவு தூரம் சென்றீர்கள்?" எனச் சிலர் விபரம் கேட்டார்கள். என்ன செய்வது முள்ளிவாக்காலின் மிஞ்சிக்கிடப்பது அவைதானே...! இன்னும் சில நாட்கள் சென்றால் அவற்றைக்கூட பார்க்கமுடியாத சூழல்தான் நிலவுகிறது. அவற்றைக்கூட விற்றுப் பிழைத்துக் கொண்டிருக்கிறது 'ஒருவகையான ஜீ(ஆ) வ (தி) ரா (வா) சிக் கூட்டம்'!

அங்கு, எரிந்து குவியலாய் கிடக்கும் இரும்புகளிடம் கேட்டால் நடந்த கதை சொல்லும்! அங்கு, பொசுங்கிப்போன மரங்களிடம் கேட்டால் விளைந்த கொடுமை விளக்கும்! அங்கு சிதறுண்டு சிதைந்துபோய்க் கிடக்கும் வீடுகளைக் கேட்டால் நடந்து முடிந்த கொடூரம் கூறும்! அங்கு நடந்து திரியும் நாய்களிடம் கேட்டால்கூட உண்மைநிலை பகரும். இவற்றைப் பகிர்ந்துகொள்ளும் சுதந்திரம்கூட அங்கு வாழ்கின்ற வன்னி மக்களுக்கு இல்லையே என்பதால்தான் மரங்களிடமும் மாடுகளிடமும் இவற்றைக் கேட்டறியவேண்டி இருந்தது. அந்த மண்ணில் நின்றுகொண்டிருந்தபோது ஒன்று மட்டும் உறுதியாய் மனதை உறுத்திக்கொண்டிருந்தது: இறைவாக்கினன் எசேக்கியல் இறைவாக்குரைத்ததுபோல மரணித்துப்போன இந்த மனிதர்களும் மாண்டுபோன இந்த மனிதமும் ஒருநாள் உயிர்பெற்றெழுவார்கள் என்பதுதான் அது....!!

**காட்சிப் பொருளானோம், அனுதாபத்துக்குரியவரானோம்!**

புதுக்குடியிருப்பைக் கடந்ததும் மந்துவில் என்னுமிடத்தில் 'வோர் மியூசியம்' (War Museum) வைத்திருக்கிறார்கள். ஒரு வீரனை ஒன்பது கோழைகள் கூட்டுச்சேர்ந்து கேவலமாய் தாக்கி கோழைத்தனமாய் கொன்றுவிட்டு தங்கள் 'வீரதீரச் சாதனைகள்' என்று கொக்கரித்துக் கொள்கிறார்கள். இக்கொக்கரிப்பைப் பார்ப்பதற்கு தென்பகுதியிலிருந்து வன்னிப் பிரதேசத்திற்கு மக்கள் படையெடுத்தவண்ணம் இருக்கிறார்கள். அவர்களின் பெரும்பாலானோரின் பார்வைக்கு வன்னி மண்ணும், வன்னி மக்களும் தற்போது 'எக்சிபிசன்' (Exhibition - கண்காட்சி) ஆகியிருக்கிறார்கள். அதாவது வன்னியும் வன்னி மக்களும் ஒருவகையான காட்சிப்பொருளாக மாற்றப்பட்டிருக்கிறார்கள்!

வடக்கிற்கு வரும் தென்பகுதியின் மற்றுமொரு சாராருக்கு இம்மக்கள் 'அனுதாபத்துக்குரியவர்கள்' ஆகியிருக்கிறார்கள். இவற்றுக்கு அப்பால் தென்பகுதியில் இருந்து வருபவர்களால் சிந்திக்க முடியாதுள்ளது. கழிவிரக்கம் கொள்கிறார்களே தவிர, மனம் திறந்து எம்மக்களின் உரிமை வாழ்வுபற்றி அவர்களால் யோசிக்க முடியாதிருக்கிறது. இருப்பினும் அவர்களிடையே ஆங்காங்கே ஒருசில ஜீவன்கள் நம் மக்களின் உண்மை நிலையை உணரத்தான் செய்கின்றன. உணர்ந்து அவர்களால் என்னசெய்ய முடிகிறது?

**நாங்கள் தோற்றுப்போனவர்களா? அவர்கள் வெற்றிபெற்றவர்களா?**

'முள்ளிவாக்காலோடு நாங்கள் தோற்றுப்போனவர்கள்' என நாம் நினைக்கிறோம். 'முள்ளிவாக்காலிலிருந்து நாங்கள் வெற்றிபெற்றுவிட்டோம்' என அவர்கள் நினைக்கிறார்கள். நாங்கள் தோற்றுப்போனவர்களும் அல்ல, அவர்கள் வெற்றிபெற்றவர்களும் அல்ல. அடிப்படை அரசியல் பிரச்சினையைத் தீர்க்க 'போர்' வழியை இரு தரப்பினரும் பின்பற்றியதே இரு சமூகத்தினருக்கும் மிகப்பெரிய இழுக்கும் தோல்வியும்தானே. பின்பு எப்படி ஒருசாரார் மறுசாராரை வெற்றிகொள்ள முடியும்? ஆபிரிக்க நாட்டு சமூகவியலாளர் பவுலே பரேரே என்பவரின் கருத்துப்படி, 'ஒரு சமூகம் அடிமைத்தனத்தில் இருந்து விடுதலை பெறவிரும்பினால் அடிமைப்படுத்துபவரும் அடிமைப்படுத்தப்படுபவரும் அறியாமை என்ற இருளிலிருந்து முதலில் விடுபட வேண்டும்' என்கிறார். அடிமைகளாய் இருக்க நாம் பழகிக்கொண்டோம். அடிமைப்படுத்த அவர்கள் பழகிக்கொண்டார்கள். பின்பு, நம் நாட்டு மக்களுக்கு ஏது விடுதலை? நம் நாட்டுக்கு ஏது சுதந்திரம்?

**இராணுவக் குறைப்புக்குப் பதில், குவிப்பு!**

"நாங்கள் இராணுவத்தால் சூழப்பட்டிருக்கிறோம்" என யாழ். ஆயர் 'காலச்சுவடு' என்ற பத்திரிகையில் சுட்டிக்காட்டியிருப்பதாக பாதுகாவலன் 19.08.2012 அன்று தலைப்புச் செய்தி தீட்டியிருந்தது. "போருக்குப்பின் தமிழர் பகுதிகளில் இருந்துவரும் இராணுவத்தினரின் எண்ணிக்கை குறைக்கப்படும் என எதிர்பார்த்தோம். ஆனால் அப்படி நடக்கவில்லை, இராணுவம் மேலும் அதிகமாகக் குவிக்கப்பட்டிருக்கிறது. அது மக்களின் இயல்பு வாழ்க்கையை முழுமையாகப் பாதிக்கிறது..." எனக் கோடிட்டுக் காட்டியுள்ளார். "நாங்கள் இராணுவத்தால் சூழப்பட்டிருகிறோம்" என்றால், "நாங்கள் இராணுவத்தால் சுற்றிவளைக்கப்பட்டிருகிறோம்' என்றும் அர்த்தம் கொள்ளலாம். வேறென்ன, அதுதானே நடக்கிறது, அதைத்தானே அவர்கள் மிகச் சாதுாரியமாகச் செய்துவருகிறார்கள். அன்றும் அப்படித்தான், இன்றும் அப்படித்தான். இனி அவர்கள் என்றும் அப்படித்தான் இருக்கப்போகிறார்கள் என்பதற்கு இப்போது நடக்கின்ற அரசியல் நகர்வுகளும் இராணுவ நிகழ்வுகளும் கட்டியம் கூறுவதுபோலவே தென்படுகிறது.

(தொடர்ச்சி 14 ஆம் பக்கம்)

# புனிதர்களின் பாதையில்

## புனித செசிலியா

**கன்னி, மறைசாட்சி – (கி.பி. 230)**



மாதமொரு புனிதரை அறிந்துகொள்வோம்

புனித செசிலியாவின் பெயராலே உரோமையில் 5ஆம் நூற்றாண்டில் ஒரு பேராலயம் எழுப்பப்பட்டது. "புனித செசிலியாவின் திருப்பாடுகள்" என்னும் நூலின் காரணமாக இவரது பேரும் புகழும் நாற்றிசையிலும் விரைவில் பரவத் தொடங்கியது. கிறிஸ்தவப் பெண் குலத்தின் ஆபரணமாக இவர் இந்நூலில் காட்டப்பட்டிருக்கிறார்.

முன்பு இருந்த கட்டளைச் செபப் புத்தகத்திலும் இவரைப்பற்றிய சில ஆதாரங்கள் கிடைக்கின்றன. அநேகமாக கி.பி 230ஆம் ஆண்டில் மன்னர் அலெக்ஸாண்டர், செவேரஸ் காலத்தில் இவர் மறைசாட்சியாக மரித்திருக்கலாம் என நம்பப்படுகிறது.

1599ஆம் ஆண்டு இவரது கல்லறை திறக்கப்பட்டது. உயர்ரக சைப்பிரஸ் மரத்தினால் செய்யப்பட்ட பெட்டியில் இவரது உடல் காணப்பட்டது. அஃது அழியாத நிலையில் இருந்தது மாத்திரமன்றி, அப்போதுதான் உயிர் பிரிந்த உடல் போலவும் இருந்தது. ஸ்டீபன் மடெர்னா என்ற சிற்பி இந்த உடலைப் பலமுறை கூர்ந்து கவனித்தபின் பயனாகப் பளிங்குக் கல்லில் இவரது உருவத்தைச் செதுக்கியிருந்தார். மத்திய நூற்றாண்டுகளிலிருந்து "ஆலய கீதங்களுக்கு இவர் பாதுகாவலி"யாகக் கருதப்படுகிறதற்குக் காரணம் பழைய கட்டளை ஜெபப் புத்தகத்தில் "இசைக் கருவிகள் இசைத்து" என்ற சொற்றொடர் காணப்படுவதாகும். இதனால்தான் இவருக்கு இந்தப் பட்டம் சூட்டப்பட்டுள்ளது என்று கருதலாம். வரலாற்று அடிப்படையில் பார்த்தால் இவளைப் பற்றிய தகவல் அதிகம் கிடைப்பதற்கில்லை. பழைய கட்டளை செபப் புத்தகத்திலிருந்து அடியிற் காணப்படும் தகவல்களை நாம் அறிய முடிகிறது.

"இந்த மகிமையான கன்னிப் பெண் எப்பொழுதும் கைகளை விரித்து நூலை எங்கும் எடுத்துச் செல்வார். எப்போதும் கைகளை விரித்து செபம் செய்வார். உடை இவளது உடலை மூடியிருக்கும். ஆனால் உடைக்குக்கீழே முள் ஒட்டியாணத்தால் தன் புலன்களை அடக்கி, இறைவனிடம் கண்ணீரோடு மன்றாடுவார்.

தனது வாழ்நாளெல்லாம் கன்னிமையில் வாழ்வதற்கு வார்த்தைப்பாடு கொடுத்திருந்தார். இவரை விரும்பிய வலேரியன் என்ற வாலிபன் இவரை மணந்துகொள்ள முயன்றார். திருமணம் நிறைவேற அனைத்தும் தயாராயிருந்தன. "இசைக் கருவிகள் எல்லாம் ஒலிக்கப்பட்டன. ஆனால் கன்னி செசிலியா தனது ஒரே மணவாளனாம் ஆண்டவருக்குப் பண் இசைத்தார்.

(தொடர்ச்சி 13ஆம் பக்கம்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருக்குடும்ப சபையின் 150 ஆவது ஆண்டு நிறைவில் மனந்திறந்து!

## திருக்குடும்பச்சபை பொதுநிலையினர் வாழ்வும் பணியும்



திருக்குடும்பச்சபை நிறுவுனர் பெண்கள் துறவற சபையை ஏற்படுத்தமுன்பு பொதுநிலையினர் இளைஞர்கள் வாழ்விலே தன்னை அர்ப்பணித்துக்கொண்டார். பிரான்சிய அரசியற் புரட்சியின் பயங்கர விளைவுகளால் மக்களின் சமய, சமூக, பொருளாதார, அரசியல் வாழ்வு சிதறடிக்கப்பட்டது. குறிப்பாக இறைமக்களின் விசுவாச வாழ்வும் ஆட்டம்கண்டது. இவர்களது விசுவாச வாழ்வை வளப்படுத்துவதற்கு தான் இறைவனிடம் இருந்து பெற்றுக்கொண்ட 'அருங்கொடை'யை மக்களோடு பகிர்ந்துகொள்ள தன்னைக் கையளித்தார். கிறிஸ்து மறையுடல் ஏற்ற மறை உண்மையில் மனிதம் மாண்புற, சிதறுண்ட மக்கள் கிறிஸ்துவிலே இணைந்துகொள்ள **"இறைவன் மாத்திரம்"** என்னும் ஆன்மீகத்தில் நிறைவைக்காண விசுவாசத்தையும் அன்பையும் பரப்பி ஐக்கியத்தில் உறுதியான திருச்சபையை உருவாக்க அழைக்கப்பட்டார்.

நிறுவுனரின் காலத்தில் வாழ்ந்த மக்களின் உலகியல், ஆன்மீகத் தேவைகளுக்கு பதிலிறுத்ததின் மூலம் நிறுவுனரும் அவரது உடன் உழைப்பாளர்களும் விசுவாசத்தைப் பரப்பி உறுதிப்படுத்த சந்தர்ப்பத்தைப் பெற்றனர். அவர் உப தியாக்கோனாக இருந்தபோதே குருத்துவ மாணவர் சிலருடன் சேர்ந்து மறைக்கல்வி வகுப்புக்களை நடாத்தினார். தனது பணியின் ஆரம்பத்திலிருந்தே நற்செய்திப்பணியில் அத்தியாவசியமானதும், ஈடுசெய்ய முடியாததுமான பொதுநிலையினரின் பங்களிப்பை இனம் கண்டுகொண்டார். எல்லாவிதமான கிறிஸ்தவ அர்ப்பணமும் இயேசுக் கிறிஸ்துவிலே கண்டறியப்பட வேண்டுமென்பதில் உறுதி கொண்டிருந்தார். எனவே பியன்வெனு நோஆய் அடிகளார் போர்டோவில் உள்ள 'யூலாலி' பங்கிற்குச் சென்றவுடனே வளர்ந்தோருக்கான நிலைமையின் மறைக்கல்வி வகுப்புக்களை ஒழுங்குசெய்தார். இது எல்லோராலும் விரும்பப்பட்டதாகவும் நன்மதிப்புப் பெற்றதாகவும் இருந்ததோடு விரைவாக எங்கும் பரவியது. பரீஸ் பட்டணத்தில் இந்த வகுப்புக்களினால் கிடைத்த நன்மைகளைக் கண்ட பியன்வெனு போர்டோவிலும் எதிர்பார்த்தார். 1819ம் ஆண்டு கார்த்திகை மாதம் 21ம் நாள் இது இடம்பெற்றது. நோஆய் அடிகள் பல்வேறு நிலையில் உள்ளவர்களை வயது, சமூகநிலை, தகுதி என்பவற்றிக்கேற்ப பிரித்து அவர்களுக்கான ஒழுங்குகளையும் எழுதினார். 1820ம் ஆண்டு இந்த மறைக்கல்வி வகுப்பு ஒரு கழகமாக உருவாகவேண்டுமென்று திருச்சபையின் தலைமைப் பீடத்திலிருந்து அனுமதியைப் பெற்றுக்கொண்டார். அவருடைய இளைய சகோதரி 'வனி' ஆயத்த நிலையில் இருந்தார் என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது. ஒருசில பக்திமுயற்சிகளைப் பயன்படுத்தி செபத்தின் மூலம் முழுக்குழுவுடனும் இணைந்திருந்தார்.

திருக்குடும்பசபையின் பொதுநிலையினர் அழைப்பு என்பது இறைவனிடமிருந்து கொடுக்கப்படும் அழைப்பு. இது இறைவனின் கொடையாக இருக்கின்றது. தமது திருமுழுக்கின் அருளை நிறைவாக வாழ்வதற்கு இந்த ஆன்மீக அப்போஸ்தலிக்க குடும்பத்தில் தம்மை அர்ப்பணிக்கும் அழைப்பு. இவர்கள் திருக்குடும்பத்தின் வாழ்வையும், ஆதிக்கிறிஸ்தவர்களின் வாழ்வையும் தொடர்ந்து வாழ அழைக்கப்படுகின்றார்கள். நம்பிக்கை, சகோதர அன்பு, ஏழ்மை, சாந்தம், தாழ்மை, எளிமை என்னும் பண்புகளைப் பின்பற்றி சபையின் மனப்போக்கில் வாழ்கிறார்கள். இவர்களது வாழ்வில் நற்கருணையும், இறைவார்த்தையும் முக்கிய இடத்தை வகிக்கின்றன. ஓர் அங்கத்தவர் தனது நாளாந்த குடும்ப, சமூக தொழில் அல்லது வேறு ஈடுபாடுகள் சம்மந்தமான வாழ்வினை கிறிஸ்தவ முறையில் வாழ்ந்து தன்னால் இயலுமான வழிகளில் விசுவாசத்தைப் பரப்புவதற்கு தன்னை அர்ப்பணிக்கின்றார். நிறுவுனர் காலத்தில் 2,500 பொதுநிலையினர் வாழ்ந்திருக்கின்றனர். அவரது மறைக்கல்வி வகுப்புக்களில் இணைந்துகொண்ட இளம் பெண்களில் சிலர்தான் துறவிகளாக வரவிரும்பி திருக்குடும்ப சபைக்கு வித்திட்டார்கள்.

# யாழ் மாகாண திருக்குடும்ப பொதுநிலையினர்

யாழ்ப்பாணத்தில் முதன்முறையாக 1977ம் ஆண்டு மானிப்பாயில் இரு அருட்சகோதரிகள் 7 பொதுநிலையினருடன் மானிப்பாய் தியான இல்லத்தில் ஆரம்பித்தார்கள். சபையின் ஆரம்ப அறிவையும், அதன் நோக்கம் ஆன்மீகம் என்பவற்றை அறிமுகம் செய்து அந்த அங்கத்தினரை உருவாக்கினர். காலப்போக்கில் ஒவ்வொரு பங்குத்தளத்திலிருந்தும் சகோதரிகளின் வழியாக அங்கத்தவர்கள் இணையத் தொடங்கினர். இவர்களுக்கென்றே பிரத்தியேகமான கையேடுகள், ஒழுங்கு விதிகள், இவ்வித அழைத்தலில் கொண்டிருக்க வேண்டிய குணாதிசயங்கள், அனுசரிக்கப்படவேண்டிய சட்ட திட்டங்கள் காலத்துக்குக் காலம் உரோமில் நடக்கும் பொதுச்சங்கங்களின் பயனாக அனுப்பப்பட்டு வருகின்றன. சகோதரிகள் பொறுப்பாக இருந்து இவர்களை உருவாக்கி, ஊக்குவித்து, வலுவூட்டி வருகிறார்கள், சபையின் அமைப்புகளுக்குட்பட்டு ஆசியாக்கண்டத் தலைவர், இலங்கை தேசிய தலைவர், வலயங்களின் தலைவர் என்ற ரீதியில் தெரிவுசெய்யப்பட்டு இவர்களுக்குப் பொறுப்பாக இருக்கிறார்கள்.

மாதாந்த ஒன்றுகூடல் அமர்வுகளால் இவர்கள் ஒருங்கிணைந்து பகிர்ந்துகொள்வதால் விசுவாச வாழ்வை உறுதிப்படுத்தி அன்புறவையும் சபையின் ஐக்கியத்தையும் பெற்று தங்களை அர்ப்பணிக்கின்றனர். இவர்களுக்கென்றே பிரத்தியேக **"வாழ்வுக்கு ஒரு வழி"** என்ற ஒழுங்கு நூலும் உண்டு. இதன் சட்டதிட்டங்களை இயலுமானவரை அனுசரித்து வாழ்வர். இவ்வாறு இறை அருளால் பல வழிகளிலும் வளர்ச்சியடைந்த யாழ் - மாகாண பொதுநிலையினர் ஏறத்தாள 650 பேர் மிக்க ஆர்வத்துடன் பணியாற்றுகின்றனர். அத்துடன் 16 வலயங்களை உள்ளடக்கி 43 இடங்களில் தமது அழைப்பையும் பணியையும் விரிவாக்கி தமது அழைத்தலை அர்த்தமுடன் வாழ்கின்றனர். வருடாந்தத் தியானம், ஒன்றுகூடல்கள், சபையின் ஏனைய அழைத்தல் அங்கத்தவர்களுடன் இணைந்து பங்குபற்றும் குடும்ப விழாக்கள், சுற்றுலா, இன்ப துன்ப நிகழ்வுகளில் பங்குபற்றுதல் போன்றவற்றில்தான் பியன்வெனு நோஆய் குடும்பத்தின் உறவைப் பலப்படுத்துகின்றனர். இவர்கள் தங்களுக்கே உரித்தான **"உறவின் பாலம்"** என்னும் ஒரு கைநூலைப் பிரசுரித்து எல்லோருக்கும் பயன்பட பரப்புகின்றனர். யாழ் மாகாணத்தைச் சேர்ந்த, கொழும்பு, தலவாக்கல, மட்டக்கலை, அப்புத்தளை, மட்டக்களப்பு, திருமலை, மன்னார் மாவட்டம், வன்னிப்பகுதி, யாழ் குடாநாட்டு திருக்குடும்ப மடங்கள் இருக்கும் பங்குத்தளங்களைச் சேர்ந்த பொதுநிலையினரின் அர்ப்பணிப்பான வாழ்வாலும், பணியாலும் தலத்திருச்சபை வளம் பெற்று இறைவன் மகிமைப்படுத்தப்படுவாராக. "இறைவனுக்கே மகிமை".

# திருக்குடும்ப துணை அங்கத்துவ குருக்களின் வரலாறு

பீற்றர் பியன்வெனு நோஆய் அவர்கள் திருக்குடும்ப சபையை நிறுவியபொழுது துணை அங்கத்துவ குருக்கள் இருந்தார்கள். 1833இல் திருக்குடும்ப சபை நிறுவுனர் தன் சகோதர குரு அருட்தந்தை ஆமாண்ட் நோஆய் அவர்களின் உதவியோடு ஏழைக் குருக்கள் என்ற பெயரில் குருக்கள் குழுமத்தை அமைத்தார். அவர்கள் குருத்துவத்தை ஆழமான முறையில் வாழவும் ஆயருக்குத் துணையாய் இருந்து மறைப்போதனைகளில் ஈடுபாடுகொண்டு சபை அங்கத்தவர்களுக்கும் துணை புரிவதில் ஆர்வம் உள்ளவர்களாக திகழ்ந்தனர். ஆனால் துர்அதிர்ஸ்டவசமாக இந்தச் சபை நீடிக்கவில்லை. அருட்தந்தையர்கள் 'செறியே' மற்றும் 'மலே' என்பவர்கள் பரீஸ் நகரில் உள்ள அருட் சகோதரிகள் குழுமத்தோடு இணைந்து ஒரு பிரிவினையை உண்டாக்கி ஒரு குழப்ப நிலையை ஏற்படுத்தினர். இதன் விளைவாக குருக்கள் குழுமமும் 1840இல் கலைந்துவிட்டது. மீண்டும் இச்சபையை உருவாக்கும் முயற்சி பயனளிக்காத நிலையில் நோஆய் அடிகள் திருக்குடும்ப துணை அங்கத்துவ குருக்களை இணைத்துக்கொண்டார். இவர்கள் மறைமாவட்ட குருக்களாகவும் குழும வாழ்வு அமைப்பு முறைக்கு உட்படாதவர்களாகவும் இருந்தனர். 1861இல் நோஆய் அடிகள் இறந்தபோது 900 துணை அங்கத்துவ குருக்கள் இருந்தார்கள் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. ஆனால் காலப்போக்கில் இவர்கள் கவனிக்கப்படாமல் இருந்த காரணத்தினால் ஒரு தளர்ச்சி நிலைக்குத் தள்ளப்பட்டனர். ஏறக்குறைய 100 ஆண்டு காலத்திற்கு மேலாக துணை அங்கத்துவ குருக்கள் அருகிப் போயினர்.

2ம் வத்திகான் சங்கத்தின் பின்பு துறவற சபைகள் ஒரு மறுமலர்ச்சியை எதிர்கொண்டன. தங்கள் சபைகளின் ஊற்றுக்குச் செல்ல அழைப்புப் பெற்றனர். திருக்குடும்ப சபையும் இவ்வாறு தமது ஆரம்ப நிலையை நோக்கத் தொடங்கியது. அருட்சகோதரி மாறி போல் முதல்வராக இருந்த வேளையிலே துணை அங்கத்துவ குருக்களை மீண்டும் உருவாக்கும் ஒரு முயற்சியை ஆரம்பித்தார். இம்முயற்சியில் ஈடுபட மாகாண தலைவிகளுக்கும் அறிவுறுத்தல் வழங்கினார். அருட்சகோதரிகளின் முயற்சியால் ஒருசில குருக்களுக்கு இவ்வழைத்தல் பற்றி விளக்கமளிக்கப்பட்டது. 1977இல் அருட்தந்தை J. B தேவராஜா அவர்கள் இலங்கையின் வட பகுதியிலே போரினால் பாதிக்கப்பட்ட மக்கள் மத்தியிலே பணியாற்ற திருக்குடும்ப அருட்சகோதரிகளை அழைத்திருந்தார். ஆர்வத்தோடும் அர்ப்பணத்தோடும் அவர்கள் ஆற்றிய பணி அவரைக் கவர்ந்தது. திருக்குடும்ப சபையைப் பற்றி அறியவும் வாய்ப்புக் கிட்டியது. அதுமட்டுமல்லாமல் தானும் ஒரு திருக்குடும்ப துணை அங்கத்துவ குருவாக அர்ப்பணித்து வாழ முடியும் என்பதைத் தெரிந்துகொண்டார். எனவே அவர் துணை அங்கத்துவ குருவாக தன்னை அர்ப்பணித்துக்கொண்டார். 100 ஆண்டு கால இடைவெளிக்குப் பின்பு முதல் முறையாக ஒரு துணை அங்கத்துவக் குருவாக அர்ப்பணம் செய்தவராக அடிகளார் வரலாற்றிலே ஒரு குறிப்பிடத்தக்க இடத்தைப் பெற்றுள்ளார்.

இதன்பின்பு யாழ் மறைமாவட்டத்தைச் சேர்ந்த அருட்தந்தை J.P. செல்வராஜா அடிகள் திருக்குடும்ப சபையின் அருங்கொடையை அறிந்து 1983 ம் ஆண்டு தன் அர்ப்பணத்தை செய்தார். எனவே ஆரம்ப காலத்தில் இந்த இரு குருக்களும் திருக்குடும்ப சபையின் நிகழ்வுகளிலே பங்குகொண்டு தமது அழைப்பை உறுதிப்படுத்தினர். இதனைத் தொடர்ந்து இந்தியாவில் இருந்து அருட்தந்தையர்கள் சேர்வாசியுஸ் மற்றும் பீற்றர் பெர்னாண்டோ ஆகியோர் யாழ் நகரில் நடைபெற்ற அருட்சகோதரிகளின் பொது அமர்வு, தியானம் ஆகியவற்றிலே உதவி புரியவந்த காலத்திலே சபையைப் பற்றி அறியும் வாய்ப்புப் பெற்றனர். இவர்களும் 1985இல் துணை அங்கத்துவக் குருக்களாகத் தம்மை அர்ப்பணித்தனர். இதனைத் தொடர்ந்து 1987இல் யாழ் புனித பத்திரிசியார் கல்லூரியிலே பணிபுரிந்த அருட்தந்தை பிரான்சிஸ் ஜோசப் அவர்களும் அதே கல்லூரியில் பணிபுரிந்த அருட்தந்தை பேணாட் அவர்களும் 2001ம் ஆண்டிலே துணை அங்கத்துவக் குருக்களாக அர்ப்பணித்தனர். பின்பு 2002இல் அருட்திரு. ஜேக்கப் நீக்கிலஸ் 2004இல் அருட் தந்தையர்கள் மேரி ஜோசப், மைக்கல் சவுந்தரநாயகம், ஜெபரட்ணம் ஆகியோரும் 2006ம் ஆண்டு அருட்தந்தை தேவசகாயம், 2007இல் அருட்தந்தை சேவியர் குரூஸ், 2008இல் அருட்தந்தை மௌலிஸ், 2009இல் அருட்தந்தை X.W. ஜேம்ஸ் அவர்கள், 2012இல் அருட்தந்தையர்கள் எமில் போல் மற்றும் A. P. அந்தோனிப்பிள்ளை ஆகியோரும் அர்ப்பணம் செய்தனர். மட்டக்களப்பு மறை மாவட்டத்தைச் சேர்ந்த அருட்தந்தையர்கள் இன்னாசி ஜோசப் மற்றம் அம்புறோஸ் ஆகியோரும் 2012இல் அர்ப்பணம் செய்தனர். கிழக்கு மாகாணத்தில் இருந்து இவர்களே முதல் முறையாக அர்ப்பணம் செய்த குருக்களாவர். இன்று துணை அங்கத்துவக் குருக்கள் இலங்கையிலே 59 பேர், பிலிப்பைன்ஸ் - 5, இந்தியா – 15, அயர்லாந்து – 1, ஸ்கொட்லண்ட் - 1, வட ஆபிரிக்கா = 2, பிரான்ஸ் - 2, மொத்தமாக – 85 பேர் உள்ளனர்.

முதல் முறையாக 2004இல் சர்வதேச நீதியில் துணை அங்கத்துவக் குருக்கள் கண்டியில் உள்ள O.S.B மொண்ரேபானேர் மடத்தில் ஒன்றுகூடினர். சபையின் தலைவியான அருட்சகோதரி மாக்கிறேட் முல்டுண் மற்றும் அவரது ஆலோசகர்கள், ஏனைய அருட்சகோதரிகளும் சமூகமாய் இருந்து கூட்டத்தை நெறிப்படுத்தினர். துணை அங்கத்துவ குருக்களுகான 4வது ஒழுங்கு யாப்பு வரையறுக்கப்பட்டது. 29 குருக்கள் இதில் பங்குபற்றினர். இரண்டாவது சர்வதேச கூட்டம் பிரான்சில் போர்டோவில் உள்ள மாட்டியாக் தியான இல்லத்தில் 2007ம் ஆண்டில் நடைபெற்றது.

இக்கூட்டத்தில திருக்குடும்பத்தின் ஆன்மீகத்தை ஆழப்படுத்தும் உரைகளும் பயிற்சிகளும் இடம்பெற்றன. சபை நிறுவுனர் பிறந்து வாழ்ந்த இடங்களையும் குறிப்பாக அவரில் ஆன்மீக வாழ்வின் மையமாக இருக்கும் மாட்டியாக் தியானத் தீவையும் கண்டு அனுபவிக்க வாய்ப்புக் கிடைத்தது.

இறுதியாக துணைக் குருக்களின் வளர்ச்சியிலே பெரும் பங்காற்றிய அப்போஸ்தலிக்க அருட்சகோதரிகளின் முதல்வருக்கும் ஏனைய அருட்சகோதரிகளுக்கும் உள்ளம் நிறைந்த நன்றியை தெரிவித்துக்கொள்கின்றோம்.

**அருட்திரு. ஜேக்கப் நீக்கலஸ்**
**இணைப்பாளர்.**
**தகவல்: யூபிலி விழா அமைப்பாளர்,**
**யாழ் மாகாண இல்லம், யாழ்ப்பாணம்.**

### நல்ல பிதாவின் பொன்மொழி :

*திருக்குடும்ப உறுப்பினர்கள் தங்கள் செயல்கள் அனைத்தையும் கருணை, பரிவு, என்னும் ஆடையால் அணிந்திருக்க வேண்டும்.*

### முள்ளிக்குள மக்களின் மீள்குடியேற்ற .........

08ம் பக்கத் தொடர்ச்சி

அரசாங்க அதிபரோ சிங்களவர். முசலி பிரதேச சபை முஸ்லிம் அரசியல்வாதிகளின் செல்வாக்கிற்குட்பட்ட பகுதியாகவும் உள்ளது. இவ்வாறான ஒரு நிலையில் அரசின் கைக்கூலிகளாக தொழிற்படும் வடபகுதி அமைச்சர்கள் குறித்த முள்ளிக்குளம் பகுதியில் மக்கள் மீளக்குடியேற எவ்வித அழுத்தமும் கொடுக்காது கைக்கூலித்தனம் பண்ணும் ஒரு நிலையே அங்கு காணப்படுகின்றது.

எத்தகைய தடைகள் வரினும் தமது சொந்த இடத்தினை விட்டுக்கொடுக்கப்போவதில்லையென அங்கு குடியேறியவர்கள் உறுதியுடன் இருக்கின்றனர். சலுகைகளைக் காட்டி அங்குள்ள மக்கள் வேறு இடத்திற்கு நகர்த்தப்படுவார்களாயின் அப்பகுதியில் உருவாக்கப்படும் சிங்களப் பிரதேச செயலர் பிரிவு எளிதாக தோற்றம் பெற்றுவிடலாம். சிங்களப் பிரதேச செயலர் பிரிவு மன்னாரின் தென் எல்லையோரத்தில் உருவாகுமாயின் அது இன்னொரு 'திகாமடுல்ல' வாக மாறி தமிழ் மக்களைவிட முஸ்லிம் மக்களே அதிக சிரமத்திற்கு உள்ளாவார்கள் என்பதையும் எச்சரிக்கையுடன் கூறி வைக்க விரும்புகின்றோம்.

மன்னார் மாவட்ட கத்தோலிக்க தமிழ் மக்கள் முள்ளிக்குள மக்கள் மீள தமது வாழ்வை தமது சொந்த மண்ணில் வாழ வழிசமைக்க ஆயர் யோசேப்பு ஆண்டகை அவர்களுடன் கைகோர்க்க வேண்டும் என இத்தால் கோரிக்கை விடுக்கின்றோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கலை இலக்கியச் சாளரம்

## கவிதைக் களம்

### எம்மை வழிநடத்துவீர்



சின்னஞ்சிறிய மொட்டுக்கள்
மலரத்துடிக்கும் சிட்டுக்கள்
அன்னையின் அன்பில் தவழ்ந்து
அப்பாவின் பாசத்தில் மிதந்து
அறிவு தேடியே பள்ளிவந்த
அன்புச் செல்வங்கள் நாம்தானே!

பார்போற்றும் மகனாய் மிளிரவும்
பட்டங்கள் பல பெற்று உயரவும்
படிப்புடன் பண்பையும் எமக்கு
பாசத்தோடு ஊட்டிடுவீரே!

கண்ணான கல்வியினை
கருத்துடனே கற்பிப்பீர்
எரிந்துவிழாமல் எழுத்தறிவு ஊட்டுவீர்
பிஞ்சு உள்ளங்கள்
கசங்காமல் காயப்படாமல்
மனிதநேயக் கல்விதனை
மகிழ்வோடு ஊட்டிடுவீர்.

*ச. மிதுஷா, முத்தரிப்புத்துறை மேற்கு.*

### அன்னை



அன்னை எனும் ஓவியம்
இணையில்லாத காவியம்
பண்புடனே பாசத்தை ஊட்டி
கல்வி எனும் விதை விதைத்து
உதிரத்தைப் பாலாய் ஈந்து
பாரினில் நாம் உயர
மேதையாய் நாம் உயர
பேதையாய் அவள் இருந்து
பக்குவமாய் எமை வளர்த்தவள்
அவள்தான் எம் பாசமிகு அன்னை.

*மா. கிறின்சன் பெலிக்ஸ்,*
*வட்டுப்பித்தான் மடு, உயிலங்குளம்.*

### வெற்றி உன் கையில்



கடல் அலையை எதிர்த்து
படகோடு எதிர்நீச்சல்
போடும் நண்பனே!
வாழ்க்கையே எதிர்நீச்சல்தான்
தோல்வியைக்கண்டு துவளலாமா?
சோகம் உனைத்தாக்கும்
எதிர்நீச்சல் போடு.
நிச்சயம் வெற்றி உன் கையில்.

*ம. தர்மிகா,*
*பெரியபண்டிவிரிச்சான், மடுக்கோவில்.*

### ஆன்மீக விடுதலை



ஆண்டவன் படைத்த உலகிலே – பல
அவலங்கள் நிறைந்த பூமியிலே
துன்பக் கதைகள் ஏராளம் – இதைச்
சொல்ல முனைந்தால் தாராளம்
மனித வாழ்வில் இயேசுவை மறந்தேன்.
மாறாத் துன்பத்தில் மூழ்கி எழுந்தேன்.
கண்முன்னே வந்தது கறைபட்ட வாழ்வு
கர்த்தன் இயேசு என் பாவம் பொறுத்தார்.

சுமை சுமப்போரே வாருங்கள் என்றார் – என்
பாவச்சுமையின் பாரமோ அதிகம்
வேதனை சோதனைகள் போதுமையா
என்னைச் சேர்ந்திலிருந்து தூக்குமையா
- ம. காமலின் சௌமியா குரூஸ், அரிப்பு.

### சிரிப்பின் வகைகள்

துன்பத்தில் சிரிப்பவன் - மனிதன்
அறியாமல் சிரிப்பவன் - மடையன்
இருக்குமிடமெல்லாம் சிரிப்பவன் - கோமாளி
இன்பத்தில் சிரிப்பவன் - ஏமாளி
கண்பார்த்து சிரிப்பவன் - காரியவாதி
காணாமல் சிரிப்பவன் - கஞ்சன்
கற்பனையில் சிரிப்பவன் - கவிஞன்
கோபத்தில் சிரிப்பவன் - சிந்தனையாளன்
நீதியோடு சிரிப்பவன் - அறிஞன்
நிலைமறந்து சிரிப்பவன் - காதலன்
மகிமையில் சிரிப்பவன் - மன்னன்
மாண்பில் சிரிப்பவன் - பண்பாளன்
சிரிக்க வைத்து சிரிப்பவன் - காமடியன்

### துளிப்பாக்கள்



**கண்ணதாசன்**
இதயக் கடல்களின்
நங்கூரம் இட்ட
கவிதைக் கப்பல்.

**காலை**
இறைவன் வரைந்த
எழில்மிகு சித்திரம்.

**கனவு**
இரவின் வாழ்க்கை
பகலின் நம்பிக்கை.



**முட்கள்**
மலர்களின் தேவை.

**நட்பு**
இதை எடுத்துவிட்டால்
வாழ்வில் எதுவுமே மிச்சம்
இல்லை.

**மழை**
நாட்டுப்புறத்தானின் உயிர்

**விடுதலை**
வேண்டப்படுவது
மனிதனிலிருந்து மனிதனுக்கு



**அழகு**
மனிதனின் மனோபாவ
நிலைாட்டம்.
பார்க்கப்படுவதில் அல்ல
பார்க்கிறவர் கண்களில்
இருக்கிறது.

*ஜெயா பாலாஜி, முருங்கன்.*

# சிறுகதை

தி. அகிலா,
எமில்நகர்,
மன்னார்.

## நிம்மதி தேடி உன்னிடம் வந்தேன்

அன்பான, பண்பான தாய் தந்தைக்கு மகளாக பிறந்தாள் அனற். ஆனால் அவளின் விதி பெற்றோருடன் பிரியமாக வாழ அவளுக்குக் கொடுத்து வைக்கவில்லை. ஒருநாள் அனற்றும் அவளின் பெற்றோரும் பயணம் சென்ற பேருந்து விபத்துக்குள்ளாகியது. இதிலிருந்து தப்ப இயலாது என அறிந்த அனற்றின் தாய் தன் கையிலிருந்த குழந்தை அனற்றை யன்னல் வழியாக வெளியே போட்டாள். அவளாவது உயிர் பிழைத்துக் கொள்ளட்டும் என்ற எண்ணத்துடன்தான் , அவ்வாறு செய்தாள். பச்சிளம் குழந்தையான அனற் அன்றிலிருந்து அனாதையானாள். தாய்முகம் அறியாத அவள் அனாதை இல்லத்திலே சேர்க்கப்பட்டு, வளர்க்கப்பட்டாள். சில வருடங்கள் கடந்தன. “அனற் நாங்கள்தான் உன் பெரியம்மா, பெரியப்பா” என உறவு கொண்டாடினார்கள். உன்னைத் தேடி அலைந்தோம். இப்போதுதான் உன்னைக் கண்டுகொள்ள முடிந்தது.” எனப் பெரும் கதை கட்டினர். பெரியம்மா அவளை கட்டித்தழுவி முத்தம் கொடுத்தாள். அன்புக்காக ஏங்கிய அனற்றிற்கு அது பெரும் ஆறுதலாக இருந்தது. தனக்கென ஒரு குடும்பம் இருக்கின்றது என்ற சந்தோசம் அவளுக்கு ஏற்பட்டது. பெரியம்மா பெரியப்பாவின் வேண்டுகோளுக்கிணங்க அனாதை இல்லத்து பொறுப்பாளரிடம் விடைபெற்றுவிட்டு அவர்களுடன் அவர்கள் வீட்டிற்குச் சென்றாள் அனற்.

சில வாரங்கள் பெரியம்மாவின் குடும்பத்தினருடன் நாட்களை இனிமையாக கழித்தாள். இந்த இனிமை சில நாட்கள் மட்டும்தான் நீடித்தது. பெரியம்மாவின் பொய்யான அன்புக்கு இலக்கானாள் அனற். பெரியப்பாவின் தீய வார்த்தைகள் அவளை முள்போல் தைத்தன. உடன் பிறவா சகோதரியின் ஏளனம் அவளை மேலும் துன்பப்படுத்தியது. ஊதியம் இல்லா வேலைக்காரியானாள். அனற் பார்ப்பதற்கு அழகாகவும், கண்ணைக்கவரும் தோற்றமும், பண்பான பேச்சும் கொண்டிருந்தாள். அவளின் அழகை வைத்தே பணம் சம்பாதிக்கலாம் என்பதே பெரியம்மா வீட்டாரின் திட்டமாக இருந்தது.

அனற் அறிவுக்கூர்மை உடையவளாக இருந்தாள். இருந்தும் அவளின் சூழ்நிலை காரணமாக அவளால் முழுமையாகக் கல்வி கற்க இயலாமற்போய்விட்டது. இருந்தும் இயன்றவரை படித்தாள். “பள்ளிக்கு சென்று நீ படித்து பட்டம் பெற்று என்ன சாதிக்கப் போகிறாய்?” என அடிக்கடி பெரியம்மா திட்டுவாள். அவள் வீட்டிலே அனற்றை முடக்கி வைத்தாள். எதிர்த்துக்கூட பேசத் துணிவில்லாத அனற் திணறிப் போவாள். மனதிற்குள்ளே அழுது புலம்பினாள்.

ஒரு நாள் ஒரு மனிதர் வீட்டிற்கு வந்தார். பார்ப்பதற்கு பயங்கரமான தோற்றம். பெரும் செல்வந்தர். கை, கழுத்து நிறைந்த நகை. சுமார் நாற்பது வயது இருக்கும். பெரியம்மா அவரை அழைத்து அறிமுகம் செய்தார். இவளுக்கு எதுவுமே புரியவில்லை. அவர் போன பிற்பாடு விசாரித்தாள். அவர்தான் அனற்றின் திருமணம் செய்யப்போகிறானாம் என பதில் கிடைத்தது. துவண்டு போனாள் அனற்.

(தொடர்ச்சி 13ஆம் பக்கம்)

## கொஞ்சம் சிரிங்க

முதலாளி :- உன்னை வேலைக்குச் சேர்த்துக்கிறேன். ஸ்டார்ட்டிங் சலரி 300 ரூபா. சரிதானே?
டிரைவர் :- அது சரிதாங்க ........! டிரைவிங் சலரி எவ்வளவு?
..........................................

நீதிபதி :- வேணும் என்றுதானே நீர் உனது அக்காவை கிணற்றிற்குள் தள்ளினாய்?
பெண் :- வேணாம் என்றுதான் தள்ளினேன்
*அ. டி லோஜனா, சூரியகட்டைக்கா, நானாட்டான்.*

நோயாளி :- டாக்ரர் எனக்கு வயிறு வலிக்கிறது
டாக்ரர் :- அப்படியா நீ காலையில் என்ன சாப்பிட்டாய்?
நோயாளி :- நிறைய சாப்பிடவில்லை டாக்ரர். இரண்டு பார்சல் ரொட்டி, இரண்டு பார்சல் இடியப்பம், பத்து இட்லி, பால் இரண்டு கிளாஸ்.
டாக்ரர் :- நீ இவ்வளவு சாப்பிட்டால் வயிற்றுவலிதான் வரும். ஒன்றும் செய்ய முடியாது. முதலில் உனது இரண்டு விரலையும் உன் வாய்க்குள் விட்டு வாந்தி எடு.
நோயாளி :- இந்த இரண்டு விரலையும் விட இடம் இருந்திருந்தால் இரண்டு வடையைத் தின்றிருப்பேன் டாக்டர்.
*சு. டென்சியா பெரேரா, அன்ரனீஸ் வீதி , பேசாலை.*

இயக்குனர் :- பிச்சை எடுத்திட்டு இருந்த பையன ஹீரோவா அறிமுகப்படுத்தினது தப்பாப் போச்சு.
கமராமன் :- ஏன் சேர்? என்னாச்சு?
இயக்குனர் :- நீங்க நடிச்ச படத்தில் பிடிச்ச பாத்திரம் என்ன என்று நிருபர் கேட்டதுக்கு அலுமினியப் பாத்திரம் என்று சொல்லிட்டானே?
*ம. காமலின் சௌமியா குரூஸ், அரிப்பு*

பொலிஸ்காரன் :- எங்கடா ஒரு டயரைக் காணோம். 500 ரூபா பையின் கட்டு.
ஆட்டோக்காரன் :- சார் ஆட்டோவில மூணு டயர்தான் சார் இருக்கு.
*- அ. யர்மினி, கீரி, மன்னார்.*

## மன்னா விளம்பரப் பலகை

பொன்னையும் முத்துக்களையும்விட அறிவுள்ள பேச்சே விலையுயர்ந்த அணிகலன்.
*அ. நிரோஜன் ஸ்ரனி, பெரிய குஞ்சுக்குளம், முருங்கன்.*

“உன்னுடைய எதிர்காலம் பற்றி வருந்தாதே! எதிர்காலம் ஒரு சத்தியக் குறிப்பு”
*- எ. காமலிற்றா, கன்னியர் மடம், நானாட்டான்.*

“நதி நகர்ந்துகொண்டே இருக்கிறது.
பூ பூத்துக்கொண்டே இருக்கிறது.
அவற்றைப்போல் நீயும் தேடிக்கொண்டேயிரு”
*-எஸ். ஜெயநாயகி, கன்னியர் மடம், நானாட்டான்.*

- ஒரு இரக்கமுள்ள இதயம் ஆயிரம் முகங்களைவிட இனிமையானது.
- அன்பும் நம்பிக்கையும் பிரிக்க முடியாதவை ஒன்றில்லாமல் இன்னொன்று நீ பெறமுடியாது.
- முட்களின் நடுவில் இருந்தாலும் ரோஜா அழகைப் பொழிகிறது. சிறு துன்பத்தோடு இணைந்துதான் வாழ்வின் பெரிய மகிழ்ச்சிகள் வந்து சேரும்.

*- யே. நிலோஜினி, பொன்தீவுகண்டல்.*

எந்த விடயத்தையும் முடிவுகள் பற்றி சிந்திக்காமல் தொடங்கிவிடாதே! ஏனென்றால் தொடக்கமல்ல முடிவுகளே வாழ்க்கையில் முக்கியம்.
உன்னோடு பழகுகின்றவர்களில் பலர் நீ நினைக்குமளவிற்கு உன்னை அன்பு செய்வதில்லை!
*தி. ரேகா, பெரியமுறிப்பு, முருங்கன்.*

- விரோதம் என்பது மறைந்திருக்கும் வியாதி.
- மன நிறைவு என்பது இயற்கையான செல்வம்.
- ஆடம்பரம் என்பது வலிந்து தேடும் வறுமை.
- உனது கௌரவம் உனது நாக்கின் நுனியிலேயே உள்ளது.

*- ம. டிலாளினி, தா.கோட்டம், நெளுக்குளம்*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விண்மீன்களை நோக்கி .....

தொடர் கட்டுரை

அத்தியாயம் – 21

– ஆங்கில மூலம் –
அமரர். அருட்கலாநிதி பப்ரிஸ் குருஸ் FSC
*தமிழாக்கம்: அ. யோ. மரியநாயகம் சோசை J.P வங்காலை.*

## கிறிஸ்துவின் போர் வீரராகிய லொயலாவின் புனித இக்னேசியஸ்

“என் ஆண்டவரும் மீட்பருமாகிய யேசுக்கிறிஸ்துவே, இதுதான் உம்மிடம் எனது பிரார்த்தனை. நான் இத்தனை காலமாக அறிந்த அருமையான சொத்து, அது எந்தச் சொத்தாக இருந்தாலும் அவற்றையெல்லாம் தூக்கி எறிந்துவிட்டு உம்மை மட்டும் வணங்க உமது சிம்மாசனத்தில் இருந்து எனக்கு அருள்புரியும்”

யுத்த பூமியின் இடித்துத்தள்ளுதலும், பரபரப்பும், பரிதாபகரமான அழுகை, காயப்பட்டவர்களினதும் இறப்பவர்களினதும் முனங்கல், தவிர்க்க முடியாமல் யுத்தத்தின் நடுவே அகப்பட்டுக்கொண்ட அப்பாவி மக்களின் மோசமான நிலை, பிள்ளைகளை இழக்கும் தாய்மார், குடும்பத்தை நிரந்தரமாகக் கஷ்டத்தில் விட்டுச்செல்லும் கணவனை இழக்கும் மனைவிமார், தந்தையரை இழக்கும் குழந்தைகள் சிலவேளைகளில் அனாதைகள் ஆகின்றனர். கண்ணீரும், கம்பளையும், பயமும், வருத்தமும், கொடூரங்களும், உணர்ச்சியற்ற தன்மைகளும், நம்பிக்கையில்லாத நாசம் விளைவிக்கும் நிலையில் இரத்தம் சிந்தி துன்பப்பட்டு இறப்பதற்கு வழிகோலிவிட்டிருக்கின்ற யுத்தத்தின் கோரத்தை சிந்திப்பதில் அவர் அந்த நாட்களைச் செலவளித்தார்.

இக்னேசியஸ் தான் போர்வீரனாக இருந்த காலத்தில் நடைபெற்ற சாதக பாதங்களை மதிப்பீடு செய்துகொண்டிருந்தார். ஒரு பக்கத்தில் யுத்தக் கொடூரத்தின் உண்மைநிலை, மறுபக்கம் சமாதானத்தின் ஈடில்லா ஆனந்தமும் அமைதியும் அவரது சிந்தனையைத் தூண்டி ஆழ்ந்த பிரதிபலிப்பையும் ஆன்மீக உணர்ச்சியையும் உண்டாக்கியிருக்க வேண்டும். கடவுள் அவரை வேறு தேவைக்காக, ஒரு உயர்ந்த நோக்கத்துக்காக ஒரு உன்னத தொழிலுக்காக அழைத்துள்ளார். கடவுள் அவரை ஒரு கிறிஸ்துவின் போர்வீரனாக அழைத்துள்ளார். மனிதர்களைப் பிடித்து அவர்களது ஆன்மாக்களை மோட்ச இராட்சியத்துக்கு வென்றெடுக்க அழைத்துள்ளார். கடவுளின் அருள் இக்னேசியசின் வாழ்வில் ஒரு திருப்புமுனை. அவருடைய தொழில் ஒரு வித்தியாசமானதாக இருக்கப்போகின்றது என்பதை உணர்ந்துகொண்டார். தனது கடந்தகால வாழ்க்கைக்கு முற்றுமுழுதாக பிரியாவிடை கொடுக்க தனது மனதை ஆக்கிக்கொண்டார்.

தைரியத்துடனும், உறுதியான தீர்மானத்துடனும் தனது வாளை எடுத்தார். சாவுக்கும், அழிவுக்கும் உரிய ஒரு சின்னம் அந்தப் பளபளப்பான வாள்தான் அவரது விலை மதிப்பற்ற சொத்து. அவர் போர் வீரனாக இருக்கும்பொழுது மிக மதிப்பு உள்ள ஒரு பொருள். அவர் அந்த வாளை எடுத்தார். அருமைமிக்க சொத்து – அதை தேவதாயினுடைய பாதத்தில் வைத்து தான் இனிமேல் ஒருபொழுதும் அந்த வாளைத் தொடுவதில்லை என்று தனது இதயத்தாலும், ஆன்மாவாலும் உறுதி கூறினார்.

தனது அருமையான சொத்தை கைவிட்டபின் இக்னேசியஸ் கல்விக்கு மையமாக இருந்த பரீசுக்குச் சென்று அவரது சமயக்கல்வியைக் கற்கத் தொடங்கினார். பின்னர்



உரோமைக்குச் சென்று அவரைச் சுற்றியிருந்த சில கூட்டாளிகளை ஒன்றுசேர்த்து திருச்சபையையும், உலகத்தையும் மாற்றியமைக்கக்கூடிய ஒரு பெரிய பக்திச்சபையை எளிமையாக ஆரம்பித்தார். புனித இக்னேசியஸ்சின் குறிக்கோளாகிய “எல்லாம் கடவுளின் உயர்ந்த மகிமைக்காக” என்ற வீரமுழக்கம் தூங்கிக்கிடந்த ஆன்மாக்களை புதிய உயர்ந்த மகிமைக்குத் தூண்டி எழுப்பியது. பிரத்தியேக பரிசுத்ததனத்தில் அவர் திருச்சபைக்கு விலைமதிக்க முடியாத சேவையும் செய்தார். கடந்த 450 ஆண்டுகளாக அல்லது அதற்கு கூடுதலாக இயேசு சபையினர் திருச்சபைக்கும் உலகின் கற்பனை செய்யக்கூடிய ஒவ்வொரு கோளங்களிலும் அபாரமான சேவை செய்துள்ளனர்.

புனித இக்னேசியஸ்சின் சிறப்பான வாக்கியங்களுடன் இந்தத் தொடரை முடிக்கின்றேன். “ஓ இறைவா! உமது விருப்பத்தை நான் செய்வது, நீர் அறிந்துகொள்ளவே தவிர கொடுப்பது கணக்கு பார்ப்பதற்கு அல்ல. போரிடுவது காயத்தைக் கவனிக்கவல்ல, பாடுபடுவது இளைப்பாற்றியைத் தேடவல்ல. கஷ்டப்படுவது கைம்மாறு கேட்பதற்கல்ல.” இன்னுமொரு அறிஞர் கோர்ட்டன் எச். றாக்காட் இப்படி எழுதுகின்றார்.

“எனது குறைபாடுகளை ஒத்துக்கொள்ள எனக்கு
போதுமான யோக்கியத்தை, எனக்கு கர்வம்
உண்டாகாமல் முகத்துதியை ஏற்றுக்கொள்ள
போதுமான பெருந்தன்மையை, ஏமாற்றத்துக்கு மேலாக
போதுமான நம்பிக்கையை, அன்பைச் சேகரிக்க
போதுமான சக்தியை, கண்டனங்களை வரவேற்க
போதுமான தைரியத்தை, மனித பலவீனத்தை
அறிந்துகொள்ள போதுமான கருணையை, எனது
பிழைகளை அறிந்துகொள்ள போதுமான அறிவை,
பெருந்தன்மைகளை வரவேற்க போதுமான
தாழ்ச்சியை, எனது அயலவர்களைப்பற்றி சிந்திக்க
போதுமான உறுதியை, கடவுளின் அன்புக்கு விசுவாசம்
கொள்ள போதுமான நற்குணத்தை நான்
விரும்புகிறேன்”■

# உங்களுக்குத் தெரியுமா?

## மறையறிவுப் போட்டி– 111

*தொகுப்பு : திரு ச. மாட்டின் டயஸ்*

இம்மாதத்துக்கான வினாக்கள் 96ம் திருப்பாடல் முதல் 103ம் திருப்பாடல் வரையுள்ள பகுதியிலிருந்து தொகுக்கப்படுகின்றன. 95ம் திருப்பாடல் முதல் 99ம் திருப்பாடல் வரையுள்ள 05 திருப்பாடல்களும் ஆண்டவரை அரசராகக்கண்டு போற்றி வாழ்த்துகின்ற பாடல்களாக அமைந்துள்ளன. 100வது பாடல் 5 வாக்கியங்களை மட்டும் கொண்டு நன்றிப்பாடலாக அமைந்துள்ளது. 101ம் பாடல் தாவீதரசனின் உறுதிமொழிகளாக அமைந்துள்ளன. இறைவனைத் திருப்திப்படுத்துவதற்காக நான் இன்ன இன்ன செயல்களைச் செய்வேன் எனத் தாவீது வாக்குறுதி அளிக்கிறார். 103ம் பாடல் தாவீதரசனால் பாடப்பட்ட பாடல்.

தாவீதரசன் கடவுளின் அன்பை அதிகமாகச் சுவைத்தவர், உணர்ந்தவர். இறைவனின் மகனாம் யேசு தாவீதின் குமாரர் என்று அழைக்கப்படும் அளவுக்கு கடவுள் அவரை உயர்த்தினார்.

ஏசாயாவின் கடைசி மகனான தாவீது ஒரு சாதாரண இளைஞன். புல்வெளிகளில் ஆடு மாடு மேய்த்து வந்தவன். சிறு டப்பா யாழும் கவணும்தான் அவனது சொத்து. அந்த யாழில் இசை மீட்டி இறைவனைப் புகழ்ந்து பாடினான். இயற்கையையும் அது மலர்ந்து சிரிக்கும் அழகையும் இரசித்தான். அதற்காக இறைவனைப் புகழ்ந்தான். நன்றி சொன்னான். அந்தப்பாடல்தான் இந்த 103ம் சங்கீதம்.

***இப்போது நமது வினாக்களுக்கு வருவோம்.***

01. பிற இனத்தவர்களுக்கு எதை அறிவிக்கும்படி 96ம் சங்கீதம் கூறுகின்றது?
02. ஆண்டவரின் நீதித்தீர்ப்புக்களைக் கேட்டு மகிழ்வது எது? களிகூர்பவை எவை?
03. ஆறுகளே கை கொட்டுங்கள், மலைகளே ஒன்று கூடுங்கள் ஆண்டவர் முன்னிலையில் புகழ்ந்து பாடுங்கள் ஏன்?
04. கடவுளாகிய ஆண்டவரே - உம்மை மன்னிக்கும் கடவுளாக வெளிப்படுத்தினீர் ஆயினும் அவர்களைத் தண்டித்தீர் ஏன்?
05. நன்றியோடு அவர்தம் வாயில்களில் நுழையுங்கள் புகழ்ப்பாக்களோடு அவர்தம் முற்றத்துக்கு வாருங்கள். அவருக்கு நன்றி செலுத்தி அவர் பெயரைப் புகழுங்கள் ஏன்?
06. 101ம் திருப்பாடல் உள்ள 9 திருவசனங்களும் கடவுளுக்கு அளிக்கப்படுகின்ற வாக்குறுதிகளாக உள்ளன. இவ்வாக்குறுதிகள் யாரால் அளிக்கப்படுகின்றன?
07. எங்கே ஆண்டவரின் பெயர் போற்றப்படும்? எங்கே அவர்தம் புகழ் அறிவிக்கப்படும்?
08. கடவுள் உனக்குச் செய்யும் நன்மைத்தனங்கள் எவை?
09. ஆண்டவர் எப்படியானவர்?
10. ஆண்டவரின் பேரன்பு யார்மீது என்றென்றும் இருக்கும்?

மாணவர் மறையறிவுப் பகுதி இல. 109 இற்கான கேள்விகளுக்கு 21 பேர் விடையளித்திருந்தனர்.

**இவர்களுள் பரிசுக்குரியவராகத் தெரிவுசெய்யப்பட்ட அதிஸ்ரசாலி**

**அ. அக்னேஸ்,**

**திருக்குடும்ப கன்னியர் மடம், மன்னார்.**

### பாராட்டுக்குரியவர்களாக தெரிவுசெய்யப்படும் 10

# அதிஸ்ர சாலிகள்

1. கு. கத்தறீன் (றூபினா), நொச்சிக்குளம், உயிலங்குளம்.
2. வி. ஆன் சௌமியா, 5ம் வட்டாரம், விடத்தல்தீவு.
3. வி. டெயான்சி, 5ம் வட்டாரம், விடத்தல்தீவு.
4. ஆ. பிரியங்கா, தாராபுரம், தோட்டவெளி.
5. அ. பிரித்திஹா, பூவரசன்குளம், வவுனியா,
6. கு. குவேனி, நொச்சிக்குளம், உயிலங்குளம்.
7. அருட்சகோதரி மேரி பற்றீசியா, ஆலய வீதி, தோட்டவெளி.
8. மா. மேரி பவுஸ்ரினா, வட்டுப்பித்தான் மடு, உயிலங்குளம்.
9. யே. ஐ. கிஷோலா ரொட்றிகோ, தாராபுரம், தோட்டவெளி.

## போட்டி 109 இற்கான சரியான விடைகள்

01 - அடிமைத்தனத்திலிருந்து விடுதலையைக் கேட்கும் பாடலாக உள்ளது.
02 - திராட்சைக் கொடிக்கு (80:14)
03 - கடவுளை மகிழ்ந்து பாடுதல், புகழ்ந்து ஏத்துதல், இன்னிசை எழுப்புதல், மத்தளம் கொட்டுதல், யாழும் சுரமண்டலமும் இசைத்து இனிமையாய் பாடுதல் (81:2-4)
04 - எளியோரையும் வறியோரையும்(82:4)
05 - ஆண்டவர் கோவில் முற்றங்களில் வாழும் ஒரு நாளே மேலானது (84:10)
06 - அவர்களது நாட்டின்மீது அருள்கூர்ந்தார்.
- முன்னைய நன்னிலைக்கு மக்களைக் கொண்டுவந்தார்.
- மக்களின் குற்றத்தை மன்னித்தார்.
- அவர்களின் பாவங்கள் அனைத்தையும் மறைத்துவிட்டார்.
07 - அவருக்கு அஞ்சி நடப்போருக்கு (85:9)
08 - மாட்சி மிக்கவராயிருந்து வியத்தகு செயல்கள் புரிபவர் அவர் மட்டுமே (86: 9- 10)
09 - ஜெருசலேம்
10 - துயரம்/ சோகம் (88)

## புனிதர்களின் பாதையில் ..........

10ஆம் பக்கத் தொடர்ச்சி

கலியாணத்திற்குப்பின் முதலிரவு வந்தது. “வலேசியன்! நான் ஓர் இரகசியம் சொல்கிறேன். கேளுங்கள், கடவுளின் தூதர் என்னை அன்பு செய்கிறார். அவரே எனது உடலை துணிச்சலுடன் காத்துக்கொள்கிறார்.” என்றார். “அத்தகைய தூதரை நான் காண முடியுமானால் நானும் உனது வேதத்தில் சேர்ந்துகொள்கிறேன்” என்று வலேரியன் கூற, “ஞானஸ்நானம் இன்றி அவரைப் பார்க்கவொண்ணாது” என்றார். வலேரியன் ஞானஸ்தானம் பெற்றுக்கொள்ள உடன்பட்டார்.

அந்நாட்களில் திருத்தந்தை உர்பன், வேதகலாபனையின் காரணமாக மறைந்து வாழ்ந்தார். அவரிடம் வலேரியனைச் செசிலியம்மாள் அனுப்பினார். உடனே திருத்தந்தை மண்டியிட்டு ஆண்டவரிடம் நன்றி கூறினார். “ஆண்டவரே அச்சமூட்டும் சிங்கத்தைப்போல் (செசிலியாவை) அடைந்த (வலேரியனை) அவர் உம்மிடம் ஓர் அமைதியான ஆட்டுக்குட்டியாக ஒப்படைக்கிறார்.” என்றார். பின்னர் திருத்தந்தை வலேரியனுக்கு ஞானஸ்நானம் அளித்தார். வலேரியன் மீண்டும் தன் இல்லத்திற்கு வந்து சேர்ந்தபோது செசிலி தனது அறையில் ஜெபத்தில் ஆழ்ந்திருப்பதையும், அருகில் தேவதூதர் நிற்பதையும் கண்டு திகிலுற்றார். பிறகு அவருடைய தம்பி திபூர்சியுசும் மனந்திரும்பினார். அல்மாக்கியஸ் என்ற ஆளுநன் இதைக் கேள்வியுற்றான். மாக்கிமஸ் என்ற அதிகாரியை அனுப்பினான். இவர்களைச் சிறைப்படுத்தக் கட்டளையிட்டான். வலேரியனையும், திபூர்சியஸையும் கொல்லவும் ஆணை பிறந்தது.

அவர்கள் இறக்கும் நாள் அதிகாலையில் செசிலியா இவர்களை நோக்கி. “கிறிஸ்துவின் வீரர்களே, எழுவீர், இரவுக்கு உரிய செயல்களை எறிந்துபோடுங்கள். ஒளியின் போராயுதத்தை அணிந்துகொள்ளுங்கள்” என்று சொல்லி ஊக்குவித்தார். இவர்கள் மறைசாட்சிகளாக மரிப்பதற்கு முன், மாக்சிமசையும் அவரது குடும்பத்தினரையும் மனந்திருப்பினார். பின்னர் செசிலி ஆளுநரிடம் அழைத்து வரப்பட்டபோது, “இயேசுவின் புனித நாமத்தை அறிக்கையிடுவோம். அவரை மறுதலிக்க மாட்டோம்” என்றார். அவர் சித்திரவதை செய்யப்பட்டார். உயிர் பிரியவில்லை. கொலையாளி மும்முறை இவரது கழுத்தை வெட்டி, இரத்த வெள்ளத்தில் மிதக்க வைத்தான். இக்கொடூரமான நிலையிலும் மூன்று நாட்கள் உயிர் ஊசலாடியது. தனது இல்லம் எப்போதும் ஓர் ஆலயமாக அமையட்டும் என்று தனது இறுதி விருப்பத்தைத் தெரிவித்தார். இதுவும் நிறைவேறியது! தனது தூய ஆன்மாவை இறைவனிடம் கையளித்தார்.

## “நிம்மதி தேடி உன்னிடம் வந்தேன் ........

12ஆம் பக்கத் தொடர்ச்சி

அவனிடம் பெரியப்பா குடும்பம் பணம் கடன் பெற்றுள்ளார்கள். அந்தக் கடனை அடைக்கவும் அவனின் சொத்துக்களை தாங்களும் அனுபவிக்கவுமே இந்த ஏற்பாடு. தனது மகளுக்கு அந்தப் பணத்தை கொண்டு திருமணம் செய்யலாம் எனவும் பெரியம்மா திட்டம் வகுத்தாள். அந்த மனிதன் ஏற்கனவே திருமணமானவன். அத்தனை தீய பழக்கங்களையும் கொண்டவன். இதையெல்லாம் பெரியப்பா நன்றாக அறிந்திருந்தும் இவ்வாறு முடிவு செய்து அனற்றை பாழ்குழியில் தள்ள முடிவு செய்தது ஆச்சரியம்தான்!

அனற் அழுது அழுது அவளின் கண்ணீரும் வற்றிவிட்டது. ஒருவாறு தீடீரென ஒரு முடிவு எடுத்தாள். யாருக்கும் தெரியாமல் அங்கிருந்து ஓடிச்சென்று ஆலயத்திற்குச் சென்றாள். அங்கிருந்த நற்கருணை நாதர் முன்பாக மண்டியிட்டு அழுது தன்னை ஒப்புக்கொடுத்தாள். கண்களை இறுக மூடியபடி “நிம்மதி தேடி உன்னிடம் வந்தேன். நீதான் நான் தேடும் நிம்மதியான வாழ்வைத் தரவேண்டும்” என அவரிடம் சரணடைந்தாள். அப்போது அனற் என கூறியபடி தோள்மீது ஒரு கை பட்டது. திடுக்கென திரும்பிப்பார்த்தாள். அனாதை இல்லத்து அன்னை அம்மா எனக் கூறியபடி தன் சோக கீதம் பாடினாள்.

அன்னை அவளை ஒரு மடத்தில் சேர்த்துவிட்டாள். அனற் அங்கே இருந்து படித்து பட்டம் பெற்று ஒரு அருட்சகோதரியாகி இன்று பல அனாதைக் குழந்தைகளுக்கு அன்பான அன்னையாக வாழ்ந்து வருகின்றாள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விவிலியக் குறுக்கெழுத்துப்போட்டி இல.124

## யோசுவா அதிகாரம் 1 முதல் 24 முடிய

உங்கள் விடைகளை டிசம்பர் மாதம் 15ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பிவைக்கவும். சரியான விடைகளை எழுதிய மூன்று அதிஸ்ரசாலிகளுக்கு பரிசுத்தொகைகள் அனுப்பிவைக்கப்படும். பாராட்டுப்பெறும் 50 பேருடைய பெயர் விபரங்கள் மன்னாவில் பிரசுரிக்கப்படும். (பதிப்பாசிரியர்)

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 07 | | | 02 | ★ | 12 | 16 | | | |
| | ★ | 27 | 33 | | | 10 | 24 | | 11 |
| 23 | | | | 15 | | | ★ | | 28 |
| | 20 | ★ | | | 09 | | ★ | | |
| | 32 | 17 | | | 29 | 06 | | | ★ |
| 08 | 26 | 22 | | ★ | | | | 03 | |
| ★ | 18 | 01 | | | | ★ | | | 19 |
| | | | | 34 | 14 | | | | |
| | 30 | ★ | 05 | | | 31 | 25 | | |
| 13 | | | | ★ | 21 | | | 04 | ★ |

(— என்ற அடையாளம் சுட்டி நிற்பது முழு இறைவார்த்தையின் இடைச்சொற்கள் என்பதை கவனத்தில் கொள்ளவும்)

### இடமிருந்து வலம்

1. அவர் அவர்களை மாடியில் ஏற்றி அங்கிருந்த .................... தட்டைகளுக்குள்—வைத்தார்.
5. ஏனெனில் ஆண்டவர் உங்களிடம் .............. ஒப்படைத்துவிட்டார்.
6. .................... உங்களுக்கு—கீழ்ப்படிந்தீர்கள்.
7. ஒரு பெரும் கல்லை—மரத்தின் .................... நாட்டினார்.
8. கீழே ஓடிய நீர் ............ நிலக் கடலாகிய சாக்கடல் வரை ஓடி மறைந்தது.
9. ஏனெனில் அவரது ............... கோட்டைச் சுவரோடு இணைந்திருந்தது.
10. இது எப்ராயிம் மலைநாட்டில் .................... மலைக்கு வடக்கே உள்ளது.
13. அப்போது பெண்கள்—ஆகியோரும் .............. இருந்தனர்.
15. இவ்வாறு ...................... நாள்கள் செய்தனர்.
16. ஆகவே அந்த இடம் இந்நாள்வரை ............... என்று அழைக்கப்படுகின்றது.
17. கிழக்கே யோர்தான் ........... எல்லையாக அமைந்துள்ளது.
23. எனவே மக்களின் நெஞ்சம் .................. இழந்து தண்ணீர்போல் ஆனது.
25. உங்கள் கடவுளாகிய—மீது ..................... கூர்வதில் மட்டும் கருத்தாயிருங்கள்.
27. யோசுவா ............. வாயிலில் பெருங்கற்களை வையுங்கள்.
34. கிபயோன் குடிமக்கள் ................. போல் தந்திரமாகச் சென்றார்கள்.

### வலமிருந்து இடம்

2. அவரது .................... நாடு முழுவதும் பரவிற்று.
3. அவர் அவர்களுக்கும்—இடையில் ...................வைத்தார்.
4. அதன் ................ அனைத்தும் உங்களுக்குச் சொந்தம்.20. ஆண்டவர் ..................நடுவில்—கொண்டோம்.
26. இந்த திருச்சட்ட ................ உன் முன்னின்று அகற்றாதே
29. நாட்டில் போரின்றி .................. நிலவிற்று.
30. இஸ்ரயேல் மக்களில் ........... குலங்களுக்கு — தரப்படவில்லை
31. அது இன்று ........................ உள்ளது.
34. —ஏனெனில் அவர் .................... கடவுள்.

### மேலிருந்து கீழ்

1. ஆனால் ......... முழுவதற்கும் — காப்பாற்றிக் கொண்டனர்.
2. இதோ நகரினில் எழும்பிய .............. விண்ணை நோக்கிப் போவதைக் கண்டனர்.
3. உன்னத கடவுளாகிய ஆண்டவரே ........................
5. கதிரவன் ................ வானில் நின்றது.
6. .................... ஆண்டவர் உங்களிடையே வியத்தகு செயல்கள் புரிவார் என்றார்.
10. இவ்வெல்லை — மேற்காக .................. நதிவரை ஏறிக்கடலில் முடிவடைகின்றது.
11. எபூசியர் .................... மக்களுடன் இன்றும் வாழ்கின்றனர்.
12. ஏனெனில் அவர் அறியாமல்தான் மற்றவரைக் ....... விட்டார்.
14. எல்லா இஸ்ரயேல் — வறண்ட ................. வழியாக நடந்தனர்.
15. யோசுவா — காலேபுக்கு ........... வழங்கி எபிரோனை உடைமையாக அளித்தார்.
19. .................... போல் கரைகளைத் தொட்டு ஓடியது.
27. குதிரைகளின் .................... கால் நரம்புகளை வெட்டினார்.
28. தங்கள் மூதாதையரான இலசேமிற்குத் .................... என்று பெயரிட்டார்கள்.
32. மாதத்தின் பதினான்காம் நாள் .................... எரிகோ — கொண்டாடினர்.
33. உங்கள் கடவுளாகிய ஆண்டவர் அதை உங்கள் .................. கொடுப்பார்.

### கீழிருந்து மேல்

3. அதைக் கேள்விப்பட்டவுடன் எங்கள் ............. கலக்கமுற்றது.
4. நான் முற்றிலும் ........ கடவுளாகிய ஆண்டவரைப் பின்பற்றினேன்.
6. இவ்வாறு ஆண்டவர் — வாக்களித்த .................... முழுவதையும் — கொடுத்தார்.
8. இஸ்ரயேலர் ...................... செய்தனர்.
9. ...................... கொண்டு துணிந்து நிற்பீராக என்றனர்.
13. நீங்கள் .................... பயிரிடாத — செய்தீர்கள்.
14. உங்களுக்கு வேண்டிய உணவைத் .............. செய்யுங்கள்.
15. அவர் ...................... மன்னனைத் தூக்கிலேற்றினார்.
18. யோசுவா எல்லா .................... நாட்டையும் தாக்கினார்.
19. நாங்கள் அவர்கள் ........................ ஓடுவோம்.
21. உங்கள் கடவுளாகிய ஆண்டவர் — யோர்தான் ................. உங்கள் — செய்துள்ளார்.
22. .................... இடிந்து விழுந்தது.
23. ஏனெனில் அவர்களை ........... கையில் ஒப்படைத்துள்ளேன்.
24. இஸ்ரயேலரின் — விடக் .................... மழையால் இறந்தவர்கள் அதிகம்.
25. ..................... என்பவன் ஆனாக்கின் தந்தை
30. ஆண்டவருக்கு எதிராக ...................... இந்தத் துரோகம்?

## விவிலியக்குறுக்கெழுத்துப் போட்டி இல. 122ல் சரியான விடைகளை அனுப்பியவர்களில் பரிசுபெறும் மூன்று அதிஸ்ரசாலிகள்:

**முதலாம் பரிசு:**
சி. வின்சன் யோட்ஸ், 143,
சின்னப்பண்டிவிரிச்சான், மடுக்கோவில்

**இரண்டாம் பரிசு:**
நே. அனோஜா,
சிறுக்கண்டல், முருங்கன்.

**மூன்றாம் பரிசு:**
செ. விமலா,
இத்திக்கண்டல், அடம்பன்.

விடைகளை எழுதி அனுப்பியவர்கள் 106 பேர்.
சரியான விடைகளை எழுதியோர் 100 பேர்.

## விவிலியக் குறுக்கெழுத்துப்போட்டி இல. 122ல் சரியான விடைகளை அனுப்பியவர்களில் பாராட்டுப் பெறும் போட்டியாளர்கள்

1. ஜே. கனிஸ்ரா, நொச்சிக்குளம், உயிலங்குளம்.
2. இ. சகாயறஞ்சினி, முதலைகுத்தி, உயிலங்குளம்.
3. ஜே. இம்மானுவேல், முதலைகுத்தி, உயிலங்குளம்.
4. பி. மயூரன், முதலைகுத்தி, உயிலங்குளம்.
5. றெ. அன்ரனி கிளிங்ரன் பீரிஸ், 1ம் வட்டாரம், வங்காலை
6. சிபோன் மரியகாணிக்கை பீரிஸ், முத்தரிப்புத்துறை.
7. இம்மானுவேல் யஸ்ரின், முதலைகுத்தி, உயிலங்குளம்.
8. செ. சுரேக்கா, இத்திக்கண்டல், அடம்பன்.
9. அ. கரோலினி கீறிப்திகா, 141, மரியாள் வீதி, திருகோணமலை.
10. நே. எட்மன், சிறுக்கண்டல், முருங்கன்.
11. எஸ். சுமி, முதலைகுத்தி, உயிலங்குளம்.
12. ஜி. வி. தர்ஷனா, இல. 46, குருமடவீதி, மன்னார்.
13. யே. யூக்கிலிஸ்ரா, இத்திக்கண்டல், அடம்பன்.
14. யோ. எலிசபேத், தலைமன்னார் பியர், தலைமன்னார்.
15. ரி. யூட் சுதாகர், இத்திக்கண்டல், அடம்பன்.
16. அருட்சகோதரி மேரி பற்றீசியா, ஆலயவீதி, தோட்டவெளி.
17. ஜே. ஜெனிஸ்ரா, நொச்சிக்குளம், உயிலங்குளம்.
18. பி. டிலக்ஷி, முதலைகுத்தி, உயிலங்குளம்.
19. அருட்சகோதரி அஜந்தா, புசல்லாவ, கண்டி.
20. எஸ். சத்தியப்பிரியா, நாகதாழ்வு, திருக்கேதீஸ்வரம்.
21. எ. அமல்ராஜ், முதலைகுத்தி, உயிலங்குளம்.
22. யூ. அன்ரனிராஜ், இத்திக்கண்டல், அடம்பன்.
23. பீ. கஸ்தூரி, இல-42, கோவில் வீதி, யாழ்ப்பாணம்.
24. ஞா. செலஸ்ரீன், இ.குளம், அந்தோனியார் கோவில்வீதி, வவுனியா.
25. ச. ஷாளினி, பொன்தீவுகண்டல், முருங்கன்.
26. ஆ. பிரியங்கா, தாராபுரம், தோட்டவெளி.
27. எஸ். பெனடிக்ற் தயாளன், இலுப்பைக்குளம், நேரியகுளம்.
28. யே. கிறிஸ்தம்மா, இத்திக்கண்டல், அடம்பன்.
29. கு. கத்தறீன் (றூபினா), நொச்சிக்குளம், உயிலங்குளம்.
30. ஞா. ஜெருஷன், முதலைகுத்தி, உயிலங்குளம்.
31. ஜி. வி. சர்மி, முதலைகுத்தி, உயிலங்குளம்.
32. எஸ். சத்தியராஜ், நாகதாழ்வு, திருக்கேதீஸ்வரம்.
33. ஞா. வினோ தர்சி, முதலைகுத்தி, உயிலங்குளம்.
34. சேவியர் அகஸ்ரா பெரேரா, பள்ளிமுனை கிழக்கு, பள்ளிமுனை.
35. யூ. மரியப்பிள்ளை, இத்திக்கண்டல், அடம்பன்.
36. வி. மேரி றெஜினா, 143, சின்னப்பண்டிவிரிச்சான், மடு.
37. ஞா. கெலன்றீகா, முதலைகுத்தி, உயிலங்குளம்.
38. கே. யோகராஜா, தலைமன்னார் பியர், தலைமன்னார்.
39. தே. அணுராஜ், மளுவராயன் கட்டையடம்பன், மடுரோட்.
40. அ. தேவராஜா (தேவா), மடு ஆலயம், மடு.
41. எ. மேரி ஜொஸ்லின் பெரேரா, பள்ளிமுனை கிழக்கு, பள்ளிமுனை.
42. எ. வலன்டினா, இல. 14,வெ.லேன், பாலையூற்று. திருகோணமலை.
43. அ. ஞானப்பிரகாசம், முதலைகுத்தி, உயிலங்குளம்.
44. கு. குவேனி, நொச்சிக்குளம், உயிலங்குளம்.
45. அ. இமாக்குலின் ஜதுஷா, சின்னப்பண்டிவிரிச்சான், மடுக்கோவில்.
46. சி. சகாயஸ்ரெலா பீரிஸ், வீரபுரம், நேரியகுளம்.
47. ச. றொணி, பெரியகுளம், பறப்பாங்கண்டல்.
48. பீ. மயூறி, முதலைகுத்தி, உயிலங்குளம்.
49. வை. அன்ரனி, டிலைக்ஷன், தலைமன்னார் பியர், தலைமன்னார்.
50. சி. மில்றோச், பீரிஸ், சிலாவத்துறை, அரிப்பு.

## இல.122 இற்கான சரியான விடைகள்

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| ❋ | து | பூ[19] | த[8] | யை | கூ[27] | ❋ | நீ[13] | ர் | ❋ |
| யூ[23] | தே | யா | ந் | ❋ | லி | ன் | னா | கா[2] | ண |
| தி | ல் | ஊ[1] | சி[24] | யா[31] | ரோ | ல | சி | ஆ[2] | ம் |
| த் | க[32] | ❋ | ட் | வே | டு | ந[12] | ❋ | ள் | மு |
| து | த் | ப | ஆ[9] | லு | நா[17] | ன் | ம[7] | ரி | வா[10] |
| ❋ | வி | ரி | தெ[4] | வ[33] | ❋ | றி | ன | ❋ | கோ |
| ய | தூ[34] | ய் | மை | லி | வ[16] | ள | ம் | கொ[29] | ப[14] |
| ணி | க் | பொ[20] | ❋ | ஓ[30] | சா[22] | ❋ | ம[25] | லை | மா[5] |
| ப[06] | கி | ங் | ஓ[26] | ய் | வு | தோ | இ[11] | ர | வே |
| ழி | ண் | ப[15] | டை | க[3] | வ | ண் | பெ[28] | [illegible][18] | ❋ |

விவிலியக் குறுக்கெழுத்துப்போட்டி இல.123ற்கான முடிவுகளை 2012ம் ஆண்டு டிசம்பர் மாத மன்னாவில் எதிர்பாருங்கள்.

## அதிர்வுகள் ..... 10 ஆம் பக்கத் தொடர்ச்சி

சமாதானத்திற்கும் நல்லெண்ணத்துக்குமான குழுவினர் 24.08.2012 அன்று யப்பானிய சிறப்புத் தூதுவர் யசூசி அகாசியை யாழ் ஆயர் இல்லத்தில் சந்தித்தபோது இதே விடயத்தைச் சுட்டிகாட்டியுள்ளனர். "யுத்தம் முடிவடைந்து மூன்று வருடங்கள் முடிவடைந்துள்ளபோதிலும் தமிழ் மக்களின் அடிப்படை வாழ்வியலில் எள்ளளவும் முன்னேற்றம் ஏற்படவில்லை. மாறாக இராணுவப் பிரசன்னம் அதிகரித்து வருகின்றது. இதனால் அரசாங்கம் கூறும் சமாதானத்தின் பயனாக தமிழ் மக்கள் எதனையும் அனுபவிக்க முடியவில்லை" எனத் தெரிவித்தும் உள்ளனர்.

**ஐக்கியநாட்டு மனித உரிமைகள் பேரவையிலிருந்து!**

மீண்டும், ஐக்கிய நாட்டு மனித உரிமை அதிகாரிகள் யாழ். ஆயரையும் சமாதானத்திற்கும் நல்லெண்ணத்துக்குமான குழுவின் பிரதிநிதிகள் சிலரையும் 17.09.2012 அன்று யாழ். ஆயர் இல்லத்தில் சந்தித்துள்ளனர். இச்சந்திப்பில் மிக முக்கியமான விடயங்களை ஐக்கிய நாட்டு மனித உரிமை அதிகாரிகளிடம் இவர்கள் எடுத்துக்கூறி இருந்ததாக ஊடகங்கள் 18.09.2012இல் செய்தி வெளியிட்டுள்ளன.

**ஐக்கியநாட்டு மனித உரிமைகள் பேரவைக்கு!**

யாழ். ஆயரினதும் சமாதானத்துக்கும் நல்லெண்ணதுக்குமான குழுவினரதும் கருத்துக்களை வைத்துப் பார்க்கிறபோது ஒருசில முக்கிய விடயங்கள்பற்றி 'தமிழ்ச் சமூகமாக'ச் சேர்ந்து கரிசனை கொள்ளவேண்டி இருக்கிறது. 1. இராணுவ மயமாகின்ற நம் நிலங்கள் 2. அத்துமீறிய நில ஆக்கிரமிப்புக்கள் 3. அரசியல் தீர்வு குறித்து குறைந்தபட்ச அக்கறைகூடக் காட்டாத அரசின் நிலை போன்றவைகளைப் பற்றி நாம் தொடர்ந்து சிந்திக்கவும் இவற்றை எதிர்கொள்ள செயல்திட்டங்களை வகுத்து உடனடியாகச் செயற்படவும் வேண்டியுள்ளது. உதாரணமாக இவ்வாண்டு இறுதிப்பகுதியில் அல்லது அடுத்தாண்டு முற்பகுதியில் ஜெனிவாவில் நடைபெறயிருக்கும் ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவைக்கு 'வடகிழக்குத் தமிழர்களாகிய எங்களின் இன்றையநிலை' என்ற தலைப்பில் அறிக்கை தயாரித்து ஒரு கையெழுத்து வேட்டையே நடத்தி ஐக்கிய நாட்டு மனித உரிமைகள் பேரவைக்கும் சர்வதேசத்திற்கும் உண்மையைப் புரியவைக்கக்கூடிய வாய்ப்பிருக்கிறது. மேலும் ஐக்கிய நாட்டு மனித உரிமைப் பேரவையின் ஆணையாளர் நவநீதம்பிள்ளை இலங்கைக்கு இவ்வாண்டின் இறுதிப்பகுதியில் விஜயம் செய்யும் சந்தர்ப்பத்தில் இதனை நேரில் கையளிக்கக்கூடிய வாய்ப்பும் இருக்கிறது. அத்துடன் முள்ளிவாய்க்கால் தொடர்பான சர்வதேச நீதி விசாரணையையும், காணாமல் போனோர், அரசியல் சிறைக்கைதிகள் போன்றோரின் நீதிவிசாரணைகளையும் ஆரம்பிக்கக்கோரி சர்வதேச மட்டத்தில் வலியுறுத்த முடியும்.

**செயற்பட இதுதான் நேரம், செய்வோமா?**

இக்கையெழுத்து வேட்டையில், எம்மத்தியில் உள்ள சர்வமதத் தலைவர்கள், ஆயர்கள், கோவில் (Temple) – தேவாலய (Church) குருக்கள், புத்திஜீவிகள், பல்கலைக்கழகப் பேராசிரியர்கள் - விரிவுரையாளர்கள், வைத்தியர்கள், பொது அமைப்புகளின் - சங்கங்களின் - சாமாசங்களின் - நிறுவனங்களின் பிரதிநிதிகள், ஆசிரிய சமூகத்தினர், சட்டத்துறையினர், பொதுமக்கள் என அத்தனை பேரையும் இணைத்துக்கொள்வது மிக முக்கியமானது. 'சம்பளத்தைக் கூட்டு' என்று மாதக்கணக்கில் எதிர்ப்புத் தெரிவித்து, பகிஸ்கரிப்புச் செய்து, தொழிற் சங்க நடவடிக்கையில் ஈடுபடும் நம் பேராசிரியத் திலகங்கள், மேற்சொன்ன ஆக்கபூர்வமான செயற்பாடு போன்றவற்றிலும் ஆர்வத்தோடு ஈடுபடலாம் அல்லவா!... இப்போது கேள்வி எதுவெனில், யார் மணிகட்டுவார்கள்? மனித உரிமைப் பணிகளில் ஈடுபடும் நம் பணியகங்கள் ஆயினும் இப்பேர்பட்ட காத்திரமான விடயங்களை முன்னெடுத்துச் செயலில் குதிக்கலாமே? செயல்பட இது நேரம், செய்வோமா?

(தொடர்ந்து அ...தி....ரு.....ம்......)

## மன்னாவுக்கு பணம் அனுப்பும் விபரம்

வங்கியின் பெயர் : Hatton National Bank Ltd, Mannar
பணம் பெறுபவர் பெயர் : The Editor, MANNA
வங்கிக் கணக்கு இலக்கம் : S/A No. 020020029782

## தயவுசெய்து அவதானியுங்கள்

நீத்தார் நினைவுப் பகுதியில் உங்கள் அன்புக்குரியவர்களின் நினைவுகளைப் பிரசுரிக்க விரும்புகின்றவர்கள் எந்த மாதத்தில் இந்த நினைவுகள் பிரசுரிக்கப்படவேண்டுமோ அந்த மாதத்திற்கு முதல் மாதம் 10ம் திகதிக்கு முன்னர் அனைத்து விபரங்களையும் எம்மிடம் ஒப்படைக்க வேண்டும் என்பதை அன்போடு நினைவுபடுத்துகின்றோம்.

**கட்டண விபரம்**
கறுப்பு வெள்ளை 4,500/= கலர் 7,500/=

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நீங்காத நினைவுகள்

## 04ம் ஆண்டு நினைவு 12ம் ஆண்டு நினைவு 08ம் ஆண்டு நினைவு







**திரு. அ. சீமான்**
(சித்தவைத்தியர், சமாதான நீதவான்)
கலாபூசணம் (வஞ்சியன்குளம்)

மலர்வு :- 10 - 04 - 1936
உதிர்வு :- 29 - 11 - 2008

**திருமதி. சீமான் செபமாலை**
(வஞ்சியன்குளம்)

மலர்வு :- 01 - 11 - 1940
உதிர்வு :- 21 - 11 - 2000

**திரு. சீமான் அந்தோனி**
(வஞ்சியன்குளம்)

மலர்வு :- 02 - 02 - 1962
உதிர்வு :- 16 - 05 - 2004

"ஆண்டவர் தம் அன்பர்களின் மரணம் அவரது பார்வையில் மிக மதிப்புக்குரியது"

சீவியத்தில் உங்களை நேசித்தோம் மரணத்திலும் உங்களை மறவோம். அன்பின் உறைவிடங்களே! பாசத்தின் ஒளி விளக்குகளே! ஆலமரம்போல் ஆயிரம் உறவுகளை வழிநடத்திய எம் பாசதீபங்களே! பாசமுடன் எம்மை எல்லாம் வளர்த்தீர்களே! சமூகத்தில் நல்ல சேவையாளர்களாய் திகழ்ந்து உலகு போற்றும் வண்ணம் வாழ்ந்தீர்களே! மறக்க முடியுமா? உங்கள் அன்பை! நோய்வடிவில் காலன் உங்கள் மூவரையும் கவர்ந்திட்டானே, பாசம் எல்லாம் எம்மீது சொரிந்தபோதும் பிள்ளைகள் எங்களுக்கு விடைகூறாமல் நீங்கள் மூவரும் விடைபெற்ற மாயமென்ன? நான்கல்ல, பன்னிரெண்டல்ல, எட்டல்ல, ஆயிரம் ஆண்டுகள் சென்றாலும் ஆறுமா எங்கள் நெஞ்சம்! நித்தம் நித்தம் உங்களை எண்ணி வேதனையில் விம்மி அழும் நெஞ்சங்கள் ஒவ்வொரு நொடியும் உங்கள் ஆன்ம சாந்திக்காக இறைவனை வேண்டுகின்றோம்.

*உங்கள் பிரிவால் துயருறும் :- மகள், மருமகன், மருமகள், பேரப்பிள்ளைகள், உற்றார் உறவினர்கள்.*

தகவல் :- மகள் சீ. செபஸ்ரியம்மா.

## 03ம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு 09 05 1952



உதிர்வு 17 11 2009

**மோசேஸ் மொத்தம் தர்மதாசன்**
(இறப்பு, பிறப்பு, விவாகப் பதிவாளர்,
சமாதான நீதவான்)

குடும்பத்தின் குல விளக்கே
காற்றாய் வந்த காலனவன்
உம்மை எம்மிடம் இருந்து
பிரித்து இன்றோடு மூன்றாண்டு!
எத்தனை ஆண்டுகள் சென்றாலும்
நீங்காத உம் நினைவோடு உமது
ஆன்ம சாந்திக்காய் இறைவனிடம்
தினமும் மன்றாடும் உம் அன்பு உறவுகள்

*உம் பிரிவால் துயருறும் :-*
*மனைவி, மக்கள், பேரப்பிள்ளைகள்.*

## 12ம் ஆண்டு நினைவு 03ம் ஆண்டு நினைவு 02ம் ஆண்டு நினைவு







**திருமதி. யேசுதாசன் பூஜினியா**

மலர்வு :- 10 - 03 - 1966
உதிர்வு :- 04 - 11 - 2000

**செல்வி. செறின் நிருஷா யேசுதாசன்**
**(கன்னாட்டி, அடம்பன்.)**

மலர்வு :- 22 - 04 - 1989
உதிர்வு :- 06 - 05 - 2009

**திருமதி. கஸ்பார் விக்றோறியா**

மலர்வு :- 06 - 05 - 1945
உதிர்வு :- 07 - 04 - 2010

அன்பின் இறைவா, இவ்வுலகத்திலே பிறந்து யேசுவின் இனிய நாமத்திலே நல் உறவுப்பொக்கிசங்களாக எம்மோடு வாழ்ந்து, எம்மைவிட்டு இறைவனிடம் சென்ற எம் அன்பு உறவுகளை உம் பாதம் தருகின்றோம். இவ்வுலக வாழ்வினிலே இவர்கள் அறியாமல் செய்த பாவங்களை மன்னித்து நித்திய பேரின்பத்தில் சமாதானமாய் இளைப்பாற உம்மை இரந்து வேண்டுகின்றோம்.

*உங்கள் பிரிவால் துயருறும் : ஆ. யேசுதாசன் (கிராம சேவையாளர்) குடும்பத்தினர்.*

## 05ம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு 10 04 1928



உதிர்வு 06 11 2007

**திருமதி அற்புதம் சவிரிமுத்து**
(ஓய்வுபெற்ற தலைமை ஆசிரியர். புத்திரன்கண்டான். முருங்கன்.

*"சீவியத்தில் நேசித்தோம் - அம்மா*
*மரணத்திலும் உங்களை மறவோம்"*

உங்களைப் பிரிந்து ஐந்து ஆண்டுகள். நீங்கள் இல்லை என்பது இன்னும்கூட நினைவில் இல்லையே அம்மா. ஏதாவது தெரியவில்லை என்றால் அம்மாவிடம் கேட்போம் என்று நினைத்து, அம்மா இல்லையே என்பது பின்புதான் நினைவுக்கு வருகிறது. வகுப்பறையில் மட்டுமா எங்களுக்குக் கற்பித்தீர்கள்? இருந்தும் இல்லாததுபோல் வாழ்கின்ற எளிமையான வாழ்வை உங்கள் வாழ்க்கை - யாலும் எங்களுக்குச் கற்பித்தீர்கள். நன்றி அம்மா! நீங்கள் எங்களுக்குச் செய்த எல்லா நன்மைகளுக்கும் நன்றி! அமைதியில் நீங்கள் இளைப்பாற எங்கள் நன்றி நிறைந்த செபங்களை காணிக்கை ஆக்குகின்றோம்.

*பிரிவால் துயருறும் :- பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளை ஆர்த்தி*

தகவல் :- மகள் செ. நவறோஸ் (குஞ்சு)

## 07ம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு 10 10 1934



உதிர்வு 08 11 2005

**திருமதி பேதுரு செபமணி அருளம்மா**
(முருங்கன் பிட்டி, முருங்கன்)

*"நீதியின் ஆன்மாக்கள்*
*கடவுளின் கரங்களில்*
*உள்ளன: வேதனைகள்*
*அவர்களைத் தீண்டாது"*

பாசத்தின் உறைவிடமாய்,
நேசத்தின் இலக்கணமாய்
காலமெல்லாம் எங்களை
உங்கள் அன்புச்
சிறகுகளுக்குள் வைத்துக்
காத்து வழிநடத்திய அன்பு
அம்மா! நீங்கள் எங்களுடன்
வாழ்ந்த காலத்தின்
நினைவலைகள்
எங்கள் இதயச் சுவர்களில்
அழியாத கோலங்களாக
நிழலாடும் தாயே!

*உம் பிரிவால் துயருறும் :-*
*கணவன், பிள்ளைகள்.*
*மருமக்கள், பேரப்பிள்ளைகள்,*
*உற்றார், உறவினர்.*

## 06ம் ஆண்டு 06 மாத நினைவஞ்சலி





**வ. யேசுரத்தினம்** **பிறிசில்லா ராசமலர்**
**(பெற்றா. மன்னார்.)**

மலர்வு :- 08 - 12 - 1929
உதிர்வு :- 07 - 11 - 2006

மலர்வு :- 28 - 08 - 1926
உதிர்வு :- 15 - 04 - 2012

*இனி அவர்கள் சாகமுடியாது -*
*அவர்கள் வானதூதரைப்போல்*
*இருப்பார்கள். உயிர்த்தெழுந்த*
*மக்களாய் இருப்பதால்*
*அவர்கள் கடவுளின் மக்களே.*
*(லூக்கா 20:36)*

ஆயிரம் உறவுகள் வந்தாலும்
அது அன்னை தந்தைக்கு
ஈடாகுமோ? உலகமே ஒன்றாகி
வந்தாலும் உங்கள் உன்னத
அன்பிற்கு ஈடாகுமோ?
எத்தனை ஆண்டுகள் ஆனாலும்
எங்கள் நெஞ்சங்களில் என்றுமே
வாழ்வீர்கள்.

*நீங்கா நினைவுகளுடன்: -*
**பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், உற்றார், உறவினர்கள்**

தகவல் :- Dr. ரதனி யூட்
(மகள்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இணைபிரியா இல்லற வாழ்வில் 35 வது ஆண்டுகள் நிறைவு



**திரு. திருமதி ஜேம்ஸ் கோல்ட்டன் ஜசிந்தா**
(கரப்பன் காடு. வவுனியா.)
(1977.11.07 – 2012.11.07)

கையோடு கை சேர்த்து
இதயங்கள் இரண்டும் இணைந்து
மண விழாக் கண்டு
மனதை மணத்தால் அரவணைத்து
முப்பத்தைந்து ஆண்டுகள்
காணும் நீங்கள்
இன்பம் மட்டும் கூட்டி
இதய இராகம் மீட்டி - எந்த
நிலையின் போதும் மாறா
அன்பை மட்டும் ஊட்டி
வாழ வேண்டும் நீங்கள்
வாழ்த்துகின்றோம் நாங்கள்!

பிள்ளைகள், மருமகள், பேரப்பிள்ளைகள்.

## இணைபிரியா இல்லற வாழ்வில் 50 வது ஆண்டுகள் நிறைவு



**திரு. திருமதி. ஜோசப் சவினம்மா**
(பனங்கட்டுக்கொட்டு கிழக்கு. மன்னார்.)
(1962.10.17 – 2012.10.17)

இல்லறம் என்னும் நல்லறத்தில்
ஐம்பது ஆண்டுகள் பயணித்தீர்.
இணைபிரியாமல் வாழ்ந்து
இயேசுவின் வழியில் நடந்திட்டீர்.
இனிய புதல்வரைப் பெற்று
இன்முகத்தோடு வாழ்கின்றீர்.
ஆண்டவன் அடியினைப் போற்றி
அகல் விளக்காக ஒளிர்கின்றீர்.
உடல் உள ஆன்ம நலம் பெற்று
உவகை மிக்க உள்ளத்துடன்
இன்னும் பல்லாண்டு வாழ்கவென
வாழ்த்துகின்றோம் உம் பிள்ளைகள் நாம்!

வாழ்த்துவோர்: பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள். உற்றார், உறவினர், நண்பர்கள்.

## இணைபிரியா இல்லற வாழ்வில் 50 வது ஆண்டுகள் நிறைவு



**திரு. திருமதி. அந்தோனிப்பிள்ளை புஸ்பம்**
(பள்ளங்கோட்டை. நானாட்டான்)
(1962.10.17 – 2012.10.17)

இன்ப ஊற்றாம் இறைவனால்
அருளிய இல்லற வாழ்வில்
ஐம்பது வருடங்களைக் கடந்து
இன்பங்கள் பலகோடி கண்டு மகிழ்ந்து
நன்றியுணர்வுடன் இறைவன் பணிக்கென
அருட்பணி. எட்வேட் ஜெயபாலனை
(O.F.M) அர்ப்பணித்து
இதுவரை காலமும் கரம்பிடித்து
வழிநடத்திய இறைவனை
இருகரம் கூப்பி வணங்கி
தொடர்ந்தும் நீங்கள்
இகத்தினில் செழித்திட
வாழ்த்தி நிற்கும்,

மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்

## மட்டக்களப்பு புதிய ஆயர் பொன்னையா ஜோசப் பதவியேற்பு வைபவம்








புதிதாக உருவாக்கப்பட்ட மட்டக்களப்பு மறைமாவட்டத்தின் முதல் ஆயராக மேதகு பொன்னையா ஜோசப் ஆண்டகை அவர்களின் பணியேற்பு வைபவம் கடந்த செப்ரம்பர் 23ஆம் திகதி இடம்பெற்றது. அன்றைய நாளின் பதிவுகள் சில இங்கே தரப்படுகின்றன.

புதிய பணிப்பொறுப்பை ஏற்றுள்ள மேதகு பொன்னையா ஜோசப் ஆண்டகை அவர்களுக்கு மன்னார் மறைமாவட்டம் தனது செபங்களையும் வாழ்த்துக்களையும் தெரிவித்து நிற்கின்றது.

## மன்னார் மறைமாவட்ட இளைஞர் பணிக்குழுவின் ஏற்பாட்டில் இடம்பெற்ற இளைஞர் கலைவிழா 2012





மன்னார் மறைமாவட்ட இளைஞர் பணிகள் ஆணைக்குழுவினால் ஒழுங்குசெய்யப்பட்ட இளைஞர் கலைவிழாவானது கடந்த ஒக்ரோபர் மாதம் 7ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 5.30 மணிக்கு வேப்பங்குளம் பங்கின் புனித சூசையப்பர் ஆலய முன்றலில் இடம்பெற்றது. அனேக பங்குகளில் இருந்து இளைஞர் யுவதிகள் கலைநிகழ்வுகளை அரங்கேற்றினர். கலைவிழாவை முன்னிட்டு நடாத்தப்பட்ட நாடக நடனப் போட்டிகளில் வெற்றிபெற்ற "இயேசுவின் தடம் பதித்து மானிட விடுதலை நோக்கி இளைய உள்ளங்கள்" என்ற தலைப்பிலான நாடகம் எல்லாவற்றிற்கும் முத்தாய்ப்பாய் அமைந்தது.

இதைவிட யாழ் மறை மாவட்டத்திலிருந்து வருகை தந்த கத்தோலிக்க இளைஞர்களின் 'கண்ணாடியில் பெய்யும் மழை' என்ற குறியீட்டு நாடகம் சிந்தனையைத் தூண்டுவதாக அமைந்திருந்தது.

(தொடர்ச்சி 5ஆம் பக்கம்)

## நீங்காத நினைவுகள்

### 01ம் ஆண்டு நினைவஞ்சலி



| மலர்வு | உதிர்வு |
|---|---|
| 03 | 08 |
| 03 | 11 |
| 1937 | 2011 |

**சூசைப்பிள்ளை மரியாம்பிள்ளை (சிற்றம்பலம்)**
(நானாட்டான்)

பல்லாண்டு எங்களையே பாசமுடன் வளர்த்துயர்ந்த
சொல்லாலே மகிழ்வூட்டித் தொல்லுலகில் கலைபயிற்றி
எல்லா வளத்துடனும் எம்மை நீர் வாழ வைத்து
வல்லவனாம் இயேசுபரன் வானகம் நீர் சென்றுவிட்டீர்.
கண்களில் நீர் வழிந்தோடக்
காலமெல்லாம் வருந்துகின்றோம்.
புண்ணாகு தெங்களுள்ளம்
புலம்பியழுதென்ன செய்வோம்?
மண்ணுலக வாழ்வை நீத்து
விண்ணுலகம் சென்றவும்மை
எண்ணியெண்ணி இறைவனிடம்
என்னாளும் வேண்டுகின்றோம்.

உம் பிரிவால் துயருறும்:-
மனைவி, மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org